விலை : 20.00
பக்கங்கள்:இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 23 செவ்வாய்க்கிழமை (07.03.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 078

# குற்றமிழைத்த படையினர் இலங்கையில் தப்பிப்பு!

## தண்டனை விலக்களிப்பு கலாசாரம் என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் சாடல்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் உள்ளிட்ட மோசமான மனிதஉரிமை மீறல் சம்பவங்களிலும், சித்திரவதைகளிலும் ஈடுபட்ட படையினர் தண்டனையிலிருந்து விலக்குப்பெறும் கலாசாரம் தொடர்ந்தும் நிலவுவதனால் அங்கு சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் தற்போதும் இடம்பெற்று வருவதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் குற்றஞ்சாட்டியுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க...

### யாழ்.சிறைக்கைதி நேற்று உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

பெருங்குடலில் பிணைப்பு ஏற்பட்டதன் காரணமாக யாழ்.சிறைச்சாலையில் இருந்த கைதி ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்றையதினம யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். யாழ்.திருநெல்வேலி ஆலடிவீதியை சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான தங்கராசா ஸ்ரீகணநாதன் (வயது 65)

23ஆம் பக்கம்

### வட்டுக்கோட்டையில் நேற்று வாள்வெட்டு!

#### சகோதரர்கள் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

விளையாட்டு மைதானத்தில் ஏற்பட்ட பிரச்சினை ஒன்றின் காரணமாக சகோதரர்களான இரு குடும்பஸ்தர்கள் மீது 20 பேர் கொண்ட குழுவொன்று வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் வட்டுக்கோட்டை மூளாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் காயமடைந்த குடும்பஸ்தர்கள் இருவரும் சிகிச்சைக்காக

23ஆம் பக்கம் பார்க்க...

### இளம்பெண் மீது கூட்டு வல்லுறவு

### இரு குற்றவாளிகளுக்கு 10 ஆண்டு கடூழியச் சிறை

#### மூன்றாம் நபருக்கு பகிரங்க பிடிவிறாந்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நெல்லியடி பகுதியில் இளம் பெண் ஒருவரை கூட்டு பாலியல் வல்லுறவு புரிந்த வழக்கின் எதிரிகள் இருவருக்க தலா 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனையும், தலா 10 லட்சம் ரூபாய் நட்ட ஈடும் விதித்து தீர்ப்பளித்த யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், நட்டஈடு செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் 10 ஆண்டுகள் சிறைத் தணடனை அனுபவிக்க வேண்டும என வும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முள்ளிவெளி என்ற இடத்தில் கடந்த 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ஆம் திகதி தனது காதலனுடன் இருந்த இளம் பெண்ணை மூன்று பேர் சேர்ந்து,

24ஆம் பக்கம் பார்க்க...

### ஜனாதிபதி மைத்திரி இந்தோனேசியாவிற்கு நேற்று பயணமானார்

(ஜகார்த்தா)


இந்து சமுத்திர பிராந்தியத்தின் அரச தலைவர்கள் உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்தோனேசியாவிற்கு பயணமான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று பகல் ஜகார்த்தாவில் உள்ள Soekarno Hatta சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்தார்.

இந்தோனேசியா அரசின் சார்பாக அந்நாட்டின் பொதுப் பணிகள்

23ஆம் பக்கம் பார்க்க...

### இராணுவத்தின் வசமுள்ள காணிகளை விடுவியுங்கள்

#### ஜனாதிபதிக்கு சம்பந்தன் கடிதம்



(கொழும்பு)

வடமாகாணத்தில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் வலியுறு

23ஆம் பக்கம் பார்க்க...

### ஊறணி பகுதியில் 28.81 ஏக்கர் காணி ஏப்.10 விடுவிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் கட்டுப்பாடடுக்குள் இருந்த வலி.வடக்கு ஊறணி கடற்கரைப்பிரதேசத்தை அண்டிய பொதுமக்களின் ஒரு பகுதி நிலப்பரப்பான 28.81 ஏக்கர் காணி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி விடுவிக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சினால் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனுக்கு கடிதம்

23ஆம் பக்கம் பார்க்க...

### வலி.வடக்கு காணிகள் நிரந்தரமாக கபளீகரம்

### முகாம் மக்களுக்கு வேறு பகுதியில் வீடுகளை அமைக்கிறது இராணுவம்

(யாழ்ப்பாண்ம்)

வலி.வடக்கில் மக்களுடைய காணிகளை நிரந்தரமாக கபளீகரம செய்வதற்கு மேலும் 200 வீடுகளை அமைத்து அங்கு முகாம் மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளில் இராணுவம் ஈடுபட்டு வருகின்றது. இந்த நடவடிக்கையின் மூலம் மீள்குடியேற்றம் பூர்த்தி செய்யப்பட்டு விட்டதாக வெளியுலகத்திற்கு காண்பித்து ஏற்கெனவே தங்களது கட்டுப்பாட்டில் உள்ள மக்களுடைய காணிகளை அபகரிக்கும் சூழ்ச்சியில் இராணுவம் தற்போது இறங்கியுள்ளது.

கீரிமலையில் உள்ள காணி ஒன்றில் நூறு வீடுகளை அமைத்து, அதற்கு நல்லிணக்கபுரம் என பெயரும் சூட்டி நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த 100 குடும்பங்களை அங்கு

23ஆம் பக்கம் பார்க்க...

### தொற்று நோய்கள் தாக்கம் அதிகரிப்பு

#### எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

காலநிலை மாற்றங்களால் தொற்றுநோய்களின் தாக்கம் அதிகரித்துள்ள காரணத்தால் பொதுமக்கள், வைத்தியசாலை விடுதியில் உள்ள நோயாளரைப் பார்வையிடுவதற்கு வருவதை இயன்ற அளவு தவிர்த்துக் கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலை பணிபாளர் எஸ்.சத்தியமூர்த்தி வேண்டு

23ஆம் பக்கம் பார்க்க...

### ஹர்த்தால் தவிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு பிலவுக்குடியிருப்பு மக்களின் 30 நாள் தொடர் போராட்டத்தை அடுத்து, அந்த மக்களின் நிலங்களை விடுவிப்பதாக ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படாத பட்சத்தில் வடக்குக் கிழக்கு தழுவிய ஹர்த்தால் போராட்டத்தை

23ஆம் பக்கம் பார்க்க...

### கடற்படை துப்பாக்கி சூடு; இந்திய மீனவர் மரணம்

(சென்னை)

தமிழகம் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மீனவர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் நேற்றிரவு கச்சதீவு அருகே இந்திய கடல் எல்லையில் மீன் பிடித்துக்கொண்டிருந்த

23ஆம் பக்கம் பார்க்க...


காந்தக் குரல் அமரர் S.G. சாந்தனுக்கு சமர்ப்பணமாக
பூநகரி மண்ணுக்கு அவர் பாடிய பாடலின்
இறுவெட்டு வெளியீட்டு விழா
அரச பூங்கா கலைவிழாவில் சரவணப்பொய்கை ட்ரஸ்ட் தயாரிப்பில் திருஞானப்வன் அவர்களின் கவி வரிகளில் தென்னிந்திய இசையமைப்பாளர் அக்னி கணேஷ் அவர்களின் இசையமைப்பில் பூநகரி மண் மீது காந்தக்குரல் S.G.சாந்தன் அவர்களின் பாடலுடன் கூடிய "பூநகரியின் புகழ்மாலை -2" இன் இறுவெட்டு வெளியீட்டு விழா மார்ச் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கனடா கந்தசுவாமி கோவில் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.
சரவணப்பொய்கை ட்ரஸ்ட்
(C-7743)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இணையத்தளம் மூலமாக வரி அனுமதிப்பத்திரம் பெறல்

## கரவெட்டியில் நேற்று அங்குரார்ப்பணம்



வட மாகாணத்தில் உள்ள சகல வாகனங்களிற்கும் இணையதளம் மூலமாக வரி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் நடைமுறை கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வட மாகாண போக்குவரத்துத் திணைக்களம் மோட்டார் திணைக்களத்தின் சிபார்சின் அடிப்படையில் உற்பத்தித் திறனாக்கல் போட்டியில் வெற்றி பெற்ற கரவெட்டிப் பிரதேச செயலகம் தெரிவு செய்யப்பட்டு இவ் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது

இவ் அங்குரார்ப்பண நிகழ்வில் கரவெட்டிப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் எஸ்.ராஜிவ், கணக்காய்வாளர், மோட்டார் போக்குவரத்து திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் திருமதி ஜே.செல்வராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (செ -60)

# வாகன விபத்தில் பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

வீதியால் பயணித்த துவிச்சக்கரவண்டி மீது பின்னால் வந்த பட்டா ரக வாகனம் மோதியதில் இளம் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ்.அராலி வீதி பொம்மைவெளிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த அதே பகுதியைச் சேர்ந்த பிரதீபன் தெனியா (வயது 26) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே படுகாயமடைந்தவராவார்.

இந்த விபத்து தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-30)

# வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரல்

ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கீழ்க்குறிப்பிட்ட பாடங்களில் பட்டத்தினைப் பூர்த்தி செய்த ஆண், பெண் பட்டதாரிகள் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தங்கள் விண்ணப்பங்களை 15.03.2017க்கு முன்பதாக தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**பாடங்கள்**

வரலாறு, விஞ்ஞானம், ஆங்கிலம், புவியியல், விளையாட்டு, தமிழ்

குறிப்பு:

- ஆறுமாத காலத்திற்கு தகுதிகாண் காலத்துள் வைக்கப்படுவர் அதன் பின்பே நிரந்தரமாக்கப்படுவர்
- இல்லத்தில் தங்கியிருந்து கல்வி பயிற்றுவித்தல் வேண்டும்.
- உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.
- சம்பளம்

இரண்டாம் வகுப்பு உயர் சித்தி ரூபாய் 22000

சாதாரண சித்தி ரூபாய் 18000 மும் மாதாந்தம் வழங்கப்படும்.

◆ கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எந்த பதவிக்கான விண்ணப்பம் என்பதைத் தவறாது குறிப்பிட்டு சகல சான்றுப் பத்திரங்களின் நிழற்பிரதிகளுடன் எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் கிராமசேவையாளர், உதவி அரச அதிபர் குணநல நற்சான்றிதழ் வேறு இரு பிரமுகர்களது நற்சான்றிதழின் பிரதி இணைக்க வேண்டும்.

**அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :**

**தி.இராசநாயகம், தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**
**தொலைபேசி இல: 077 060 4950, 021 492 3118**
**மின்னஞ்சல் முகவரி :** rasa46@yahoo.com,
mahadevaswamikalchildrenhome@gmail.com

(சி-7744)

# 3 இராணுவத்தினருக்கும் நீதிபதி நன்றி தெரிவிப்பு

கூட்டு பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பெண்ணை காப்பாற்றியதுடன் குற்றவாளிகளை கண்டுபிடிக்க உதவிய மூன்று இராணுவத்தினருக்கும் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் விசேட நன்றிகளை தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முள்ளிவெளி என்ற இடத்தில் கடந்த 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7 ஆம் திகதி தனது காதலனுடன் இருந்த இளம் பெண்ணை மூன்று பேர் சேர்ந்து, கூட்டுப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியிருந்தனர்.

இந்தக் குற்றச்செயல் இடம்பெற்றதை அறிந்த இராணுவ வீரர்களான எச்.எம்.ஏ. எஸ்.எம்.ஹேரத், ரத்நாயக்க மற்றும் திலிப் குமார ஆகிய மூவரும் அப்பகுதியில் துரிதமாகச் செயற்பட்டு பாதிக்கப்பட்ட பெண்ணை மீட்டு உடனடியாக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்ததுடன் குற்றவாளிகளை கைது செய்ய உதவியிருந்தனர்.


மேற்படி வழக்கின் விசாரணைகள் முடிவுற்ற நிலையில் குறித்த வழக்கின் தீர்ப்பு யாழ்.நீதிமன்றால் நேற்றைய தினம் வழங்கப்பட்டது. வழக்கின் தீர்ப்பினை வாசிக்கும் போதே நீதிபதி தனது நன்றியை இராணுவத்தினருக்கு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிவில் பொலிஸார் செய்ய வேண்டிய செயற்பாட்டை இராணுவம் செய்தமையையிட்டு விசேடவிதமாக எனது நன்றியை செலுத்த வேண்டும். அதாவது சம்பவ இடத்தில் கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டையின் துணையுடன் 24 மணித்தியாலத்துக்குள் எதிரியை கைது செய்ய நடவடிக்கை எடுத்தமைக்கும் வழக்கு விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய 3 இராணுவத்தினருக்கும் நன்றியை தெரிவிப்பதுடன்,

48 மணித்தியாலத்துக்குள் இரண்டு எதிரிகளையும் கைது செய்து வழக்கினை மிக விரைவில் முடிப்பதற்கு உதவிய பொலிஸாருக்கும் இந்த வழக்கை துரிதமாக விசாரணை செய்த மாவட்ட நீதவானுக்கும் பாராட்டுக்களைத் தெரிவிப்பதாக நீதிபதி மா. இளஞ்செழியன் குறிப்பிட்டிருந்தார். (செ-9)

# ஆட்டோ - மோ.சைக்கிள் விபத்து; இளைஞன் படுகாயம்





வவுனியா பூங்கா வீதியில் உள்ள வவுனியா நகரசபை முன்பாக முச்சக்கர வண்டியும், மோட்டார் சைக்கிளும் நேரெதிராக மோதுண்ட விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் படுகாயமடைந்த நிலையில், வீதியால் சென்ற பொது மக்களினால் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

வவுனியா, பூங்கா வீதியில் இருந்து வவுனியா நகரை நோக்கி பயணித்த முச்சக்கர வண்டியுடன், வவுனியா நகரப் பகுதியில் இருந்து பூங்கா வீதி ஊடாக எதிரே வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்துச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தோணிக்கல் பகுதியை சேர்ந்த எஸ்.மோகனரூபன் (வயது27) என்னும் இளைஞரே படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விபத்துக்குள்ளான வாகனங்களை மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-15)

# யா/கொக்குவில் இந்துக் கல்லூரிச் சமூகம்

## அறிவித்தல்

புதிய அதிபர் நியமனத்தின் முக்கியத்துவம் கருதி யா/கொக்குவில் இந்துக் கல்லூரிச் சமூகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அடையாள அறவழிப் போராட்டம் 06.03.2017 திங்கட்கிழமை காலை கல்லூரி வாயிலில் சுமுகமான முறையில் நடைபெற்றது.

கல்லூரி வளர்ச்சியில் அக்கறையுடையோர் என்ற அடிப்படையில் எமது கல்லூரிச் சமூகத்தினால் நேற்றையதினம் மாலை சம்பந்தப்பட்டவர்களுடன் மேற்கொண்ட நல்லிணக்க அடிப்படையிலான கலந்துரையாடல் ஒன்றின் தீர்வின் அடிப்படையிலும், பாடசாலையின் முதலாம் தவணைப் பரீட்சையை முன்னிட்டும், மாணவர்களது கல்வி நடவடிக்கையில் பாதிப்பு ஏற்படாவண்ணம் எமது அறவழிப்போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்துகின்றோம்.

எமது போராட்டத்திற்கு பங்களிப்புச் செய்த அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

**யா/கொக்குவில் இந்துக் கல்லூரிச் சமூகம்** (சி-7745)

# சிங்கள தேசத்தை பங்குபோட ஆதரவாக கை தூக்க முடியாது

## மகிந்த ராஜபக்ஷ ஆவேசம்



(கொழும்பு)

**சிங்கள தேசத்தை பங்குபோட முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றது எனவும் நாட்டை நேசிக்கும் நாம் எவ்வாறு நாட்டைத் துண்டாடும் நகர்வுகளுக்கு ஆதரவாக கை தூக்க முடியுமெனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆவேசமாக தெரிவித்துள்ளார்.**

அகலவத்தையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டைத் துண்டாடும் பௌத்தத்தை அழிக்கும் அரசியல் அமைப்பிற்கு எம்மால் எந்த சந்தர்ப்பத்திலும் கை தூக்க முடிந்தது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு துணை போகும் கொள்கையில் நாம் இணையமாட்டோம்.

எம்மை பழிவாங்கவும் தண்டிக்கவுமே இந்த ஆட்சியாளர்கள் முயற்சிக்கின்றனர். இன்று உருவாக்க முயற்சிக்கும் புதிய அரசியல் அமைப்பில் பௌத்த மதத்தை அழிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது.


சிங்கள தேசத்தை பங்கு போட முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கு எவ்வாறு நாம் இடமளிக்க முடியும். இந்த நாட்டை நேசிக்கும் நாம் எவ்வாறு நாட்டை துண்டாடும் நகர்வுகளுக்கு ஆதரவாக கை தூக்க முடியும்.

இந்த ஆட்சியாளர்களிடம் பழிவாங்கும் பண்பும் எம்மை தண்டிக்க வேண்டும் என்ற ஒரே எதிர்பார்ப்பும் மட்டுமே உள்ளது. இந்தப் பழிவாங்கும் தன்மைகளின் மூலமாக நாட்டை ஆட்சி செய்ய முயற்சிக்கின்றனர்.

இவர்கள் எந்த முயற்சிகளை முன்னெடுத்தாலும் எம்மைத் தண்டிக்க எமக்கு எதிராக எந்த குற்றங்களை சுமத்தினாலும் இவர்களால் அவற்றை நிரூபிக்க முடியாது.

எம்மை குற்றவாளிகள் ஊழல் மோசடிக்காரர்கள் என கூறிக்கொண்டு மக்களின் பணத்தை பூரணமாக கொள்ளையடித்துள்ளனர். மத்திய வங்கி கொள்ளைகள் மூட்டப்பட்டு வருகின்றது. நாட்டில் பிரிவினைவாதம் தலைதூக்கி வருகின்றது. ஊழல் மோசடிகள் ஆயுத கலாசாரம் பரவி வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## அம்பாந்தோட்டை துறைமுக விசாரணைக்கு ஜனாதிபதி ஆணைக்குழு அவசியம்-கம்மன்பில



மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு நியமித்தது போன்று அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பிலும் விசாரணை செய்ய ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார்.

பிவிதுரு ஹெல உறுமய மாட்சியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இங்கு கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு விற்பனை செய்யும் உடன்படிக்கை தொடர்பிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இதேவேளை, மத்திய வங்கி பிணை முறிகள் மோசடி தொடர்பாக விசாரணை இடம்பெற்று வருகின்ற நிலையில் மோசடி செய்யப்பட்ட பணத்தை நாட்டிலிருந்து வெளியேற்ற முற்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார். (இ-3)

## நோயாளிகள் தொடர்பான அறிக்கைகள் பரிசோதனை


### அமைச்சர் ராஜித பணிப்புரை

(கொழும்பு)

தனியார் வைத்தியசாலைகளில் தொற்றுநோய் காரணமாக அனுமதிக்கப்படும் நோயாளிகள் தொடர்பான அனைத்துத் தரவுகளும், சுகாதார அமைச்சுக்கு வழங்கப்பட வேண்டும் என, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். சுகாதார அமைச்சின் நிறுவனத் தலைவர்களுடன் நேற்று இடம்பெற்ற கூட்டத்திலேயே, அவர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார். மேலும், தனியார் வைத்தியசாலையின் ஒழுங்கு முறை கவுன்சில் ஊடாக, அனைத்துத் தனியார் வைத்தியசாலைகளுக்கும் இது தொடர்பான அறிவுறுத்தலை விடுக்குமாறும், அமைச்சர் பணித்துள்ளார்.

மேலும், இத்தகைய நோயாளிகள் தொடர்பான தகவல்கள் பெறப்படுமாக இருந்தால், வைரஸ் காய்ச்சலை அடையாளம் காணுதல், அதற்கான சிகிச்சை முறையை ஆரம்பித்தல் மற்றும் நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை இலகுவாக முன்னெடுக்கலாம் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-3)

## விமலின் விளக்கமறியல் நீடிப்பு



தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவின் விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 20ஆம் திகதி வரையில் அவரை விளக்கமறியலில்வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அரச வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில்,விமல் வீரவன்ச ஜனவரி மாதம் 10 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

இது குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். (இ-3)

## விசேட சுற்றுலா வலயம் மூலம் 15ஆயிரம் வேலை வாய்ப்புக்கள்

தப்போவ பகுதியிலிருந்து வில்பத்து வரை விசேட சுற்றுலா வலயம் ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.


இந்த திட்டத்தின் மூலம், 15 ஆயிரம் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள முடியும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டம் குறுகிய மற்றும் நீண்டகால திட்டங்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் என பாலித தெரிவித்துள்ளார்.

தப்போவ பொருளாதார வலயத்தின் மேம்பாட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட கவனம் செலுத்தி வருகின்றார் என்றும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## புஜாரா, ரகானே நிதானமான ஆட்டத்தால்

# அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்டில் இந்தியா 126 ஓட்டத்தால் முன்னிலை



பெங்களூருவில் நடைபெற்று வரும் 2-வது டெஸ்டில் புஜாரா, ரகானே ஆகியோரின் அபார ஆட்டத்தால் இந்தியா 126 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 2-வது டெஸ்ட் பெங்களூருவில் நடைபெற்று வருகிறது. நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட தீர்மானித்தது இந்தியா முதல் இன்னிங்சில் 189 ஓட்டங்கள் சேர்த்தது. நாதன் லயன் 8 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார். அதன்பின் முதல் இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலியா 276 ஓட்டங்கள் சேர்த்தது. ஜடேஜா 6 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

87 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையுடன் இந்தியா 3-வது இன்னிங்சை தொடங்கியது. முதல் இன்னிங்சில் 90 ஓட்டங்கள் குவித்த லோகேஷ் ராகுல் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 51 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த ஹோலி (15), ஜடேஜாவை (2) ஹசில்வுட் வெளியேற்ற, 120 ஓட்டங்கள் எடுப்பதற்குள் இந்தியா 4 விக்கெட்டுக்களை இழந்தது.

5-வது விக்கெட்டுக்கு புஜாராவுடன் ரகானே ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. முதல் மூன்று இன்னிங்சில் வெளிப்படுத்திய மோசமான ஆட்டத்தை மறந்து அணியை காப்பாற்றும் வகையில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.



புஜாரா 125 பந்துகளை சந்தித்து அரை சதம் அடித்தார். அவருடன் ரகானே சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த 3-வது நாள் ஆட்டம் முடியும் வரை மேலும் விக்கெட் ஏதும் இழக்காமல் பார்த்துக் கொண்டனர்.

நேற்றைய 3-வது நாள் ஆட்ட முடிவில் இந்தியா 3 விக்கெட் இழப்பிற்கு 213 ஓட்டங்கள் சேர்த்துள்ளது. புஜாரா 79 ஓட்டங்களுடனும், ரகானே 40 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். தற்போது வரை இந்தியா 126 ஓட்டங்கள் முன்னிலைப் பெற்றுள்ள நிலையில் போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

# மேற்கிந்திய தீவுகளை வீழ்த்தி தொடரை வென்றது இங்கிலாந்து



மேற்கிந்தியதீவுக்கு எதிரான 2-வது ஒரு நாள் போட்டியில் ஜோரூட், வோக்ஸ் சிறப்பான ஆட்டத்தால் இங்கிலாந்து அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் இங்கிலாந்து ஒருநாள் தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

மோர்கன் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி மேற்கிந்தியதீவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 3 ஒருநாள் போட்டித் தொடரில் முதல் ஆட்டத்தில் இங்கிலாந்து 45ஓட்டங்களால் வெற்றி பெற்று இருந்தது.

இரு அணிகள் மோதிய 2-வது ஒருநாள் போட்டி ஆண்டிகுவாலில் நேற்று முன்தினம் நடந்தது. முதலில் விளையாடிய மேற்கிந்திய தீவு அணி 47.5 ஓவர்களில் 224 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ஜேசன் முகமது 30 ஓட்டமும், கிரேக் பிராத்வெயிட் 42 ஓட்டமும் எடுத்தனர். பிரென்கெட் 3 விக்கெட்டும், ஸ்மவன்பின், ஆதில் ரஷீத் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினார்கள்.

226 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து விளையாடியது. 25-வது ஓவரில் 124 ஓட்டங்கள் எடுப்பதற்குள் இங்கிலாந்து அணி 6 விக்கெட்டை இழந்தது. இதனால் அந்த அணி தோல்வி அடையும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் 7-வது விக்கெட்டான ஜோரூட், வோக்ஸ் மிகவும் சிறப்பாக விளையாடி அணியை வெற்றி பெற வைத்தனர். இங்கிலாந்து அணி 48.2 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 226 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஜோரூட் 127 பந்தில் 90 ஓட்டமும் (3 பவுண்டரி), வோக்ஸ் 92 பந்தில் 68 ஓட்டமும் (5 பவுண்டரி, 2 சிக்சர்) எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தனர். ஆஸ்லேநர்ஸ் 3 விக்கெட்டும், தேவேந்திர பிஷா 2 விக்கெட்டும் எடுத்தனர்.

இந்த வெற்றி மூலம் இங்கிலாந்து ஒருநாள் தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. 3-வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி வருகிற 9-ம் திகதி பிரிட்ஜ்டவுனில் நடக்கிறது. (க)

## அஸ்வின் சாதனை



ஒரு ஆண்டுக்கான சீசனில் அதிக ஓவர் வீசி இருந்த அனில் கும்ப்ளேயின் சாதனையை ரவிசந்திரன் அஸ்வின் முறியடித்துள்ளார்.

ஒரு ஆண்டுக்கான சீசனில் அதிக ஓவர் வீசிய இந்திய பந்து வீச்சாளர் என்ற சாதனையை அஸ்வின் படைத்தார்.

ஒரு ஆண்டுக்கான சீசனில் அதிக ஓவர் வீசிய இந்திய பந்து வீச்சாளர் என்ற சாதனையை அஸ்வின் படைத்தார். அவர் 2016-17ல் (616.5) ஓவர் வீசியுள்ளார். இதற்கு முன்பு 2005-05 சீசனில் கும்ப்ளே 612.1 வீசி இருந்தார். இதை அஸ்வின் முந்தியுள்ளார்.

வோர்னரை நேற்று முன்தினம் அஸ்வின் ஆட்டமிழப்பு செய்தார். 8-வது முறையாக அவரது விக்கெட்டை அஸ்வின் கைப்பற்றினார். டெஸ்டில் அவர் அதிகமான முறை ஆட்டமிழப்பைச் செய்தவர் ஆவார். (க)

# பாகிஸ்தான் சூப்பர் லீக் பெஷாவர் அணி சம்பியன்





பாகிஸ்தான் சூப் பர் லீக் போட்டியில் டேரன் சமி தலைமையிலான பெஷாவர் அணி சம்பியன் பட்டம் பெற்றது.

பாகிஸ்தான் சூப்பர் லீக் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் லாகூர் கடாபி மைதானத்தில் நடந்தது. இதில் பெஷாவர் சல்மி - குயிட்டா கிளேடியேட்டர்ஸ் அணிகள் மோதின.

முதலில் விளையாடிய டேரன் சமி தலைமையிலான பெஷாவர் அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 148ஓட்டங்கள் எடுத்தது. கமரன் அக்மல் 40 ஓட்டமும் டாரன் சேமி 11 பந்தில் 28 ஓட்டமும் எடுத்தனர்.

பின்னர் விளையாடிய சர்பிராஸ் அகமது தலைமையிலான குயிட்டா கிளேடியேட்டர்ஸ் அணி 16.3 ஓவர்களில் 90 ஓட்டங்களில் சுருண்டது. இதனால் பெஷாவர் அணி 58 ஓட்ட வித்தியாசத்தில் வென்று சம்பியன் பட்டம் பெற்றது. (க)

# அரசாங்கம் சீனாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் பிரதி கம்மன்பிலவிடம்



அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு விற்பனை செய்வது தொடர்பான உடன்படிக்கையின் பிரதிகள் தேசப்பற்றுள்ள அதிகாரிகளின் ஊடாக தனக்கு கிடைத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். 74 பக்கங்களைக் கொண்ட இந்த உடன்படிக்கையின்படி நிர்மாணிப்பு செலவாக சீனா 80 வீதத்தை இலங்கைக்கு வழங்கும். எனினும் காணிக்காக சீனா பணத்தை வழங்காது.

இவ்விதமாக அம்பாந்தோட்டை துறைமுகத்துடன் கூடிய காணியை சீனாவுக்கு வழங்க அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவர் தரகுப் பணமாக 1.4 ட்ரில்லியன் பணத்தை பெற்றுக் கொண்டுள்ளதாகவும் உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவிற்கு விற்பனை செய்யப்படவில்லை எனவும் சைனா ஆபர் என்ற நிறுவனத்திற்கு 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அரசாங்கம் கூறியுள்ளது.

துறைமுகத்தின் மூலம் கிடைக்கும்வருவாயில்சைனா ஆபர் நிறுவனத்திற்கு 80 வீதமும் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு 20 வீதமும் கிடைக்கும். அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிக்க பெறப்பட்ட கடனை அடைப்பதற்காகவே துறைமுகத்தை குத்தகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-3)

# மகளிர் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வுப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பினால் பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுதல், சமத்துவம் மறுக்கப்படுதல், பாலியல் துன்புறுத்தல், உழைப்புக்கு ஏற்ற ஊதியம் வழங்கப்படாமை, பட்டதாரிகள் வேலை இன்மை, குடும்பப் பெண்கள்மீதுவன்முறைகள், கொலைகள் என்பவற்றுக்கு எதிராக தீர்வுகாண வலியுறுத்தி "பெண்கள் விழிப்புணர்வுப் போராட்டமும்பொதுக்கூட்டமும்நாளை புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் பிரதேசசபை அலுவலகத்திற்கு முன்பாகவுள்ள புத்தூர் சந்தியில் வனிதாமணி ஜெகதீஸ்வரன் தலைமையில் இடம்பெறும். (இ)

வலம்புரி விளம்பரத்தொடர்பு
021 221 7603
021 321 0815


## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நுணாவிலில் மட்டுவில் நுணாவில் எல்லை வீதியில் (ராசா கடை எதிர்ப்பக்க வீதி) A-9 வீதியில் இருந்து 500 மீற்றர் தொலைவில் உள்ள 3 பரப்பு காணியில் 90% கட்டி முடிக்கப்பட்ட குழாய்க் கிணற்றுடன் கூடிய காணி உடன் விற்பனைக்கு உள்ளது. வீடு 37X22 அடியும் தெற்கு வாசலும் உடையது. விருப்பமுள்ளோர் மட்டும் தொடர்பு கொள்ளவும். தரகர் தேவையில்லை.

உடன் தொடர்பு கொள்ளவும்.
ராஜன்-072 922 9424.

(சி-7742)

# ஆற்றில் மூழ்கி இளைஞன் பலி!



(கொழும்பு)

நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நானுஓயா கிளாசோ ஆற்றில் குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம்நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக நானு ஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

நானுஓயா கிளாசோ பிரதேசத்தில் அமைந்துள்ள ஆற்றுப் பகுதியில் தனியாக குளிக்கச் சென்றுள்ளார்.

இதன்போது நீராடிக் கொண்டிருக்கும் வேளையில் குறித்த இளைஞன் நீரில் மூழ்கியுள்ளான்.

குறித்தஇளைஞனை ஏனையவர்கள் காப்பாற்ற முயற்சித்த போதும் முயற்சி பயனளிக்காத நிலையில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான்.

நுவரெலியா ஒலிபன்ட் பகுதியைச் சேர்ந்த 18 வயதான சரவணகுமார் ஸ்ரீநாத் என்பவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் நானுஓயா பொலிஸார் மற்றும் பிரதேச வாசிகளோடு நுவரெலியா மாவட்ட கடற்படையினர் ஆகியோர் இணைந்து இளைஞனது சடலத்தை மீட்டுள்ளனர். (இ-7)

## TECHNICIAN தேவை/ பயிலுநர் தேவை

கொழும்பில் இயங்கி வரும் டிஷ் அன்டெனா/ கேபிள் டிவி உதிரிப்பாக விற்பனை/ பிட்டிங் மற்றும் REPAIR செய்யும் நிறுவனத்திற்கு கீழ்காணும் வெற்றிடம் உள்ளது. அனுபவமுள்ளோர் தொடர்பு கொள்ளவும்.

## டிஷ் அன்டெனா பிட்டிங் நன்கு செய்யத்தெரிந்த TECHNICIANS (சம்பளம் 30 000/- + கமிஷன் )

RECEIVER ரிப்பேர் செய்ய தெரிந்த TECHNICIANS (சம்பளம் 40 000/-வரை )

டிஷ் அன்டெனா பிட்டிங் பழக விருப்பமுடைய பயிலுநர் (சம்பளம் 20 000/- ) உணவு, தங்குமிடம் இலவசம். தொடர்பு கொள்ளவும்.

குமார்- 077 771 0785.

(சி-7742)

## Yarl Beauty & Language's Skills College

YBLSC



மகளிருக்கான பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

அழகுக்கலை
கேக் ஐசிங்
தையல்

சனி, ஞாயிறு பிரிவுகள் 11.03.2017 அன்று 10.00 மணிக்கு
கிழமை நாள் பிரிவுகள் 13.03.2017 அன்று 10.00 மணிக்கு

சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட NVQ பாடத்திட்டம் பின்பற்றப்படுவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

இல.17, 3ம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ராசி கலெக்சனுக்கு அருகில் உள்ள ஒழுங்கை)

(சி-7741)

# க.பொ.த.(உ.த) 2019 ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி க.பொ.த.(உ.த) 2019 மாணவர்களுக்கு புதிய பிரிவுகள் ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல் எதிர்வரும் 10.03.2017 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலுக்கு பெற்றோருடன் மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (இ)

# இராசி பலன்

07.03.2017
(மாசி 23, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு
தசமி பின்னிரவு 1.51 மணிவரை
திருவாதிரை முன்னிரவு 8.07 மணிவரை
சுபநேரம் 10.55-12.25 மணிவரை
இராகுகாலம் 3.25-4.55 மணிவரை
கல்கி பகவான் பிறந்த தினம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| புத சுக் | செவ் | | சந் |
| சூரி கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அனுசம், கேட்டை | | |
| | | | ராகு |
| | சனி | குரு | |

**மேடம்:** நீண்ட நாளைய பிணக்கொன்று இன்று நல்ல முடிவுக்குவரும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

**இடபம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், நிதிநிலை உயர்வடையும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பொது வாழ்வில் புகழ்கூடும்.

**மிதுனம்:** இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், குடும்பச் செலவுகளில் சிக்கனம்காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று ஏற்படலாம்.

**கடகம்:** அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தினர்களை அனுசரித்துச் செல்வீர்கள், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், சஞ்சலங்கள் கூடும்.

**சிம்மம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, செவிகுளரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கன்னி:** அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு, செல்வாக்கு மேலோங்கும் நாள், தொழில் விருத்தியுண்டு.

**துலாம்:** தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், கனிவாகப் பேசி காரியங்களை நிறைவேற்றுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

**விருச்சிகம்:** வரவும், செலவும் சமமாகும் நாள், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களில் அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**தனுசு:** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வியாபாரத்தை விரிபுபடுத்தும் எண்ணம் உருவாகும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், தனவரவு திருப்திதரும்.

**மகரம்:** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், உடல்நலன் சீராகும், மறைமுக எதிர்ப்புகள் மாறும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், கற்பனை மிகுதியான நாள்.

**மீனம்:** தொழில் ரீதியாக வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், எண்ணங்கள் எளிதில் கைகூடும், உடல் நலன் சீராகும்.

# நியமித்த அதிபரை தொடர்ந்தும் சேவையாற்ற அனுமதியுங்கள்

## கொக்குவிலில் நேற்றுக் கவனயீர்ப்பு



கொக்குவில் இந்துக்கல்லூரியில் புதிதாக நியமிக்கப்பட்ட அதிபரை தொடர்ந்தும் சேவையாற்ற அனுமதிக்க வேண்டும் என கோரி பாடசாலைச் சமூகத்தால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்றைய தினம் பாடசாலை முன்றலில் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பாடசாலையில் கடமையாற்றி வந்த முன்னாள் அதிபர் ஓய்வு பெற்றமையை தொடர்ந்து வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் 1AB பாடசாலைக்குரிய அதிபர் பதவி வெற்றிடத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதனடிப்படையில் புதிய அதிபராக நியமனம் பெற்ற பஞ்சாட்சரம் கணேசன் கடந்த 23 ஆம் திகதி தமது கடமைகளை பொறுப்பேற்றிருந்தார்.

இந்த நிலையில் வடமாகாண கல்வி அமைச்சால் குறித்த அதிபரை அந்த பதவியில் இருந்து விலகுமாறு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சின் இந்த முடிவை கண்டித்து நேற்றைய தினம் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பாமல் பெற்றோர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினரால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. (இ-9)

# நவீன இயந்திரத் தொகுதியைக்கொண்ட சுத்திகரிப்பு நிலையம் சாவகச்சேரியில்



(யாழ்ப்பாணம்)

மலக்கழிவுகளை சுத்திகரிப்பு செய்து அகற்றுவதற்கான நவீன இயந்திரத்தொகுதி கொண்ட நிலையம் அமைக்கும் பணிகள் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அண்மைய காலங்களில் மலக்கழிவுகளை முறையற்ற விதத்தில் அகற்றுவதினால் நிலக்கீழ் நீருடன் கலந்து பாரிய சுகாதார சீர்கேடுகள் ஏற்படுகின்றன.

இதனை தவிர்க்கும் முகமாக அகற்றப்படுகின்ற கழிவுகளை உரிய முறையில் சுத்திகரித்து வெளியேற்றுவதற்கான வேலைத்திட்டமே சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. மாவட்ட செயலகத்தின் விசேட வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி மூலம் சாவகச்சேரி நகராட்சி மன்ற பகுதிக்குள் பொருத்தமான இடம் தெரிவு செய்யப்பட்டு உள்ளூராட்சி திணைக்களத்தின் கண்காணிப்பில் குறித்த வேலை மேற்கொள்ளப்படுகின்றது.

மலக்கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு சுமார் 40 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. குறித்த நிலையம் செயற்பட ஆரம்பித்த பின்னர் மலக்கழிவுகளில் இருந்து நீர் சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படும்.

ஏனையவை எரித்து சாம்பலாக்கப்படும். மலக்கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படுவதால் ஏனைய உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் அகற்றப்படும் கழிவுகள் இங்கு சுத்திகரிக்க கொண்டு வருவதன் மூலம் சாவகச்சேரி நகராட்சி மன்றம் கணிசமான வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும். மேலும் 10 இற்கு மேற்பட்டவர்களிற்கு தொழில் வாய்ப்பை வழங்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-89)

# சமஷ்டியை கைவிடவில்லை

## சுமந்திரன் தெரிவிப்பு




(கரணவாய்)

சமஷ்டியை நாங்கள் கைவிடப் போவதில்லை. சமஷ்டி அடிப்படையிலே தான் எங்களிற்கான தீர்வு இருக்க வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருக்கின்றோம் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். இலங்கைத் தமிழரசுக் கட்சியில் புதிதாக அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வு நேற்று முன்தினம் பருத்தித்துறையில் உள்ள தமிழரசுக் கட்சி காரியாலயத்தில் மாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தன் தலைமையில் நடைபெற்ற போது சுமந்திரன்மேலும் தெரிவிக்கையில், சமஷ்டியைக் கைவிடவில்லை என்ன சொற்பதங்களைப் பாவிக்க வேண்டும் என்பதில் விட்டுக் கொடுப்புகளைச் செய்திருக்கிறோம்.

ஸ்பெயின் நாட்டிலே ஒற்றையாட்சி என எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கு நடப்பது சமஷ்டி ஆட்சி. ஆஸ்திரியாவிலே சமஷ்டி என எழுதப்பட்டுள்ளது. ஆனால் அங்கு நடப்பது ஒற்றையாட்சி. ஒற்றையாட்சி எல்லாவற்றிற்கும் காரணமான இருக்கிற பிரித்தானியாவிலே இருக்கிற அதிகாரப் பகிர்வை பார்த்தால் அங்கு சமஷ்டி ஆட்சியிலும் அப்படியான அதிகாரப்பகிர்வே கிடையாது. ஒற்றையாட்சிஎன்ற சொல்பாவிக்கப்பட்டால் பின்னர் வருகின்ற வரைவிலக்கணங்களிலேயே அது ஒற்றையாட்சி என்று மாறிவிடும் என்ற காரணத்தினாலே ஒற்றையாட்சிஎன்கின்ற சொல்லை பாவிக்காமல் இருப்பதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம். அரசமைப்பில் ஒற்றைாட்சி என்ற சொல் பாவிக்கப்படக்கூடாது. அப்படி பாவித்தால் அதில் ஆபத்திருக்கி றது. அதற்கு நாங்கள் இணங்க மாட்டோம். ஆனால் உள்ளடக்கத்தில் சமஷ்டி இருக்க வேண்டும். சமஷ்டி என்றால்மாநிலங்களிற்கு கொடுக்கப்படும் அதிகாரங்கள் முழுமையாகக் கொடுக்க வேண்டும். அதிலே மத்தி எவ்வித ஆதிக்கத்தினையும் செலுத்த முடியாததாக இருக்க வேண்டும்.

மற்றையது கொடுக்கப்பட்ட அதிகாரத்தை மாநிலத்தின் அனுமதியின்றி திரும்பப்பெற முடியாததாக இருக்க வேண்டும் என்பதே சமஷ்டி என்றுவிளக்கமளித்தார்.(இ-60)





தமிழ்த்தேசிய மாணவர் பேரவையின் முதலாவது தேசிய மாநாட்டை முன்னிட்டு "உதிரம் கொடுப்போம் உயிரை காப்போம்" எனும் தொனிப்பொருளில் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் யாழ்.நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாண கல்லூரியில் நடைபெற்றது. (படங்கள்:-சோபிகா)







யாழ். ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி அதிபர் வ.நந்தீஸ்வரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களது இடைவேளை நிகழ்வினையும் பிரதம விருந்தினர், சிறப்புவிருந்தினர் ஆகியோர் வெற்றிக்கிண்ணம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# இனக்கலவரங்களுக்கு இடமளிக்கமாட்டோம்

## ஜே.வி.பியின் தலைவர் அநுர கூறுகிறார்



பர்தாவை கழற்றுங்கள், முந்தானையை கழற்றுங்கள், சாறி அணியுங்கள் என்று நாட்டில் யாரையும் கட்டாயப்படுத்த முடியாது. இலங்கை மூன்று இனங்களுக்கும் உரித்தான நாடு. சம உரிமையினூடாக மாத்திரமே நாட்டின் முன்னேற்றம் சாத்தியமாகும். நாம் அரசியலில் இருக்கும்வரை சிறுபான்மையினருக்கு எதிரான இனக் கலவரங்களுக்கு இடமளிக்கமாட்டோம் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைமைகள் குறித்து நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த நீதி, நேர்மையான நாடு, நீதியான சமூகம், சுதந்திரமான மனிதன் என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுதந்திரத்தின் பின்னரான இலங்கையை நான்கு உயர் குலத்தினரே ஆட்சி செய்துள்ளனர். உயர் குலத்தினரிடையே இனவாதமில்லை. அவர்கள் இன முரண்பாடுகளையும் இனவாதத்தையும் தோற்றுவித்து அவர்களின் இருப்பை உறுதிசெய்து கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

விளையாட்டமைச்சின் டங்கன் வைட் கேட்போர் கூடத்தில் கடந்த சனியன்று இரவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

சுதந்திரத்தின் பின்னரான 70 ஆண்டுகளை நான்கு வலவுக் காரர்களே ஆண்டுள்ளனர். போத்தலே வலவ்வ, ஹொரகொல்ல வலவ்வ, கொள்ளுப்பிட்டிய வலவ்வ, மெதமுலன வலவ்வ ஆகியனவே அவை. அவர்கள் தமது இருப்புக்காக மக்களை ஒன்றுபட விடமாட்டார்கள். இனவாதத்தை பரப்பி அரசியல் இலாபம் தேடுகின்றனர்.

பொருளாதாரம் ஸ்திரமடையாது. நாட்டின் எந்த துறையும் முன்னேற்றமடைவது சாத்தியமில்லை. பொருளாதாரம் சீர்குலைந்த நிலையில் சமூக நீதியும், சமத்துவமும் மலராது. கடன் பெறுவதை பெரும் வெற்றியாக கருதும் தலைவர்களையே நாம் இதுவரை கண்டுள்ளோம். பெற்றுக்கொண்ட கடன்களுக்கு பயன்மிக்க வேலைகள் நடந்ததாகவும் இல்லை. நாட்டின் மொத்த கடன் தொகை எவ்வளவு என்று பிரதமருக்கும் தெரியாது. ஊழல் ஒழிக்க வந்த அரசிலும் ஊழல். இந்த அரசாங்கத்தையும் துரத்தியடிக்க வேண்டும். ஆனால் பழைய முறையில் துரத்தப்படுவதில் பயனில்லை.

மீண்டும் மகிந்தவே ஆட்சிக்கு வர முயற்சிக்கிறார். சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் மேலும் 50 வருடங்கள் ஆட்சி நடத்த வாய்ப்பளித்தாலும் நாடு இதே நிலையில்தான் இருக்கும். மக்களுடன் ஒன்றித்துள்ள கட்சியுடன் சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற மூவினத்தினதும் பெரும்பான்மையான மக்கள் ஒன்றுபட வேண்டும்.

நாம் இனவாதத்தை ஒரு போதும் ஆதரித்ததில்லை. இனியும் இனவாதத்துக்கு இடமளிக்கப்போவதில்லை. மொழி, மத உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். யாரையும் மதத்தின் பெயரால் வற்புறுத்தவும் முடியாது. யாருக்கும் பர்தாவை கழற்றும்படி கூறவும் முடியாது. பல கலாசார அம்சங்களே நாட்டுக்கு அழகு. ஒரு இனவாதத்துக்கு எதிராக இன்னோர் இனவாதத்தால் ஒற்றுமையை எதிர்பார்க்க முடியாது. இன வாதத்தால் இனவாதத்தை தோற்கடிக்கவும் முடியாது. ஆட்சி என்பது உயர் குலத்தில் இருந்து பொதுமக்கள் கைகளுக்கு வரவேண்டும். இனிமேலும் இனவாதம் தலை தூக்க விடமாட்டோம்.


இந்நிகழ்வில் கொழும்பு வர்த்தக சங்கத்தின் தலைவர் வை.எம்.இப்றாஹிம், மனோ தத்துவவியலாளர் எம்.இம்றான், முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்காவின் தலைவர் என்.எம்.அமீன், நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் நஜா முஹம்மத் உட்பட அரசியல், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட பெருந்திரளானோர்கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்கவுக்கு முஸ்லிம்கள் சார்பில் விசேட விருதொன்றும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (இ)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:O/L/சாரதி<br>தொ.இ: B/7048 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: செவ் 8 இல்<br>தகைமை/தொழில்:AL<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/7074 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:சிவில் பொறியியலாளர்<br>தொ.இ: B/7049 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: செவ் 12 இல்<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்முக்கியம்<br>தொ.இ: G/7075 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 10 சூரி செவ் 10 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc, MBA/ பொறியியலாளர்<br>தொ.இ: B/7050 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>தொ.இ: G/7077 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7051 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம்: 163cm<br>தகைமை/ தொழில்:MBBSபொறியியலாளர்<br>தொ.இ: G/7083 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

# குறைகேள் அரங்கு...

## இடை நிறுத்தப்பட்ட வருடாந்த இடமாற்றம்

யாழ்ப்பாண மாவட்டத்தினைச் சொந்த இடமாகவும் வெளி மாவட்டங்களில் கடந்த ஆறு (06) வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களாகிய நாங்கள் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் எமது குடும்பத்தினரைப் பிரிந்தும் கடமையாற்றி வருகின்றோம். எமது இடமாற்றம் தொடர்பாக பல வருடங்களாக விண்ணப்பித்திருந்தும் கடந்த 2015 ஆம் ஆண்டு சிலருக்கு இடமாற்றக் கட்டளைக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் யாழ்ப்பாண மாவட்டத்தினைச் சேர்ந்த பொதுச் சுகாதார பரிசோதகர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளைக் காரணம் காட்டி இடமாற்றக் கட்டளைகள் இரத்துச் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தினைச் சேர்ந்த பொதுச்சுகாதார பரிசோதகர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளைக் காரணம் காட்டி இடமாற்றச் சபையே கூட்டப்படவில்லை. எனினும் 2017 ஆம் ஆண்டிக்கான இடமாற்றக் கட்டளைக்கான கடிதங்கள் வழங்கப்பட்டதன் பின்னர் மீண்டும் யாழ்ப்பாண மாவட்டத்தினைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் தொழிச்சங்க நடவடிக்கைகளைக் காரணம் காட்டி எந்தவிதமான காரணங்களும் கூறப்படாது மீண்டும் வட மாகாண சுகாதார சுதேச வைத்தியத் துறை அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதிக்கு முன்பதாக முன்பு இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்காதவர்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறும் மீண்டும் இடமாற்ற சபை கூட்டப்பட்டு 01.03.2017 ஆம் திகதி முதல் இடமாற்றங்கள் அமுல்படுத்தப்படும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது.

கடந்த 14.02.2017 ஆம் திகதி வரையில் இடமாற்றங்கள் தொடர்பாக எவ்விதமான கட்டளைக் கடிதங்களும் எமக்குக் கிடைத்திருக்கவில்லை. இதன் காரணமாக நாங்கள் கடந்த 15.02.2017 ஆம் திகதி செயலாளரையும் அவரின் உதவிச் செயலாளரையும் வடமாகாண சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சரையும் நேரடியாகச் சந்தித்து எமது பிரச்சினைகள் தொடர்பாகக் கதைத்த போது அடுத்து வரும் ஓரிரு தினங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக எமக்கு அறிவுறுத்தப்பட்டது. எனினும் இவ் விடயங்கள் தொடர்பாக எமக்கு இதுவரையும் நம்பிக்கைகளை ஏற்படுத்தக் கூடியதான எவ்விதமான அறிவுறுத்தல்களும் வ்ழங்கப்படவில்லை.

எவ்வாறாயினும் கடந்த 26.02.2017 ஆம் திகதி சுகாதார அமைச்சர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் சில சுகாதார வைத்திய அதிகாரிகள் தமது பிரதேசங்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கடந்த பல வருட காலமாகக் கடமையிலிருப்பதனால் தற்போது மக்களுக்கான சிறப்பான சேவைகளை வழங்க முடியாதிருப்பதனால் அத்தகையவர்களை இடமாற்றம் செய்யுமாறும் அமைச்சரிடம் நேரடியாகக் கோரிக்கையும் விடுத்திருந்தனர். இதேநேரம் செயலாளரின் கடிதம் மூலம் மாவட்டங்களுக்குள் எவ்விதமான இடமாற்றம் தொடர்பாக நட்வடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் இடமாற்றம் வழங்கப்படவில்லை.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் எமது தனிப்பட்ட மனித உரிமைகள் மதிக்கப்படவில்லை என்ற நிலைப்பாட்டுக்கே நாம் தள்ளப்பட்டுள்ளோம். எனவே எமது மன ரீதியிலான உணர்வுகளைப் புரிந்து கொள்வதன் மூலம் எமக்கு இடமாற்றங்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு எமக்கு நீதி கிடைப்பதற்கு ஆவன செய்துதவுமாறும் மேலும் எமக்கான நியாயம் மறுக்கப்படுமானால் எமக்கான மனித உரிமைகள் தொடர்ந்தும் மீறப்படுவதாகவே கருதி எமக்கான நியாயம் கோரி நாம் அடுத்த கட்டத்துக்குச் செல்ல வேண்டிய கட்டாயமான துர்ப்பாக்கிய நிலைமைக்கு தள்ளப்படுகின்றோம் என்பதை மிகுந்த மன வருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள்.

# அடிப்படை வசதி கோரி பன்னங்கண்டி மக்களின் போராட்டம் 3 ஆவது நாளாகவும் தொடர்கின்றது





கிளிநொச்சி பன்னங்கண்டி மக்கள் முன்னெடுத்து வரும் அடிப்படை உரிமை போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தது.

நீண்டகாலமாக குடியிருக்கும் காணிகளுக்கான காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும், வீட்டுத்திட்டம், கழிப்பறை வசதி உள்ளிட்ட அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்து தரப்பட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை வலியுறுத்தி பன்னங்கண்டி மக்கள் குறித்த போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

1990 ஆம் ஆண்டு முதல் குறித்த பகுதியில் வாழ்ந்து வரும் 187 குடும்பங்களுக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்படாத நிலையில் நேற்று மூன்றாவது நாளாகவும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மத்தியவகுப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட குறித்த காணி உரிமையாளர்கள் நீண்ட காலமாக காணிகளை பராமரிக்காத நிலையில் மக்கள் குறித்த பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். காணி உரிமையாளர்கள் குறித்த காணியைக் கோரி வரும் நிலையில் அங்கு வசிக்கும் மக்களுக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி கொடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்நிலையிலேயே மக்கள் குறித்த போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (2-15)




வேளாண்மை அறுவடைக்கு முன்னர்

# கட்டாக்காலியாக திரியும் கால்நடைகளால் பயிரழிவைத் தினமும் சந்திக்கின்றோம்

## பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஆதங்கம்

பூநகரி பிரதேசத்தில் காலபோக வேளாண்மை 12 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கரில் விதைக்கப்பட்டு தற்பொழுது அறுவடை வேகமாக நடைபெற்று வருகின்றது.

இன்னும் நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் அறுவடை செய்யப்படாத நிலையில் தமது வயல் நிலையங்களை அறுவடை செய்தோர் மிகவும் பொறுப்பற்ற விதத்தில் தமது கால்நடைகளை கட்டாக்காலிகளாக திறந்து விட்டுள்ளமையால் அறுவடை செய்யாத நெல் வயல்களினுள் அவைநுழைவதால் அழிக்கப்படுவதாகவும் இது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்குமாறும் மட்டுவில் நாடு கமக்கார அமைப்பின் நிர்வாகச் செயலாளர் செ.யசுதரன் கமநலசேவை நிலைய உத்தியோகத்தரிடம் கோரிக்கை விட்டுள்ளார்.

கிளிநொச்சிமாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத் தீர்மானத்தின்படியும் பூநகரி கமநலச் சேவை நிலைய தீர்மானத்தின்படியும் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை கால்நடைகளை கட்டாக் காலிகளாகத்திறந்து விடாது கட்டிவளர்க்க வேண்டுமென்ற தீர்மானத்திற்கு மாறாக பொறுப்பற்ற விதமாக கால்நடை உரிமையாளர்கள் செயற்பட்டு வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கூடுதலான பணத்தைக் கொடுத்து முன்னதாகவே அறுவடை செய்ய வசதியில்லாத வறுமைக்கோட்டின் கீழ் வாழும் விவசாயிகள் பெரும் பாதிப்பிற்குள்ளாவதாகவும் கட்டாக்காலி கால்நடைகளால் அழிவைச் சந்திப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-84)

# அனுமதிப்பத்திரமின்றி ஆற்று மணல் ஏற்றி பயணித்த இரண்டு டிப்பர்கள் கைப்பற்று

## சந்தேகத்தின் பேரில் சாரதிகள் கைது

கிளிநொச்சி / முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ், கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் ரொசான் ராஜபக்ஷவின் நேரடி வழிநடத்தலின் கீழ் உள்ள "விசேட முறியடிப்பு பொலிஸ் படைப் பிரிவினால்" தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள கல்லாறுக் கிராமத்தில் அனுமதிப் பத்திரமின்றி ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த 2 டிப்பர் வாகனங்களை கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் இருவரையும் கைது செய்து தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

விசேட முறியடிப்பு பொலிஸ் படைப்பிரிவிற்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, விசேட முறியடிப்பு படைப் பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர், கருணாரத்தினம் ஜெசிந்தன் தலைமையிலான பொலிஸார் திடீரென முற்றுகையிட்டு அனுமதிப் பத்திரமின்றி 2 டிப்பர் வாகனங்களை ஆற்று மணலுடன் கைப்பற்றியுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் இரண்டு பேரையும் கைது செய்து மேலதிக விசாரணைகளுக்காக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்கள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2- 15)

இரண்டு வாரங்களைக் கடந்து

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் 15வது நாளாகவும் தொடர்கின்றது






கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளது போராட்டம் நேற்றுடன் 15ஆவது நாளாக இரண்டு வாரங்களைக் கடந்து தொடர்கின்றது.

இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலான தகவல்கள் வெளியிடப்பட வேண்டும், அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் உள்ளிட்ட அம்சங்களை வலியுறுத்தி கடந்த மாதம் 20ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்புப் போராட்டம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கண்ணீருடன் தொடர்கின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்டுவரும் உறவு மீட்பு போராட்டத்திற்கு பொது அமைப்புக்கள் ஆதரவு வழங்கி வரும் நிலையில், இரவு-பகலாக மக்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப் போராட்டத்திற்கு இளைஞர் கழகங்கள், மாணவர்கள், பொது அமைப்புகள், முதியவர்கள், சிறுவர்கள் எனப் பல தரப்பினரும் ஆதரவு வழங்கி வருகின்றனர். (2-15)

11 ஆவது நாள்

# சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு வவுனியாவில் நேற்றும் முன்னெடுப்பு



(குருமன்காடு)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டு வரும் அகிம்சை ரீதியிலான சுழற்சி முறையிலான உணவுத்தவிர்ப்பு போராட்டம் நேற்று திங்கட்கிழமை 11 ஆவது நாளாகவும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக ஏ-9 வீதியின் அருகில் கடந்த 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு தபால் மூலமாக தமது போராட்டம் தொடர்பில் கவனயீர்ப்பு செய்யும் வகையில் இப் போராட்டத்தை ஆரம்பித்து நேற்று திங்கட்கிழமை 8 ஆவது நாளாகவும் முன்னெடுத்துள்ளனர்.

நேற்று முன் தினத்தில் இருந்து தினமும் ஆயிரம் தபால்களை அனுப்பும்பணியை இன, மத, மொழி வேறுபாடுகள் இன்றி அனைவரும் இணைந்து மேற்கொண்டு அனுப்பி வைத்து வருகின்றனர். (2-250-15)

# பூநகரி பேருந்து நிலையத்தில் நேரக் கண்காணிப்பாளரின்றி அவதி

## சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுப்பார்களா?

பூநகரி பிரதான சந்தைத் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய இடங்களில் இருந்து வரும் சகல பேருந்துகளும் தரித்துச் செல்வது வழமையாகும். இந் நிலையத்தில் நேரக் கண்காணிப்பாளர் நியமிக்கப்படாமையால் பல சிரமங்களை பொது மக்கள் எதிர்கொள்வதாக பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன்.

யாழ்.பேருந்து நிலையத்தில் காலை 5 மணியில் இருந்து பிற்பகல் 6.15 மணி வரை 14 இ.போ.ச. பேருந்துகளும் 10 இற்கு மேற்பட்ட தனியார் பேருந்துகளும் தினசரி கிளிநொச்சியில் இருந்து 7 இ.போ.ச. பேருந்துகளும் தனியார் பேருந்துகளும் வந்து செல்லும் பூநகரி பேருந்து நிலையத்தில் நேரக் கண்காணிப்பாளர் நியமிக்கப்படாமையால் பல்வேறு இடர்களை சந்திப்பதாக பொது மக்கள், சாரதிகள், நடத்துநர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆதலால் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர், சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பில் கூடிய கவனமெடுத்து நேரக் கண்காணிப்பாளரை நியமிக்க ஆவன செய்ய வேண்டுமென கோரிக்கை விடப்படுகின்றது. (2-84)

## கிளிநொச்சி வைத்தியசாலையில் 21 நாட்களில்

# 244 பேருக்கு பன்றிக்காய்ச்சல் நோய் தொற்றுக்குள்ளாகியிருக்கலாமென சிகிச்சை

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பன்றிக்காய்ச்சல் எனப்படும் எச்1 என்1 இன்புளுவென்சா நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகியிருந்த முதலாவது குழந்தை கண்டுபிடிக்கப்பட்ட தினமான 10.02.2017 தொடக்கம் 03.03.2017 வரையான 21 நாட்களில் 244 பொதுமக்கள் எச்1 என்1 இன்புளுவென்சா




நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் கிளிநொச்சி மற்றும் அயல் மாவட்டங்களைச் சார்ந்தவர்களாவர்.

இவர்களுள் 25 கர்ப்பவதிகள், 9 சிறுவர்கள் ஆகியோர் உள்ளடங்கலாக 37 பொதுமக்கள் எச்1 என்1 இன்புளுவென்சா நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகி உள்ளமை கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

திருநகர், புதுமுறிப்பு, தருமபுரம், முரசுமோட்டை, வேரவில், உதயநகர், கனகாம்பிகைக்குளம், மலையாளபுரம், இராமநாதபுரம், கிருஸ்ணபுரம், சாந்தபுரம், புளியம்பொக்கணை, திருவையாறு, செல்வாநகர், வட்டக்கச்சி, முகமாலை, கல்மடுநகர், புன்னைநீராவி, புலோப்பளை ஆகிய இடங்களில் இருந்து பன்றிக்காய்ச்சல் தொற்றிற்கு உள்ளான நிலையில் கர்ப்பவதிகள் இனங்காணப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

கண்டாவளை, விவேகானந்தநகர், ஸ்கந்தபுரம், கல்மடுநகர், உமையாள்புரம். இராமநாதபுரம் ஆகிய இடங்களிலிருந்து 12 வயதிற்குக் குறைவான குழந்தைகள் பன்றிக்காய்ச்சல் தொற்றிற்கு உள்ளான நிலையில் இனங்காணப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

உதயநகர் மேற்கு, புதுமுறிப்பு, கல்மடுநகர், திருவையாறு ஆகிய இடங்களில் ஒன்றிற்கு மேற்பட்ட கர்ப்பவதிகள் பன்றிக்காய்ச்சல் தொற்றிற்கு உள்ளான நிலையில் இனங்காணப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் பொது இடங்களில் ஒரேநேரத்தில் சந்தித்திருப்பது எமது ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. உதாரணமாக ஒருகிராமத்தில் இரு கர்ப்பவதிகள் மரண வீடு ஒன்றில் சந்தித்துள்ளனர். இவர்களில் ஒருவர் மூலம் மற்றையவரும் பன்றிக்காய்ச்சல் தொற்றிற்கு இலக்காகியுள்ளார்.

எனவே அடுத்துவரும் இரண்டு வாரங்களுக்காவது கர்ப்பவதிகள் பொதுமக்கள் கூடும் இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்வதன் மூலம் பன்றிக்காய்ச்சல் தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம்.

எந்தவொரு கர்ப்பவதிக்கோ அல்லது பிரசவித்த தாயாருக்கோ காய்ச்சல் ஏற்படின், உடனடியாக காய்ச்சல் ஏற்பட்ட முதலாவது நாளிலேயே அவர் அருகில் உள்ள அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டும். இதுவரை பன்றிக்காய்ச்சல் தொற்றுடன் இனங்காணப்பட்ட அனைத்துக் கர்ப்பவதிகளும் காய்ச்சல் ஏற்பட்ட தினத்திலேயே அருகில் உள்ள அரச வைத்தியசாலைக்கு சென்றமையால் தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டு குணமடைந்துள்ளனர்.

ஆகவே கிளிநொச்சி மாவட்டத்தில் எந்தவொரு கர்ப்பவதியோ அல்லது பிரசவத்தின் பின்னரான தாயாரோ காய்ச்சல் ஏற்பட்டவுடன் அருகிலுள்ள அரச வைத்தியசாலையை நாடவும். மேலதிக விபரங்களுக்கு உங்களது குடும்பநல உத்தியோகத்தரையோ அல்லது பொதுச்சுகாதார பரிசோதகரையோ நாடவும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (2-312-15)

## தனியார் பேருந்துகளின் சாரதிகள், நடத்துநர்களை உள்ளடக்கி சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது



(குருமன்காடு)


வவுனியா தனியார் பேருந்துகளில் பணியாற்றும் சாரதிகள், நடத்துநர்களை உள்ளடக்கிய சங்கமொன்று நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வவுனியா தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் கீழ் செயற்படும் வகையில் சாரதி, நடத்துநர்களின் நலனை மேம்படுத்தும் நோக்கோடு உருவாக்கப்பட்டுள்ள இச் சங்கமானது வடக்கு மாகாணத்தில் முதன் முதலாக உருவாக்கப் பட்டுளளது.

தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் வவுனியா மாவட்ட தலைவர் எஸ்.ரி. இராஜேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் குறித்த சங்கத்திற்கான புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது

இந் நிலையில் சாரதி, நடத்துநர்களின் நடத்தை மற்றும் தனியார் பேருந்துகளின் செயற்பாடுகள் தொடர்பாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் இதன்போது விளக்கமளித்திருந்தார்.

இதனையடுத்து வவுனியா தனியார் பேருந்து சாரதி, நடத்துநர் சங்கத்தின் தலைவராக செல்வரட்னம் தவேந்திரன், செயலாளராக எம்.மயூரன், பொருளாளராக தெய்வேந்திரன் ஜெகதீஸ்வரன், உப தலைவராக கந்தசாமி நிரஞ்சன், உப செயலாளராக அமிர்தலிங்கம் சுதர்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் நிர்வாக உறுப்பினர்களாக எவ். என். கசன், புஸ்பராஜா சிவானந்தன், டபிள்யூ. ஏ. காமினி, ஏ.எம். இர்சாட் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் ஆலோசகராக சிவலோக மூர்த்தியும் தெரிவானார். (2-250)



கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட தருமபுரம் மத்திய கல்லூரிக்கு பாண்ட் வாத்திய கருவிகளும் இளம் தாரகை விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்களும் புளொட் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தனினால் அவரது பன்முகப்படுத்தப்பட்ட (2016) வரவு- செலவு நிதியிலிருந்து அண்மையில் கண்டாவளை பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை கண்டாவளை பிரதேச செயலகம் மேற்கொண்டிருந்தது.

## வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பூப்பந்து விளையாட்டுத் திடல் திறந்து வைப்பு



இலங்கை ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் 07 மில்லியன் ரூபா நிதி அனுசரணையுடன் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட பூப்பந்து விளையாட்டுத்திடல் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு கடந்த 4 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் கு.அகிலேந்திரன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

'இந்தப் பூப்பந்து விளையாட்டுத் தளத்தை ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் ஸ்தாபகர் சட்டத்தரணி எஸ்.சி. சந்திரகாஷனினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் த.திரேஸ்குமார், இலங்கைக்கான ஓபர் நிறுவனத்தின் பணிப்பாளர் சூரியகுமாரி, வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, வெளிநோயாளர் பிரிவு வைத்தியர் சுரேந்திரன், வைத்தியர்கள்,தாதிய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர். (செ-15)

## மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள்

தமிழ் விருட்சம் அமைப்பினால் வவுனியா மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட குடும்பத் தலைவர்களைக் கொண்ட பெண் தலைமைத்துவக்குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு அண்மையில் தமிழ் விருட்சம் அமைப்பின் வவுனியாவில் உள்ள தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது இராணுவத் திடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை கொண்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் இருந்து முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமாரினால் மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (2-15)

## பேடன் பவல் பிரபுவின் 160 ஆவது பிறந்ததினத்தையொட்டி இரத்ததானம்



(மல்லாவி )

வவுனியா மாவட்டத்தில் சாரணர் அமைப்பின் ஸ்தாபகர் பேடன் பவல் பிரபு வின் 160 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி செயலகம் மற்றும் வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளின் திரி சாரணர்களின் ஒழுங்கமைப்பில் இரத்ததான முகாமொன்று நடைபெற்றுள்ளதாக ஜனாதிபதி சாரணர் மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர் த.நிகேதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் வ/இலங்கை திருச்சபை தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வவுனியா சாரணர் மாவட்ட ஆணையாளர் எம். எஸ்.பத்மநாதன், உதவி மாவட்ட ஆணையாளர்களான கு.கமலகுமார், வ.ஜதீஸ்கரன் மற்றும் உதவி மாவட்ட ஆணையாளரும், ஜனாதிபதி சாரணர் மன்றத்தின் செயலாளருமான சு.காண்டீபன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி சாரணர் மன்றத்தின் உப தலைவர் அ.அனந்தன், ஜனாதிபதி சாரணர் மன்றத்தின் பொருளாளரும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினருமான ஸ்ரீ.கேசவன், ஜனாதிபதி சாரணர் மன்றத்தின் உப செயலாளர் வ.பிரதீபன் மற்றும் உறுப்பினர்களான அ.அனோஜன், வி.சஜீவ்நாத், பி.கேர்சோன், திரி சாரணர் கு.நிதர்சன் மற்றும் சாரணர்களுடன் பெருமளவான இளைஞர்களும் இரத்ததான நிகழ்வில் கலந்து கொண்டு இரத்ததானம் செய்துள்ளனர். (2-15)

# சிறையில் சசி நடத்தும் குடும்ப பஞ்சாயத்து



அமைச்சர்கள் விசிட் அடித்து திரும்பியுள்ள நிலையில், சசிகலாவின் சொந்த பந்தங்களில் முக்கியமானவர்களின் சந்திப்பு ஒன்று பரப்பன அக்ரஹார சிறையில் வெகுவிரைவில் நடக்கப்போகிறது என்கிறது போயஸ்கார்டன் வட்டாரம்.

பரப்பன அக்ரஹார சிறையில் உள்ளதங்களது செல்லை விட்டு வெளியே வரும்போது மட்டும் சிறைச்சாலை உடையான நீலநிற போர்டர் போட்ட வெள்ளை நிறச்சேலை அணியும் சசிகலாவும் இளவரசியும் அங்குள்ள மரத்தடியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள் என சிறைக்கைதிகளுக்கு சிகிச்சையளிக்கும் டாக்டர் ஒருவர் தெரிவித்தார்.

பெங்களூர் சிறையில் உள்ள கைதிகளில் எய்ட்ஸ் நோய் உள்ளிட்ட பல பாதிப்புக்குள்ளான கைதிகளும் இருக்கிறார்கள். அங்கு எல்லா வகை நோய்களுக்குமான சிகிச்சைகள் தரப்படுகின்றன. சசிகலாவையும் இளவரசியையும் வழக்கமான உடல் பரிசோதனைகளுக்கு உட்படுத்திய வேளையில் தான் அமைச்சர்கள் வந்த தகவலை சசிகலாவிடம் சிறைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் எனக்குறிப்பிடாமல் சீனிவாசன், ராஜு, காமராஜ், செங்கோட்டையன் ஆகிய நான்கு பேர் பார்க்க வந்திருக்கிறார்கள் என சிறைத்துறை அதிகாரிகள் சொல்லும்போது மணி 1.50. சசிகலா பார்க்கும்போது மணி 2.15. 25 நிமிட நேர சந்திப்பை முடித்து விட்டு அமைச்சர்கள் 2.40 இற்கு வெளியே வந்து விட்டார்கள் என்கிறது சிறைத்துறை வட்டாரம்.

அமைச்சர்கள் போன பிறகு சசிகலாவை போயஸ் கார்டனில் வேலை பார்த்த ராஜு என்கிற வேலைக்காரரும் மற்றும் சசிகலா, ஜெயலலிதா ஆகிய இருவருக்கும் தனிப்பட்ட வேலைகளை செய்யும் இரண்டு பணிப்பெண்களும் சந்தித்தனர். சசிகலாவின் உதவிக்காக சிறையையொட்டிய தமிழர் பகுதியான நாகாபுரத்தில் ஒரு அபார்ட்மென்டில் தங்க வைக்கப்பட்டுள்ள இவர்களிடம் பேசிய அளவுக்குக்கூட அமைச்சர்களிடம் சசிகலா பேசவில்லை என்கிறார்கள் சிறைத்துறை ஊழியர்கள்.

பெங்களூர் கமிஷனர் என். எம். ரெட்டியிடம் அவரது சகோதரரும் சென்னை சட்டத்தரணியுமான மற்றொரு ரெட்டி மூலம் பேசி சிறைத்துறை அதிகாரிகளை சரிக்கட்டி சந்திப்புக்களை எளிமையாக்கியுள்ளனர். சசிகலாவைச் சந்தித்தபோது பூ மற்றும் பழங்களை எடுத்து வந்தனர் அமைச்சர்கள்.

டி.டி.வி.தினகரன் வழிகாட்டுதலின்படி எடப்பாடி பழனிச்சாமி எப்படிச் சிறப்பாகச் செயற்படுகிறார் என சசிகலாவிடம் விளக்கினார்கள். அவர்களிடம் தளவாய் சுந்தரம்தான் அமைச்சரவைக்கும் டி.டி.வி. தினகரனுக்கும் தூதுவராகச் செயற்படுகிறாரா? எனச் சிரித்துக்கொண்டே கேட்ட சசிகலா, தனக்கு சென்னையில் நடக்கும் அனைத்தும் தெரியும் என்பதைக் காட்டினார் என்கிறது அமைச்சர்கள் வட்டாரம்.


தளவாய்சுந்தரம் மூலம் டி.டி.வி.தினகரனுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட நபர் ஒருவர் அமைச்சர்களின் அறைகளுக்குச் சென்றுவந்து கொண்டிருக்கிறார். விலையுயர்ந்த ஆடி காரில் வந்திறங்கும் அந்த நபர் சில வருடங்களுக்கு முன்பு சாதாரண மோட்டார் சைக்கிளில் வந்தவராம். தத்தம் விசுவநாதனின் மகன் அமரிடம் நெருக்கமான பிறகு இந்தோனேசியாவில் உள்ள நிலக்கரி சுரங்கங்களுக்கு சென்னை தேனாம்பேட்டையில் உள்ள நட்சத்திர ஹோட்டலுக்கும் பங்குதாரர் ஆகிவிட்டார். தற்பொழுது தளவாய் மூலம் தினகரனுக்கும் நெருக்கமாகி எடப்பாடி பதவியேற்கும் விழாவில் இரண்டாவது வரிசையில் சீற்றையும் பிடித்துவிட்டார். அவர் ஓ.பி.எஸ். அணியில் உள்ள நத்தத்திற்காக அ.தி.மு.க்வில் எம்.எல்.ஏக்களை உடைக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார். பாருங்கள் தினகரனின் கூட்டணியை என நடராஜன் தரப்பும் திவாகரன் தரப்பும் சசிகலாவிடம் புகார் செய்துள்ளன. அதை மனதில் வைத்துத்தான் சசிகலா தளவாய் பெயரை உச்சரித்தார் என்கிறது அ.தி.மு.க. வட்டாரம்.

தினகரனும் நடராஜன், திவாகரன் இரண்டு பேரும் தஞ்சையில் நடந்த விழாவில் பா.ஜ.கவை எதிர்த்துப் பேசாமல் இருந்திருந்தால் மோடி கோபப்பட்டிருக்கமாட்டார். ஓ.பி.எஸ். மூலமாக கட்சியை உடைத்திருக்கமாட்டார். நடராஜனும் திவாகரனும்தான் சொத்துக்குவிப்பு வழக்கைப் பார்த்துக் கொண்டார்கள். மோடியைக் கோபப்படுத்தாமல் அவரது பகையைத் தேடாமல் இருந்திருந்தால் நீங்கள் சிறைக்கு சென்றிருக்கமாட்டீர்கள் என சசியிடம் இருவரையும் போட்டுக் கொடுத்திருக்கிறார்.

துணைப் பொதுச்செயலாளர் பதவி என்பது நியமனப் பதவி. அந்தப் பதவியேற்கும் விழாவை ஒரு பெரிய விழாவாக நடத்தி ஜெ.ஸ்டைலில் அ.தி.மு.க. தலைமையகத்தின் மாடியில் நின்று கைகாட்டியிருக்கிறார் தினகரன். நாங்கள் சசிகலாவின் ஆரம்ப காலத்திலிருந்தே உடன் நின்றவர்கள். நாங்கள் சசிகலா சிறைக்குப் போக எப்படிக் காரணமாவோம் என தினகரன் பற்றிய புகார்களை சசிக்கு மூன்றாவது நபர் மூலம் சொல்லியிருக்கிறது நடராஜன், திவாகரன் தரப்பு. அந்தப் புகார் படலத்தை சரிக்கட்டத்தான் அமைச்சர்களை அனுப்பியிருக்கிறார் தினகரன் என்கிறது போயஸ் கார்டனின் வட்டாரம்.

சிறையிலுள்ள அதிகாரிகளின் தொலைபேசி, கைதிகளிடமுள்ள தொலைபேசி, தன்னிடம் உள்ள தொலைபேசி என மூன்றுவிதமான போன்களில் பேசும் சசி உங்களுக்குள் நீங்கள் அடித்துக் கொள்வது எனக்குச் செய்யும் துரோகம். அடுத்த வாரம் சிறைக்கு வாருங்கள் என தினகரன், நடராஜன், திவாகரன் ஆகிய மூவரையும் அழைத்துள்ளாராம்.

குடும்ப அதிகார பஞ்சாயத்து விரைவில் சிறையில் நடக்கப் போகிறது என்கிறது போயஸ்கார்டன் தரப்பு.



# கண்ணீர் விட்ட பன்னீர்

ஜெயலலிதா பிறந்த நாள் அன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பை வெளியிடுவதாக முன்னாள் முதல்வரான ஓ.பன்னீர் செல்வமும், ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபாவும் வாக்குறுதி கொடுத்திருந்தனர். சொன்னபடி அதே நாளில், 'எம்.ஜி.ஆர் அம்மா தீபா பேரவையைத் தொடங்கிவிட்டதாக அறிவித்தார் தீபா. ஆனால், ஓ.பன்னீர்செல்வம்?

காலையிலேயே ஓ.பி.எஸ் வீட்டில் ஊடகங்கள் குவிந்துவிட்டன. காலை 7 மணிக்கெல்லாம் பளிச் வேட்டி - சட்டையுடன் சிரிப்பும் கும்பிடுமாய் ஆதரவாளர்களின் அரவணைப்பில் திணறிக் கொண்டிருந்தார் ஓ.பன்னீர்செல்வம். "அண்ணே, இன்னிக்கு ரெண்டுல ஒண்ணு பாத்திடணும்'' என்று குரல் கொடுத்தவர்களை உதட்டில் கைவைத்து அமைதி காக்கச் சொன்னார். ஆதரவாளர்கள் கொண்டு வந்த சால்வைகளையும், மாலைகளையும் வாங்கி வைப்பதற்கென்றே தனியாக இரண்டு பேர் இருந்தனர். பன்னீர் முகத்தில் இருந்த மகிழ்ச்சியைப் பார்த்த ஊடகத்தினர், "அந்த முக்கிய அறிவிப்பை சொல்லுங்கள் சேர்" என்றதும், உடனிருந்தவர்கள் "அம்மாவின் தொகுதியான ஆர்.கே.நகரில் வைத்துத்தான் அண்ணன் சொல்வார்" என்றனர்.

நண்பகல் பன்னிரண்டு மணியைக் கடந்ததும் ஆர்.கே. நகர் நோக்கி ஓ.பன்னீர்செல்வம் கார் பயணமானது. அவரது காரைப் பின்தொடர்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள் அணிவகுத்தன. ஓ.பன்னீர்செல்வம் அணியில் அன்றுதான் இணைந்த நடிகை பாத்திமா பாபு, முன்னாள் எம்.எல்.ஏக்கள், மாவட்டச் செயலாளர்கள் அந்தப் பயணத்தில் உடனிருந்தனர். ஓ.பன்னீர்செல்வம் கார், வீட்டிலிருந்து புறப்பட்டுவிட்ட தகவலை ஆர்.கே. நகரில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் நின்றபடி மதுசூதனன் அறிவித்துக் கொண்டிருந்தார்.

ஆதரவாளர்கள் முட்டிக் கொண்டு திமிறியதால் அந்த மேடை ஆட்டம் காண ஆரம்பித்தது. அமைச்சர் டி.ஜெயக்குமாரின் தீவிர ஆதரவாளராக இருந்த ராஜபுரம் முன்னாள் பகுதிச் செயலாளர் நா.குமரன், "அவைத் தலைவர் அண்ணன் மதுசூதனன் சொல்வதைக் கேளுங்கள். நம்முடைய இயக்கம், கட்டுப்பாடான இயக்கம்" என்று மைக்கில் சொல்ல ஆரம்பித்தார்.

'மிரட்டல் இருப்பதால் பொலிஸ் பாதுகாப்பு வேண்டும்' என்று மதுசூதனன், சென்னை பொலிஸ் கமிஷனரிடம் மனு கொடுத்திருந்தார். இரண்டு துணை கமிஷனர்கள், நான்கு உதவி கமிஷனர்கள் என்று பொலிஸார் குவிந்திருந்தும்கூட, மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த ரொம்பவே திணறிப் போயினர். ஒரு கட்டத்தில் மேடை ஏறிய மதுசூதனன், "டேய் அசோக்கு (வேளச்சேரி முன்னாள் எம்.எல்.ஏ) தம்பி, எல்லாரையும் உம்பாட்டுக்கு மேடையில ஏத்தி விட்டுக் கிட்டே இருக்கே... இது நல்லதுக்கில்லே, பாத்துக்க. செங்கல்களை அடுக்கி வெச்சு டெம்பரரியா போட்டிருக்கிற ஸ்டேஜ் இது. ஓ.பி.எஸ்.அண்ணன் வந்து போற வரைக்கும் எந்த அசம்பாவிதமும் ஆகிடாம பாத்துக்கோணும். நான் உன் மேலேதான் பழியைப் போடுவேன். சொன்னாக் கேளு, கொஞ்சம் ஹெல்ப் பண்ணு. இதே மாதிரிதான் அண்ணா நகர்ல ஒருமுறை மேடை சரிஞ்சு போச்சு..." என்று எச்சரித்துக்கொண்டே இருந்தார். மேடையின் கீழே நின்றிருந்தவர்கள், "வாங்கண்ணே! இப்பத்தாண்ணே நீங்க பழைய அஞ்சா நெஞ்சன்... அப்படியே மெய்ன்டெய்ன் பண்ணுங்கண்ணே..." என்று மதுசூதனனின் பேச்சை ரசித்து விசிலடித்தனர்.

இங்கு திரண்டிருந்த ஆதரவாளர்களால் போக்குவரத்து நெரிசல் அதிகமாகிக் கொண்டே போக, திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. அன்னதானம், நலத்திட்ட உதவிகள் என்று அமர்க்களப்படுத்தியிருந்தார் வட சென்னை மாவட்ட ஜெயலலிதா பேரவையின் செயலாளரான ஆர்.எஸ்.ராஜேஷ். இவர் மதுசூதனனின் தீவிர ஆதரவாளர் என்பதால், இவருடைய பதவியில் கைவைக்க சசிகலா தரப்பு பயப்படுவதாக அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர். ஊனமுற்றோருக்கான ஸ்கூட்டர்கள், தையல் இயந்திரங்கள், வேட்டி-புடைவைகள், மீனவர்களுக்கான அன்னக் கூடை பாத்திரங்கள்... என்று பொருட்களை தனி மேடை போட்டு குவித்திருந்தனர்.

பிற்பகல் ஒரு மணியளவில் ஓ.பன்னீர்செல்வம், மேடைக்கு வந்து சேர்ந்தார். 'ஓ.பன்னீர் செல்வம் பாதுகாப்பு அணி' என்ற ஒன்றை உருவாக்கி, ஜீப்பில் ஆட்களை ஏற்றிக் கொண்டு காரின் பின்னால் வந்து கொண்டிருந்தார்கள். ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு வரிசையாக நின்று ஓ.பன்னீர்செல்வத்துக்கு பெண்கள் ஆரத்தி எடுத்ததால், அவர் அங்கிருந்து மேடைக்கு வரவே அரை மணி நேரம் பிடித்தது. இங்கு போட்டியிட்டபோது வந்த ஜெயலலிதாவை வரவேற்று வைத்திருந்ததைவிட பன்னீரை வரவேற்று வைத்திருந்த பனர்கள் கூடுதலாய் மிரட்டின. ஆரத்தி, சால்வைகள், சொக்லேட்டுகள் என்று பெண்கள் காட்டிய ஆதரவில் திக்குமுக்காடிப் போனார் பன்னீர். ஆரத்தி எடுத்த பெண்களைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்ட போது கண்களில் நீர் கசிந்திருந்தது.


ஒருவழியாக பன்னீர் மேடையில் ஏறியதும், வடசென்னை மாவட்ட ம.தி.மு.க.பொருளாளர் சட்டத்தரணி எம்.எம் கோபியின் தலைமையில், ஈ.பி.சிவா, மின்னல் மோகன் என்று 14 வட்டச் செயலாளர்கள் உட்பட ஆயிரம் பேர் பன்னீர் அணியில் இணைந்தனர். அந்த மேடையில் பேசியபோதும், பின்னர் அங்கிருந்த திருமண மண்டபத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோதும், அந்த 'வரலாற்று சிறப்புமிக்க' அறிவிப்பை பன்னீர்செல்வம் வெளியிடவே இல்லை. பயந்து விட்டாரா, பயமுறுத்திவிட்டார்களா என்பது தெரியவில்லை!

# முன்னாள் போராளிகளால் நாட்டுக்கு ஆபத்து

# வடக்கு - கிழக்கில் இராணுவத்தை அதிகரிக்குமாறு கருணா கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இராணுவத்தையும் புலனாய்வுப் பிரிவினையும் அதிகரிக்குமாறு முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் (கருணா) கோரிக்கை விடுத்துள்ளார்.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

கொழும்பு பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்பிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள படையினரின் எண்ணிக்கையை மேலும் அதிகரித்தால் நன்று. மேலும் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்களின் எண்ணிக்கையும் குறித்த மாகாணங்களில் அதிகளவு கடமையில் ஈடுபடுத்தினால் நன்று.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுத்துள்ளேன்.

வடக்கு - கிழக்கிற்கு பாதுகாப்பு காணப்படுகின்றது. எனினும் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் படையினரையும் புலனாய்வுப் பிரிவினரையும் அதிகரிப்பது பொருத்தமானதாக அமையும்.

இந்த அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டவர்களே வடக்கு-கிழக்கில் புலனாய்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் கடமையில் அமர்த்தப்பட்ட புலனாய்வுப் பிரிவினரை கடமையில் ஈடுபடுத்துவதே பொருத்தமாக அமையும்.

ஏனெனில் அவர்களுக்கு வடக்கு-கிழக்கின் அனைத்து மூலை முடுக்குகளும் நன்றாகத் தெரியும்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட 14 ஆயிரம் முன்னாள் போராளிகள் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதனை கண்காணிப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

அவ்வாறு இல்லையென்றால் மீளவும் அவர்கள் ஆயுதம் ஏந்தி நாட்டுக்கு அழிவினை ஏற்படுத்தக்கூடும்.

முன்னாள் போராளிகளுக்கு வெளிநாட்டு தொடர்பு உண்டு. இந்த விடயங்கள் குறித்து நான் ஏற்கனவே அமைச்சர்களிடமும் கூறியுள்ளேன்.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்ட நாட்டில் மீளவும் வன்முறை வெடிக்க இடமளிக்கக்கூடாது என ஜனாதிபதியிடம் கோருகின்றேன் என கருணா மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# ஹசனலிக்கு தேசியப்பட்டியல் வழங்குவதில் எனக்கு எந்த பிரச்சினையுமில்லை-ஹக்கீம்

ஹசனலி வேதனையுடன் இருக்கிறார். அவர் கூட்டம் நடத்துவதை நாங்கள் ஆமோதிக்கிறோம். ஆனால், ஒரு தனிமனிதனின் வேதனையை பகடைக்காயாக வைத்து ஊர் ஊராக பிரசாரம் செய்யப்போவதாக சிலர் சித்து விளையாட்டு காட்டுவதை அனுமதிக்க முடியாது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நிந்தவூரில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். கட்சிக்குள் இருந்துகொண்டு இவ்வாறான வேலைகளில் ஈடுபடுபவர்கள் இன்னும் இன்னும் கூட்டம் வைத்துப் பாருங்கள். கூட்டம்வைக்க, வைக்க அனுபவிப்பார்கள். இவர்கள் மிக தைரியமாக, தாராளமாக கூட்டங்களை வைக்குமாறு நான் கூறுகிறேன். ஹசனலி அவருடைய பிரச்சினையை என்னுடனும் கதைத்திருக்கிறார். கட்சியிடமும் கதைத்திருக்கிறார்.

உச்சபீடக் கூட்டத்தில் என்னை தலைவராக பிரேரித்தவர் ஹஸனலி. அவருடைய கூட்டத்தில் வைத்தும் அதை மீண்டும் ஆமோதித்துவிட்டு சென்றிருக்கிறார். அப்படியான ஒருவரை நான் இழிவுபடுத்த முடியாது. அது மனிதப் பண்பு அல்ல.

நான் கஃபத்துல்லாவுக்கு சென்று அல்லாஹ்விடம் துஆ கேட்டால், ஒன்றை மட்டும்தான் கேட்பேன். இந்த தேசியப்பட்டியலை மட்டும் இல்லாமல் செய்துவிடு என்றுதான் கேட்பேன். அப்போதுதான் இந்தக் கட்சியை காப்பாற்றமுடியும்.

ஆனால், சகோதரர் ஹஸனலிக்கு தேசியப் பட்டியல் வழங்கி அலங்கரிப்பதில் எனக்கு எந்தவொரு பிரச்சினையும் கிடையாது.

பாலமுனையில் நடைபெற்ற கூட்டத்தில் அட்டாளைச்சேனைக்கு தேசியப்பட்டியல் வழங்குவதை உறுதிபடுத்துமாறு கூறுகிறார். அட்டாளைச்சேனைக்கு நான் கொடுப்பதாக கூறிய தேசியப் பட்டியல் கட்டாயம் கிடைக்கும். ஆனால், அவர்தான் கூறுகிறார் ஹசனலிக்கு தேசியப்பட்டியல் கொடுக்கக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# தேசாபிமானிகள் பட்டியலில் முஸ்லிம்கள் எவருமில்லை



ஆங்கிலேயர்களால்தேசத்துரோகிகளாக பிரகடனப்படுத்தப்பட்டவர்களை தேசாபிமானிகள் என பிரகடனப்படுத்தவென கண்டியில் நடைபெற்ற விழாவின் போது வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் முஸ்லிம்கள் எவரும் இடம் பெற்றிருக்கவில்லை. இவ்வாறு தேசத்துரோகிகளாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தவர்களை தேசாபிமானிகள் என பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த புதனன்று கைச்சாத்திட்டார். இந்த வைபவம் தலதா மாளிகையின் மங்குல்மடுவ எனும் மண்டபத்தில் நடைபெற்றது.

1804 ஜீன் 7 ஆம் திகதி பிரித்தானிய அரசால் தேசத்துரோகிகளாக பிரகடனம் செய்யப்பட்ட முஸ்லிம்களுக்கு எதிரான வர்த்தமானி அறிவித்தலை நீக்கி அவர்களை நாட்டுக்காக போராடிய தேசிய வீரர்கள் என பிரகடனம் செய்யுமாறு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.ம் ஹிஸ்புல்லாஹ், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ ஆகியோரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இது சம்பந்தமாக தான் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி இராஜாங்க அமைச்சருக்கு எழுத்துமூலம் அறிவித்திருந்தார்.

எனினும் கண்டியில் நடந்த விழாவில் 89 பேர் தேசாபிமானிகளாக பிரகடனப்படுத்தப்பட்ட பட்டியலில்எந்த முஸ்லிம்களின் பெயரும் இடம்பெறவில்லை. இந்த வைபவத்தில் முஸ்லிம் விவகார, தபால் அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம், அமைச்சர் கயந்த கருணாதிலக, அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, அமைச்சர் எஸ்.பீ. திஸாநாயக்க உட்பட பிரதி அமைச்சர்கள், மாகாண ஆளுநர்கள், மாகாண அமைச்சர்கள் பெருந்தொகையில் கலந்து கொண்டனர். (இ-3)

# மீதொட்டுமுல்ல குப்பைமேட்டிற்கு எதிராக பொது மக்கள் ஆர்ப்பாட்டம்

## போக்குவரத்து பாதிப்பு



மீதொட்டுமுல்ல குப்பைக் கிடங்கிற்கு எதிராக குறித்த பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் காரணமாக அப்பகுதியில் வீதிப் போக்குவரத்திற்கு தடை ஏற்பட்டிருந்தது.

மீத்தமுள்ள குப்பைக் கிடங்கிற்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் உள்ளிட்ட பகுதியில் வாழும் பௌத்த தேரர்கள், பொதுமக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (இ-3)

# மீண்டும் டெங்கு ஒழிப்பு வாரம் சுகாதார அமைச்சர் பணிப்புரை

டெங்கு நோய் அச்சுறுத்தல் தீவிரமடைவதன் காரணமாக டெங்கு ஒழிப்பு வாரமொன்றை மீண்டும் பிரகடனப்படுத்துமாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழ்ங்கியுள்ளார்.

இதற்கமைய மார்ச் மாதம் 29 ஆம் திகதி முதல் ஏப்ரல்4ஆம்திகதிவரைடெங்கு ஒழிப்பு வாரம் அமுல்படுத்தப்படும் என்று டெங்கு ஒழிப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

தற்போது கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் கடந்த காலங்களில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் நாட்டில் பதிவாகியுள்ளனர். அவர்களில் 24 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# இலங்கை விவசாயத்துறை அபிவிருத்திக்கு உலக வங்கி 1200 கோடி டொலர் நிதியுதவி

நாட்டின் விவசாயத்துறை அபிவிருத்திக்காக ஆயிரத்து 200 கோடி டொலர் நிதியுதவியை உலக வங்கி வழங்கவுள்ளது. இந்த நிதி உதவித் திட்டத்தின் கீழ் தேசிய உற்பத்தியை மேம்படுத்துவது அரசாங்கத்தின் முக்கிய நோக்கம். வங்கிக் கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் தேசிய உற்பத்தியை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்று அடிப்படை கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் தயாகமகே தெரிவித்தார். (இ-3)

# கொலை அச்சுறுத்தல்

சில பள்ளிவாசல்களின் தலைவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள் வக்பு சபைத் தலைவருக்கு எதிராக தொலைபேசியூடாக மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் விடுத்து வருவது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட தொலைபேசி மற்றும் அலைபேசி இலக்கங்களை சி.ஐ.டியிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக வக்பு சபையின் தலைவர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.யாசீன் தெரிவித்தார். (இ-3)

# எம்.எல்.ஏக்களை தன்பக்கம் இழுக்க தங்கத்தை வாரியிறைத்தார் சசிகலா

## பன்னீர்செல்வம் பரபரப்பு குற்றச்சாட்டு






சசிகலா தனது அணியில் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்களை இணைக்க 3 கிலோ தங்கம் மற்றும் 3 கோடி ரூபா பணமும் கொடுத்தார் என முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பகிரங்கமாக குற்றம்சாட்டியுள்ளார்.

நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்ட நிர்வாகிகள், தொண்டர்களின் ஒருங்கிணைப்பு கூட்டத்தை நேற்று முன்தினம் ஓ.பன்னீர்செல்வம் அவருடைய இல்லத்தில் நடத்தியபோதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

தங்கமும் பணமும் வேண்டாம் என்று சசிகலா தரப்பினரின் பிடியில் இருந்து சண்முகநாதன் உள்ளிட்ட எமது அணியில் உள்ள எம்.எல்.ஏக்கள் தப்பித்து வந்துவிட்டனர் எனவும், கட்சியை உடைப்பதற்காக இந்த தர்மயுத்தத்தை தொடங்கவில்லை. ஒரு குடும்பத்தின் கையில் கட்சி சென்றுவிடக்கூடாது என்பதே எங்கள் நோக்கம் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஜெயலலிதாவின் மறைவுக்கு பின்னர் அ.தி.மு.க.வில் சசிகலா ஒரு அணியாகவும், பன்னீர்செல்வம் ஒரு அணியாகவும் செயற்பட்டு வரும்நிலையில், சசிகலா பெருந்தொகைப்பணம் கொடுத்து அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களை விடுதி ஒன்றில் அடைத்து வைத்திருந்தார் என அண்மையில் ஊடகங்களிலும் செய்திகள் வெளிவந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-12)

# தமிழக அரசுக்கு எதிராக கையெழுத்து போராட்டம்



சென்னை பெசன்ட்நகர் கடற்கரை இளைஞர்கள் திரண்டு தமிழக அரசுக்கு எதிராக நேற்று முன்தினம் கையெழுத்து பெறும் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

தமிழக அரசை கலைத்து விட்டு ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியே மேற்படி போராட்டம் ஆரம்பமானது.


இந்நிலையில் தகவல் அறிந்து அங்கு சென்ற பொலிஸார் கையெழுத்து இயக்கம் நடத்த முறைப்படி அனுமதி வாங்க வேண்டும். அனுமதி இல்லாது கையெழுத்து போராட்டம் நடத்தக்கூடாதென தெரிவித்து அச்சுறுத்தினர்.

அண்மையில் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக மெரினா கடற்கரையில் மாணவர்கள் திரண்டு நடத்திய போராட்டம் வரலாற்று சிறப்புமிக்க போராட்டமாக அமைந்ததுடன் வெற்றியடைந்தும் இருந்தது. அதேபோல் தற்போது எரிவாயு திட்டத்தை எதிர்த்து புதுக்கோட்டை, நெடுவாசலில் நடைபெற்று வரும் போராட்டத்திலும் மாணவர்களும் இளைஞர்களும் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

பாரதச் செய்தி

# சசிகலா கர்நாடகாவில் இருந்தால் 10கோடி ரூபா செலுத்த வேண்டும்

## சுப்பிரமணியன் சுவாமி விளக்கம்



சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டனை பெற்றுள்ள அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் சசிகலா உள்ளிட்டோரை பெங்களூர் சிறையில் தடுத்து வைத்துள்ளமைக்காக, கர்நாடக அரசுக்கு வருடமொன்றிற்கு 10 கோடி ரூபா செலுத்த வேண்டும் என்றும் அதற்காகவே அவரை தமிழக சிறைக்கு மாற்றுமாறு கோரிக்கை விடுத்ததாகவும் பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவரான சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார். சென்னை விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சசிகலா உள்ளிட்டோருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளதால் சாட்சிகளை கலைத்து விடுவார்கள் என்று கவலையடைய தேவையில்லை என்றும், எனினும் இவ்விடயம் தொடர்பாக தமிழக அரசே தீர்மானிக்க வேண்டுமெனவும் சுப்பிரமணியன் சுவாமி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான தமிழகத்தின் தற்போதைய ஆட்சி சிறப்பாக காணப்படுவதாகவும் குடிநீர் பிரச்சினையை தீர்ப்பது உள்ளிட்ட ஏழு அம்ச திட்டத்தை முதலமைச்சர் பழனிச்சாமியிடம் கையளிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-12)

# பெண் ஊழியர்களைக் கொண்டு உலகை வலம் வந்த விமானம்

## ஏர் இந்தியா நிறுவனம் சாதனை



(டில்லி)

முழுக்க முழுக்க பெண் ஊழியர்களை கொண்டு உலகம் முழுவதும் விமானம் ஒன்றை சுற்றி வரச் செய்து ஏர் இந்தியா நிறுவனம் உலக சாதனை படைத்துள்ளது. சர்வதேச மகளிர் தினம் நாளை 8ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. இன்றைய நவீன உலகில் ஆண்களுக்கு இணையாக பெண்களும் பல்வேறு துறைகளில் சாதனைகளை படைத்து வருகின்றனர்.

சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு இந்தியாவில் உள்ள ஏர் இந்தியா நிறுவனம் புதுமையான சாதனை ஒன்றை படைத்துள்ளது. முழுக்க முழுக்க பெண் ஊழியர்களை கொண்டு இயக்கப்படும் விமானம் ஒன்றை உலகம் முழுவதும் வலம் வரச் செய்துள்ளது.

கடந்த 27ஆம் திகதி, டில்லியில் இருந்து 'போயிங்' ரக ஏர் இந்தியா விமானம், அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகருக்கு புறப்பட்டது. செல்லும்போது, பசுபிக் நாடுகள் வழியாக சென்ற விமானம், திரும்பி வரும்போது, அட்லாண்டிக் நாடுகள் வழியாக உலகை சுற்றி வந்து டில்லியை வந்தடைந்தது. இந்த விமானத்தில் விமானிகள், ஊழியர்கள், சிப்பந்திகள், தொழில் நுட்ப பணியாளர்கள், ஓடு பாதை சோதனையாளர்கள், தரை கட்டுப்பாட்டு பிரிவு ஊழியர்கள் என அனைத்து பிரிவிலும் முழுக்க முழுக்க பெண்களே பணியாற்றினர்.

இதனையடுத்து உலகம் முழுவதிலும் இருந்து ஏர் இந்தியாவுக்கு பாராட்டுக்கள் குவிகின்றன. மேலும் உலகிலேயே முதன்முறையாக முழுக்க முழுக்க பெண்களை கொண்டு இயக்கப்பட்ட விமானம் என்ற சாதனைக்காக கின்னஸ் சாதனையில் இடம் பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளதாகவும் ஏர் இந்தியா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இனி ஒவ்வொரு மார்ச் 8ஆம் திகதியும் சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு முழுக்க முழுக்க பெண்களால் நிர்வகிக்கப்படும் விமானத்தை இயக்கப் போவதாகவும் அறிவித்துள்ளது. (இ-12)

# தி.மு.கவை அழிக்க நினைத்தவர்கள் அரசியலில் முகவரி இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கின்றனர்

## செயல்தலைவர் ஸ்டாலின் கூறுகிறார்



தி.மு.கவை அழிக்க நினைத்தவர்கள் அரசியலில் முகவரி இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கின்றனர் என்று தி.மு.க. செயல் தலைவரும் தமிழக எதிர்க்கட்சி தலைவருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னை கொளத்தூரில் உள்ள கூட்டுறவு கடைகளில் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆய்வு மேற்கொண்டார். இதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

'பொன்.ராதாகிருஷ்ணன் தமிழகத்தைச் சேர்ந்தவர். அவர் எத்தனை குட்டிக்கரணம் போட்டாலும் அவர்களுடைய கட்சியை தமிழகத்தில் வளர்ப்பதற்கு முடியாமல் போய்க் கொண்டிருக்கிறது. அந்த விரக்தியில் தி.மு.கவுக்கு எதிரான கருத்துகளை அவர் பேசிக்கொண்டிருக்கிறார். தி.மு.கவை அழிக்க நினைத்தவர்கள் அரசியலில் முகவரி இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கின்றனர். குறிப்பாக ஊடகங்களின் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதற்காக அடிக்கடி தி.மு.க. பெயரை சொல்ல வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்பட்டிருக்கிறது.

இன்னும்சொல்லவேண்டுமென்றால்சொன்னால், மேலாதிக்கம் கொண்ட பா.ஜ.கவில் அவர் ஒரு அமைச்சராக வந்திருக்கிறார் என்றால், அதற்குப் பின்னணி திராவிட இயக்கம் தான் என்பதை அவர் மறந்துவிடமாட்டார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-12)

# ஜப்பான் கடற்பகுதியை நோக்கி நேற்று 4 ஏவுகணைகளை ஏவியது வடகொரியா

(பியாங் யாங்)

அதி நவீன முறையில் வடகொரியாவால் தயாரிக்கப்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் நான்கு ஏவுகணைகள் நேற்றுத் திங்கட்கிழமை ஜப்பானின் கடலை நோக்கி ஏவப்பட்டுள்ளன. அவ்வாறு ஏவப்பட்ட 4 ஏவுகணைகளுள் மூன்று ஏவுகணைகள் ஜப்பானின் பொருளாதார வலயத்திற்குள் வீழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



குறித்த ஏவுகணைகள் சினாவின் எல்லையருகே உள்ள வடகொரியாவின் டொங்செங் (Tongchang) பிராந்தியத்திலிருந்து ஏவப்பட்டுள்ளதாக இவ்விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட தென்கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஏவுகணைப் பரிசோதனை செய்வதற்கு ஐ.நா. அமைப்பினால் வடகொரியாவுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே மேற்குறித்த நடவடிக்கையை வடகொரியா மேற்கொண்டுள்ளது என இந்த ஏவுகணை தொடர்பில் கருத்து தெரிவித்த அமெரிக்க இராணுவம், வடகொரியாவின் ஏவுகணை பரிசோதனை தொடர்பில் தகவல் அறிந்தவுடன் அது தொடர்பில் மேற்கொண்ட ஆய்வின் போது வடக்கு அமெரிக்காவுக்கு அதனால் எதுவித ஆபத்தும் இல்லை என்பதை தாம் உறுதி செய்துகொண்டதாக தெரிவித்துள்ளது. (இ-12)

## வடகொரியாவால் ஜப்பானுக்கு புதிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது

### பிரதமர் ஷின்சோ கவலை



ஜப்பானிய கடலை நோக்கி வடகொரியாவால் நேற்றுத் திங்கட்கிழமை ஏவப்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் நான்கு ஏவுகணைகள் ஜப்பானுக்கு புதிய அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளது என ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அபே, "வடகொரியாவால் ஜப்பானுக்கு பாரிய அச்சுறுத்தல் உள்ளது என்பது நேற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் மூலம் புலனாகின்றது.

இந்த ஏவுகணை சோதனை பாதுகாப்பு சபையின் தீர்மானங்களை மீறுவதாய் அமைந்துள்ளது" என தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய நாடாளுமன்றில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்குறித்த கருத்தை அபே தெரிவித்தார்.

இருப்பினும், குறித்த ஏவுகணை சோதனையால் ஜப்பானின் கப்பல்களுக்கு எதுவித பாதிப்புக்களும் இது வரை ஏற்படவில்லை.

கடந்த புதன்கிழமை தென் கொரியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இணைந்து இராணுவப் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டதை தொடர்ந்து கோபமடைந்த வடகொரியா, மிக பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

## 70 இந்திய மீனவர்கள் பாகிஸ்தானில் கைது!

(இஸ்லாமாபாத்)

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக குஜராத் மாநிலத்தை சேர்ந்த 70 மீனவர்களை, பாகிஸ்தான் கடலோர காவல் படையினர் கைது செய்துள்ளனர். மேலும் பத்துக்கும் மேற்பட்ட படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்த ஆண்டில் இந்திய மீனவர்களை பாகிஸ்தான் கடலோர காவல் படையினர் இவ்வாறு கைது செய்வது மூன்றாவது முறையாகும்.

அரேபிய கடல் பகுதியில் கடந்த சனிக்கிழமை மீன் பிடித்துகொண்டிருந்தவேளையே அவர்கள் கைதுசெய்யப்பட்டதாக, பாகிஸ்தான் கடலோர காவல் படையினரிடம் பிடிபடாமல் தப்பிவந்த இதர மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதத்தில் ஆறு படகுகளுடன் 39 மீனவர்களும், கடந்த வாரத்தில் இரு படகுகளுடன் 11 மீனவர்களும் பாகிஸ்தான் கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-12)




## அமெரிக்கா வடகொரியாவின் புகழுக்கு களங்கத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி

### கொலைக்குற்றச்சாட்டை மறுத்தது வெளியுறவுத்துறை

(மாலபே)

மலேசியாவில் படுகொலை செய்யப்பட்ட வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் சகோதரர் கிம் ஜாங் நாமின் கொலைக்கும், வடகொரியாவுக்கும் தொடர்பு இருப்பதாக சந்தேகித்துள்ள அமெரிக்கா, வடகொரியாவை தீவிரவாத நாடுகள் பட்டியலில் சேர்க்க எண்ணியுள்ளதாக வெளியான தகவலுக்கு வடகொரியா கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.



கிம் ஜாங் நாமின் கொலைக்கு சதித்திட்டம் தீட்டியதே வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்தான் என ஆரம்பத்திலிருந்தே அமெரிக்கா வசைபாடி வந்த நிலையில், வடகொரியாவை தீவிரவாத நாடுகள் பட்டியலில் சேர்க்க அமெரிக்கா எண்ணி வருவதாக தென் கொரியா மற்றும் ஜப்பானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவ்விடயம் வடகொரியாவை ஆத்திரமடைய வைத்துள்ளது.

இந்நிலையில் இது குறித்து கருத்து வெளியிட்ட வடகொரியாவின் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர், 'வடகொரியா அனைத்து வடிவத்திலான தீவிரவாதத்தையும் எதிர்த்து வருகிறது.

ஆனால் அமெரிக்கா எங்கள் புகழுக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சிக்கிறது' என குறிப்பிட்டார்.

கடந்த ஜனவரி மாதம் 13 ஆம் திகதி கோலா லம்பூர் விமான நிலையத்தில் விஎக்ஸ் என்ற விஷ இரசாயன பொடி வீச்சால் கிம் ஜாங் நாம் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

## துருக்கியின் தாக்குதலால் 66,000பேர் இடப்பெயர்வு



வடக்கு சிரியாவில் துருக்கியால் முன்னெடுக்கப்பட்டு வரும் தாக்குதல்கள் காரணமாக சுமார் 66 ஆயிரம் சிரிய மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பிற்கு பொறுப்பான ஐ.நாவின் அலுவலகம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.

சிரியாவின் அல் - பாப் நகரில் இருந்து சுமார் 39, 766 பேர் இதுவரை வெளியேறியுள்ளதாக குறித்த அலுவலகம் வெளியிட்ட தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் இருந்து சிரியாவின் ஏனைய பகுதிகளுக்கு வெளியேறியுள்ள மக்கள் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டுள்ள பகுதிகளை நோக்கி சென்றுள்ளதாகவும் அந்த பகுதிகளில் கண்ணி வெடிகள் மற்றும் ஏனைய வெடி பொருட்கள் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. விடயமறியாது ஆபத்தான பகுதிகளில் பல அப்பாவி பொதுமக்கள் சிக்கிக் கொண்டுள்ளதாக அண்மைய தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இது இவ்வாறிருக்க, சிரியாவில் உள்ள ஐ.எஸ் தீவிரவாதிகளை அழிக்கும் பொருட்டு கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் துருக்கி தனது தாக்குதல்களை முன்னெடுக்க ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

# உயிலங்குளம் பொலிஸ் நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டம் ஆரம்பம்



மன்னார் உயிலங்குளம் பொலிஸ்நிலையத்தில் அமைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்த்திட்டம் நேற்று திங்கட்கிழமை காலை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார்பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி அஜந்த றொற்றிகோ தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மன்னார் பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார், மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் பலிகக்கார ஆகியோர் இணைந்து வைபவ ரீதியாக குறித்த திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

ஜனாதிபதி செயலணி சிறுநீரக நோய்த் தடுப்பு பிரிவின் ஏற்பாட்டில் இலங்கை கடற்படையின் உதவியுடன் குறித்த திட்டம் மன்னார் உயிலங்குளம்பொலிஸ்நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த திட்டத்தின் மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை அப்பிரதேச மக்கள் இலவசமாகப் பெற்று அருந்துவதன் மூலம் சிறுநீரக நோயில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் மன்னார் மாவட்டத்தில் உயிர் பாதுகாக்கும் பயிற்சியான நீச்சல் பயிற்சியை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதல் மற்றும் அடையாள அட்டை போன்றவை வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் சர்வ மதத் தலைவர்கள், கிராம மட்டத் தலைவர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், ஜனாதிபதி செயலணி சிறுநீரக நோய் தடுப்பு பிரிவின் வன்னி மாவட்ட இணைப்பாளர் சமிந்த பிரித்திவிராஜ் வாசன ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த நிகழ்வை இலங்கை பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஆரம்பித்து வைக்க இருந்த நிலையில் அவர் குறித்த நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2-9)

## 6 ஆம் நாள்

# போராட்டக் களத்திலேயே செத்து மடிந்தாலும் சொந்த நிலம் திரும்பாது போராட்டத்தை கைவிடோம்

## கேப்பாப்பிலவு மக்கள் விடாப்பிடி





முல்லைத்தீவு - கேப்பாப்பிலவு பூர்வீக கிராமத்தில் இராணுவம் கையகப்படுத்தியுள்ள தமது சொந்த நிலத்தை மீட்கும் போராட்டத்தை நேற்று ஆறாவது நாளாகவும் பொதுமக்கள் முன்னெடுத்துள்ளனர்.

128 குடும்பங்களுக்கு சொந்தமான 484 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தியே பொதுமக்கள் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தை தொடர்ந்து பொதுமக்கள் சொந்த நிலங்களில் இருந்து வெளியேறிய நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல பிரதேசதங்கள் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டன.

கடந்த முதலாம் திகதி பிலவுக்குடியிருப்பு மக்களின் போராட்டம் நிறைவுக்கு வந்ததை அடுத்து கேப்பாப்பிலவு மக்கள் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

இந்த நிலையில் கேப்பாப்பிலவு மக்களை இராணுவத்தினர் அச்சுறுத்தும் நடவடிக்கையில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எத்தகைய அச்சுறுத்தலை இராணுவத்தினர் விடுத்தாலும் தாம் போராட்டத்தை நிறுத்திவிடப் போவதில்லை என்றும் போராட்ட இடத்திலே மடிந்தாலும் சொந்த நிலம் திரும்பாது தமது மண் மீட்புப் போராட்டம் தொடரும் என்றும் கேப்பாப்பிலவு மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் போராட்ட இடத்துக்கு வருகை தந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் கந்தையா சிவநேசன் மக்களோடு கலந்துரையாடி அவர்களது போராட்டத்துக்கான தங்களுடைய ஆதரவையும் வழங்கினார்.

இதேவேளை பிலவுக்குடியிருப்பு மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாக பெருமளவிலான இளைஞர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் இன, மத, மொழி வேறுபாடின்றி இணைந்து ஆதரவு வழங்கியது போன்று தமது போராட்டத்திற்கும் ஆதரவு வழங்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-281-15)

# நெடுவாசலில் தீவிரம் அடையும் போர்



(புதுக்கோட்டை)

நெடுவாசலில் தீவிரம் அடையும் போராட்டத்தை கைவிடவேண்டுமானால் பேச்சுவார்த்தை தேவையில்லை, எரிவாயுத் திட்டத்தை மத்திய அரசு இரத்துச் செய்வதால் தான் முடியும் என்று போராட்டக்குழுவினர் உறுதிபட தெரிவித்துள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் கிராமத்தில் இயற்கை எரிவாயு எடுக்கும் திட்டத்திற்கு கடந்த மாதம் 15 ஆம் திகதி மத்திய அரசு அனுமதி வழங்கியது.

இதனை எதிர்த்து நெடுவாசல் மற்றும் திட்டம் செயற்படுத்தப்படும் அருகிலுள்ள வாணக்கன்காடு, கோட்டைக்காடு, கருக்காக்குறிச்சி, வடகாடு உள்ளிட்ட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் 16 ஆம் திகதி முதல் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தப் போராட்டம் நேற்று 19 ஆவது நாளை எட்டியது.

இதற்கு தமிழகம் முழுவதும் ஆதரவு பெருகியது. பள்ளி, கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள், சமூக அமைப்பை சேர்ந்தவர்கள், திரைத்துறையினர் என பல்வேறு தரப்பினர் ஆதரவு தெரிவித்ததோடு, நெடுவாசல் கிராமத்திற்கு வந்து போராட்டத்திலும் கலந்து கொண்டனர்.

எரிவாயு எடுக்கும் திட்டத்தால் எந்தவித பாதிப்பும் வராது என்று மத்திய அரசு விளக்கம் அளித்தும் அதனை ஏற்க மறுத்த நெடுவாசல் கிராமத்தினர் போராட்டத்தை தீவிரப்படுத்தினர். 100 இற்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து தினமும் ஏராளமானோர் வந்து போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதற்கிடையே அரசியல் கட்சியினரும் ஆதரவளித்தனர். தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின், பா.ம.க. இளைஞரணி தலைவர் டாக்டர் அன்புமணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி டி.ராஜா, ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, மக்கள் நல கூட்டியக்க தலைவர்கள் திருமாவளவன், முத்தரசன், ஜி.ராமகிருஷ்ணன் ஆகியோர் நெடுவாசல் போராட்டக் களத்திற்கு வந்தனர்.

போராட்டத்தை கைவிடுவது தொடர்பாக கலெக்டர் நடத்திய பல்வேறுகட்ட பேச்சுவார்த்தையும் தோல்வியிலேயே முடிந்தது. கோட்டைக்காடு கிராம மக்கள் மட்டும் தற்காலிகமாக போராட்டத்தை கைவிட்டனர்.

மேலும் மதுரையில் நடந்த பேச்சுவார்த்தையில் நெடுவாசல்கிராமத்தை சேர்ந்த 30 பேர் மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணனை சந்தித்து தங்கள் குறைகளை தெரிவித்து எரிவாயு எடுக்கும் திட்டத்தை உடனே இரத்து செய்து மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தினர். இதிலும் உடன்பாடு ஏற்படவில்லை.


இதற்கிடையே போராட்டத்தை தீவிரப்படுத்தும் வகையில் நெடுவாசலில் தகரக்கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. அருகில் உள்ள வடகாடு கிராமத்திலும் பொதுமக்கள் நேற்று முன்தினம் முதல்போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.

இதில் கலந்துகொள்பவர்களுக்கு தேவையான உணவைப் பூர்த்தி செய்ய பல்வேறு சமூக அமைப்புகள் சார்பில் மூடை, மூடையாக அரிசி உள்ளிட்ட பொருட்கள் வந்து குவிக்கப்பட்டுள்ளன.

விடுமுறை தினமான நேற்று முன்தினம் திரைத்துறையைச் சேர்ந்த நடிகரும், இசையமைப்பாளருமான ஜி.வி.பிரகாஷ், திரைப்பட இயக்குநர் கரு. பழனியப்பன், சண்முகம், குட்டிப்புலி சினிமா நடிகர் ராஜசிம்மன் உள்ளிட்டோர் நெடுவாசல் போராட்டத்தில் பங்கேற்று பேசினர்.

அதேபோல்பா.ஜ.க. தேசிய செயலாளர் எச்.ராஜாவும் நெடுவாசல் வந்து எதிர்வரும் 11 ஆம் திகதி மத்திய பெற்றோலியத்துறை அமைச்சரைச் சந்திக்கும் வரை போராட்டத்தை கைவிடுமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் அதனை ஏற்க கிராமத்தினர் மறுத்துவிட்டனர்.

நாளுக்கு நாள் தீவிரம் அடையும் போராட்டத்தை கைவிடவேண்டுமானால் பேச்சுவார்த்தை தேவையில்லை, எரிவாயுத் திட்டத்தை மத்திய அரசு இரத்து செய்வதால் தான் முடியும் என்று போராட்டக்குழுவினர் உறுதிபட தெரிவித்துள்ளனர். (இ-12)



# கடத்தலில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிக்கு இராஜதந்திரப் பதவி வழங்கப் பரிந்துரை

## கோத்தபாய மீது மற்றுமொரு குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள, இராணுவப் புலனாய்வு அதிகாரியான மேஜர் பிரபாத் புலத்வத்த, முன்னைய ஆட்சிக்காலத்தில் உயர்மட்ட இராஜதந்திரப் பதவிக்கு முன்மொழியப்பட்டவர் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும், தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் கபில ஹெந்தவிதாரணவுமே இவருக்கு உயர் மட்ட இராஜதந்திரப் பதவிய்ய வழங்கப் பரிந்துரைத்திருந்தனர்.

சரத் பொன்சேகாவும், மகிந்த ராஜபக்ஷவும் போட்டியிட்ட ஜனாதிபதித் தேர்தல் நடப்பதற்கு முன்னதாக, 2010 ஜனவரி மாதம், மேஜர் பிரபாத் புலத்வத்தவுக்கு இராஜதந்திரப் பதவி வழங்குமாறு பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய, மேஜர் புலத் வத்தவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இராஜதந்திர கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டு, நுழைவிசைவு மற்றும் விமானப் பயணச்சீட்டுகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தன.

எனினும், 2010 பெப்ரவரி நடுப்பகுதியில், அவர் வெளிநாட்டுக்குப் புறப்பட்டுச் செல்வதை காலவரையறையின்றி பாதுகாப்பு அமைச்சு திடீரென இடைநிறுத்தியது.

2009ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பாக மேஜர் புலத்வத்தவின் கீழ் செயற்பட்ட கன்னேகெதர பியவன்ச என்ற இராணுவ சிப்பாய் ஒருவரிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கேள்வி எழுப்பியதையடுத்தே, இந்த திட்டம் மாற்றப்பட்டது.

அப்போது, குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் இருந்து அந்த விசாரணை திடீரென பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றப்பட்டிருந்தது.


தற்போது, இந்த விசா ரணை மாற்றப்பட்டதற்கான சூழல் மற்றும் மேஜர் புலத் வத்தவின் வெளிநாட்டுப் பயணம் நிறுத்தி வைக்கப்பட்டதற்கான சூழல் என்பன குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரித்து வருகின்றனர்.

மேஜர் புலத்வத்த தலைமையிலான இராணுவ அணியினர் லசந்த விக்கிரமதுங்க படுகொலையிலும் தொடர்புபட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர். (இ-7)

## 'நான் எச்சரிக்கை மணி எழுப்புகிறேன்'

# இராணுவப் புலனாய்வுப் பிரிவு முற்றாகச் செயலிழந்து விட்டது

## கவலைப்படுகிறார் கமால் குணரட்ன



இலங்கையின் பலம் வாய்ந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவு இப்போது முற்றாக செயலிழந்துவிட்டதாக போர்க் குற்றம் சாட்டப்பட்ட ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.

பொரலஸ்கமுவவில் உள்ள விடுதி ஒன்றில் கடந்த சனிக்கிழமை நடந்த கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நான் ஒரு அனுபவமான படைவீரன், பொறுப்பு வாய்ந்த அதிகாரி என்ற வகையில், புலனாய்வுப் பிரிவு செயலிழந்துள்ளது என்பதை உணர முடிகிறது. இதுகுறித்து நான் எச்சரிக்கை மணி எழுப்புகிறேன்.

இலங்கையின் புலனாய் வுப் பிரிவு முன்னர் மிகப்பலமானதாக இருந்தது. அதற்குச்சிறந்த உதாரணம் மலேசியாவில் இருந்து கே. பியை கைது செய்து இலங் கைக்குக் கொண்டு வந்ததைக் குறிப்பிடலாம். அத்தகைய பலம் மிக்க புலனாய்வுப் பிரிவு இப்போது செயலிழந்து போயுள்ளது.

படுகொலைகளை மேற் கொண்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு புலனாய்வு அதி காரிகள் இப்போது கைது செய்யப்படுகிறார்கள். நாட்டுக்காக போராடியவர்கள் சிறைகளுக்குள் அடைக்கப்படுகிறா ர்கள் என்றும் அவர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார். (இ-3)

# அமெரிக்காவுடன் மீண்டும் இரகசிய பாதுகாப்பு உடன்பாட்டுக்கு தயாராகிறது இலங்கை அரசு

(கொழும்பு)

போர் உதவி வசதிகளுடன் தொடர்புடைய இரகசிய உடன்பாடு ஒன்றை அமெரிக் காவுடன், செய்து கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் மீண்டும் முயற்சிப்பதாக ஜே.வி.பி. குற்றம்சாட்டியுள்ளது.

ஜே.வி.பியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா இதுகுறித்து கருத்து வெளியிடுகையில்,

"அமெரிக்காவுடன் இது போன்றதொரு இரகசிய உடன்பாடு 10 ஆண்டுகளுக்கு முன்னர் செய்து கொள்ளப்பட்டது. அந்த உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது அமைச்சரவைக்கோ, நாட்டுக்கோ தெரியாது.

அந்த உடன்பாட்டைப் புதுப்பித்துக் கொள்வதற்காக, அதுபோன்றதொரு நகர்வு, தற்போது முன்னெடுக்கப்படுகிறது. அமெரிக்காவுடனான இந்தப் பாதுகாப்பு உடன்பாட்டினால் இலங்கைக்கு பொருளாதார ரீதியாகவோ, பாதுகாப்பு ரீதியாகவோ நன்மை கிடைக்காது. ஆனால் இலங்கையின் சுதந்திரத்துக்கும், சுயாட்சிக்கும் பேரிடியாக இருக்கும்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் செய்தது போல, இந்த அரசாங்கமும் இரகசியமாக இந்த உடன்பாட்டில் கையெழுத்திட முனைந்தால், அதற்கு எதிராக மக்களைத் திரட்டி பெரும் போராட்டங்களை நடத்துவோம்.

போர்ச்சூழலில், விமான ங்கள், கப்பல்களுக்குத் தேவையான வசதிகளை அளிக்கும் இந்த உடன்பாடு செய்து கொள் ளப்பட்டிருந்தது. அப்போது இந்த உடன்பாட்டில் கோத்தபாய ராஜபக்ஷவும், அமெரி க்கா சார்பில் ரொபேர்ட் ஓ பிளேக்கும் கையெழுத்திட்டிருந்தனர்.

எனினும், இந்த உடன்பாட்டின் உள்ளடக்கம் குறித்து மகிந்த அரசாங்கம் பொது மக்களுக்கு எந்த தகவலையும் வெளியிடவில்லை" என்றும் ரில்வின் சில்வா மேலும் குற்றம் சாட்டியுள்ளார். (இ-3)

## இன்று ஒரு தகவல்

### என்ன சொன்னால் என்ன அர்த்தம்

எதைச் சொன்னாலும் அதில் உள்ளர்த்தம் வைத்துப் பேசுகிறவர்கள் விரும்பத்தகாதவர் கள்.

அதேபோல் யதார்த்தமாக எதையாவது சொன்னாலும் அதில் உள்ளர்த்தம் கண்டு பிடிக்கிறவர்களும் மோசமான பிறவிகளே. இவர்களைப் பற்றி நான் பேச்சே எடுக்க வில்லை.

ஆனால் மன விகற்பம் இல்லாமல் பேசுகிற சிலர் கூடத் தங்களையும் அறியாமல் தங்கள் மனத்தில் இருப் பவற்றை வெளிப்படுத்துகிறார் கள்.

அவற்றுக்குச் சில உதாரணங்களைப் பார்ப்போமா?

சொல்வது அர்த்தம்

அஞ்சு நிமிடம் லேட்டா – கிளம்பிட்டேன்

வந்திருந்தா என்னைப் மரியாதையா

பார்த்திருக்க முடியாது அஞ்சு நிமிடத்தில

கிளம்பிடு நோ பார்மாலிட்டீஸ்–நான் எக்கச்சக்கமா

பார்மாலிட்டி பார்ப்பேன்

நமக்கு என்னத்துக்குங்க அந்த வம் பெல் லாம்– நீ எப்படியோ போ!

என்னை ஆளை விடு!

சும்மா பார்த்திட்டுப் போலாம்னு வந்தேன் –

இப்ப விட்டுறேன். அடுத்த

தடவை விண்ணப்ப மனுவோடு .

வருவேன்.

நான் என்னங்க சாதாரண ஆளு – உன்

வாயால் என்னைப் பெரிய

ஆளுன்னு சொல்லுய்யா!

நீங்க மனசு வச்சா நடக்கும்ங்க் – மனசு வைக்கிற வரை உன்னை விடுவதாக இல்லை.

எனக்கு எல்லாமே நீங்கதானுங்களே! – என் கஷ்டத்தை மட்டும் நீதா ஏத்துக்கணும்!

உங்களைப் போல் உண்டா? ஏமாறப் போகிறவர் வேறு யார்?– என்னிடத்தில் உன்னைப் போல்

உங்க மனைவி ரொம்ப நல்லாக் காபி போடறாங்க– எப்ப வந்தாலும் எனக்குக்

கண்டிப்பா காபி வேணும்.

பிறரது பேச்சுகளை ஊன்றிக் கவனித்தால் அவை ஒவ்வொன்றும் அடைப்புக் குறிகளுக் குள் சில அர்த்தங்களைக் கொண்டிருக்கும். இத்தகைய கர்ப்பச் சொற்களை நாம் சரிவரப் புரிந்து கொண்டதால் மற்றவர்களை எடை போடுவது எளிது.

வெற்றியின் இரகசியங்களுள் முக்கிய மான ஒன்று மற்றவர்களைத் துல்லியமாக எடைபோடுவது.

லேனா தமிழ்வாணன்

# நெருக்கடியான நேரங்களில் சு.கவை நான் பாதுகாத்தேன் மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

மிகவும் நெருக்கடியான சந்தர்ப்பங்களில் தான் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாத்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

களுத்துறை அகலவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் சுதந்திரக் கட்சியைப் பாதுகாப்பதற்கு தாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டு 35 ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு இந்த மக்கள் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். (இ-3)




## சுபோஷவாக மாறிய திரிபோஷ!

திரிபோஷ தயாரிப்பு குழுமம் தமது தயாரிப்பை சுபோஷ என்ற புதிய நாமத்தில் சந்தைக்கு அறிமுகப் படுத்தியுள்ளது. திரிபோஷ மேலதிக தயாரிப்புக்களே, சுபோஷ தயாரிப்பாக சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

சுபோஷ தயாரிப்புக்களை மேற்கொள்ளும் தொழிற்சாலைகள் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன. இதனடிப்படையில் தயாரிப்பு கொள்ளளவு 900 மெற்றிக் தொன்னையும் தாண்டியுள்ளது என்று அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

சிறு தனியார் நிறுவனங்களுடன் போட்டித்தன்மையை ஏற்படுத்தக்கூடியதாக இது அமையும் என்று அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

இந்தத் தயாரிப்புப் பணிகளுக்கென வருடாந்தம் விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களிமிருந்து 20 ஆயிரம் மெற்றிக் தொன் சோளம், பத்தாயிரம் மெற்றிக் தொன் சோயா மற்றும் பத்தாயிரம் கொழுப்புச் சேர்க்கப்பட்ட பால் ஆகியன கொள்வனவு செய்யப்படுகின்றன. (இ-3)

# ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு கன்னத்தில் தடவிக்கொடுத்து அறைந்தது

## தே.சு.மு. ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழு அரசாங்கத்தின் கன்னத்தை தடவிக் கொடுத்து அறைந்துள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸ்ஸம்மில் தெரிவித்துள்ளார்.

இலங்கையை பயங்கரவாதத்தில் இருந்து காப்பாற்றிய இராணுவத்தினரை காட்டிக்கொடுப்பதற்கு நன்றி தெரிவித்து மனித உரிமை ஆணைக்குழு அரசாங்கத்தின் கன்னத்தில் தடவியும் கொடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

புறக்கோட்டையில் உள்ள தேசிய சுதந்திர் முன்னணியின் பிரதான அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவிலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 13ஆவது திருத்தத்தை முற்றாக அமுல்படுத்துதல், புதிய அரசியலமைப்புச் சட்டத்தை கொண்டு வருதல் மற்றும்உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை நியமித்தல் ஆகிய விடயங்களை எதிர்வரும் ஒக்டோபர் மாத்திற்குள் நிறைவேற்றுமாறு கூறி மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்கத்தின் கன்னத்தில் அறைந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கை வெளி யிடப்பட்டுள்ளது.

அதேபோல் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராத் அல் ஹுசைன் உரையொன்றையும் ஆற்றவுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் இலங்கை தொடர்பான பகுதிகளை ஆராயும் போது அவர்களின் தந்திரமான தேவை என்ன என்பது தெளிவாகும்.

2015 ஆம் ஆண்டு அமெரிக்காவின் யோசனையில் கூறப்பட்டுள்ள சில விடயங்களை நிறைவேற்றியுள்ளதை பாராட்டியுள்ளதுடன் நிறைவேற்றப்படாதவற்றை நிறைவேற்ற அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது.

கன்னத்தை தடவிக் கொண்டே கன்னத்தில்அறைந்துள்ளனர். கன்னத்தை தடவியது மாத்திரமே அரசாங்கத்திற்கு தெரிந்துள்ளது.



கன்னத்தில் அறைந்ததை பொறுத்துக் கொண்டு. கன்னத்தை தடவினார்களே என்று அரசாங்கம் மகிழ்ச்சியடைந்துள்ளது.

அமெரிக்க தலைமையிலான மேற்குலக நாடுகள் 2015 ஒக்டோபரில் இருந்து தமது இலக்கு நோக்கி முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர் என்பது எமக்கு தெளிவாகியுள்ளது எனவும் மொஹமட் முஸ்ஸம்மில் மேலும் தெரிவித்தார். (இ-3)

## கொலைக்குற்றம் சாட்டப்பட்ட இலங்கையரை விடுவிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யாமீனை கொலை செய்ய முயற்சித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள இலங்கையரை விடுதலை செய்வதற்கு உதவுமாறு அவரது உறவினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யாமீனை கொலை செய்ய முயற்சித்ததாக குற்றம் சுமத்தப்பட்டு இலங்கையர் ஒருவர் 2015ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், குறித்த நபரின் உறவினர்களே அவரை விடுதலை செய்வதற்கு உதவுமாறு ஜனாதிபதியிடம்வேண்டுகோள் விடுத்துள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருவதாகக் கூறிய நண்பரின் வார்த்தையை நம்பி குறித்த இலங்கையர் மாலைதீவுக்கு சென்றதாகவும், எனினும் குறித்த நண்பர் அவரின் பணத்தினை கொள்ளையிட்டு தப்பிச் சென்று விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யாமீனை கொலை செய்ய முயற்சித்ததாக கருதி குறித்த இலங்கையர் கைது செய்யப்பட்டார்.

எனினும்,சந்தேகநபரை அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்திய போது, சாட்சியாளர்களுக்கு அவரை அடையாளம் காண முடியவில்லை.

இருப்பினும், ஜனாதிபதியை கொல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் நீண்டகாலமாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அவரை விடுதலை செய்வதில், இராஜதந்திர ரீதியான தலையீடு அவசியம் என அந்நாட்டு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்

கடந்த ஐந்து மாதங்களாக தண்டனை இன்றி குறித்த இலங்கையரை மாலைதீவு அதிகாரிகள்தடுத்து வைத்துள்ளனர். எனவே அவரின் விடுதலைக்காக உதவுமாறு ஜனாதிபதியிடம் குறித்த நபரின் உறவினர்கள் வலியுறுத்தியுள்ளனர். (இ-3)

# ஜெயாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்து எய்ம்ஸ் வைத்தியசாலை அறிக்கை கையளித்தது



(டில்லி)

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் குறித்த அறிக்கையை எய்ம்ஸ் வைத்தியசாலை தமிழக அரசுக்கு அளித்துள்ளது.

ஜெயலலிதா அப்பலோ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற போது, டில்லியிலிருந்து எய்ம்ஸ் வைத்தியர்கள் 5 முறை சென்னை வந்து பரிசோதித்து சிகிச்சை அளித்தனர்.

ஒக்டோபர் 5 முதல் டிசெம்பர் 6 ஆம் திகதி வரை மொத்தம் 5 முறை எய்ம்ஸ் மருத்துவர்கள் குழு சென்னை வந்தது.

மருத்துவர் கில்நானி தலைமையிலான குழுவினர் ஜெயலலிதாவுக்கு வந்து சிகிச்சை அளித்தனர்.

அப்போது ஜெயலலிதாவுக்கு தரப்பட்ட சிகிச்சைகள் மற்றும் ஜெயலலிதாவின் உடல்நிலை குறித்த அறிக்கை தமிழக சுகாதாரத்துறை செயலர் ராதா கிருஷ்ணனிடம், எய்ம்ஸ் வைத்தியசாலை நிர்வாகம் நேற்று ஒப்படைத்தது.

டில்லி எய்ம்ஸ் துணை இயக்குநர் ஸ்ரீநிவாஸ் டில்லியில் தமிழக சுகாதாரத்துறை செயலர் ராதாகிருஷ்ணனிடம் இது தொடர்பான அறிக்கைகளை அளித்தார்.

ஜெயலலிதாவிற்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் குறித்த அறிக்கையை அளிக்குமாறு தமிழக அரசு எய்ம்ஸ் நிர்வாகத்தை நேற்று முன்தினம் கேட்டுக் கொண்டது.

இதனையடுத்து தமிழகத்தின் வேண்டுகோளுக்கிணங்க ஜெயலலிதாவிற்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் குறித்த அறிக்கை ராதா கிருஷ்ணனிடம் அளிக்கப்பட்டுள்ளது. (இ-12)

## 20 மாணவர்கள் வைத்தியசாலையில்

மாத்தறை பகுதியில் இருந்து சுற்றுலா சென்ற பாடசாலை மாணவர்கள் 20 பேர் திடீர் சுகயீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இவர்கள் இவ்வாறு தங்காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இவர்களில் 15 மாணவர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாகவும், எனினும் அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும். குறித்த வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

உணவு விஷமடைந்தமையே இதற்குக் காரண மாக இருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள, மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலையின் பணிப்பாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-3)

# அரச காணியும் பொது மக்களும்

காணி நிலம் வேண்டும்- பராசக்தி காணி நிலம் வேண் டும் - பாரதியாரின் முழக்கம் இன்று கேப்பாப்பிலவு வரை ஒலித்துக் கொண்டிருக்கிறது. யுத்தம் விட்டு சென்ற வடுக்க ளில் காணி ஆக்கிரமிப்பும் அதனோடு தொடர்புபட்ட பிரச் சினைகளையும் கூறமுடி யும். சட்ட உதவி ஆணைக் குழு கையாளும் பிரச்சினை களில் பிரச்சினைகள் யாவும் அரசகாணிகளையே பெரும் பாலும் சார்ந்து இருப்பதை காணமுடிகிறது.

அரச காணிகளின் பங் கீடு மற்றும்அதனோடுஇணை ந்த விடயங்களில் மக்கள்அவ தானம் செலுத்த வேண் டும்.

பூமியின் மேற்பரப்பில் அமைந்துள்ள ஒரு குறித்த பகுதி நிலம், அதன் மேல் அமைக்கப்பட்டுள்ள கட்ட டங்கள், நிலத்துடன் நிரந் தரமாக இணைக்கப்பட்டுள்ள இணைப்புக்கள் மற்றும் பயிர்கள் மேலும் நிலத்தின் மீதுள்ள அக்கறைகள், உரி மைகள் அனைத்தும் காணி என்ற வகைக்குள் அடங்கும்.

அரச காணி ஒன்றை பெற்றுக்கொள்ள வேண்டு மாயின் பிரதேச செயலகத்தில் காணியற்றவர் பட்டியலில் பெயரை பதிவு செய்வதன் மூலம்காணித்துண்டொன்றை பெற்றுக் கொள்ள முடியும். ஆனாலும் எதிர்காலத்தில் ஏதாவது ஓர் வழியில் காணி கிடைக்கக்கூடிய சந்தர்ப்ப மற்றவர்கள் மற்றும் விவா கமானவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

காணிக்கச்சேரி மூலம் தெரிவு செய்யப்பட்ட காணி யற்றவர் அரச காணித்துண் டு ஒன்றை ஆட்சி செய்து அபி விருத்தி செய்வதற்குரிய அனு மதிப்பத்திரம் அந்த இடத் திற்குரிய பிரதேச செயலகத் தால் வழங்கப்படும். ஆனா லும் சட்டரீதியற்ற முறையில் அரச காணிகளின் கொள் வனவு மற்றும் வெளிப் படுத் தல் உறுதி மூலம் ஆட்சிப்ப டுத்தல் என்பன இப் பிரதேசத் தில் இடம் பெற்றுக் கொண்டி ருப்பதை காணமுடிகின் றது.

எனினும் அரச காணி க்கு அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் பிரதேச செயலாளர் ஆவார்.

பல்வேறுபட்ட நிபந்தனை களுக்கு அமைய 464ம் அத் தியாயமான காணி அபிவி ருத்திக் கட்டளைச்சட்டத்தின் 19 (2) ஆம் பிரிவின் கீழ் காணி அபிவிருத்தி கட்டளைச்சட்ட அனுமதிப்பத்திரம் வழங்கப் படுகின்றது (LDO-Permit).

கடந்த யுத்தத்தின் போது கணவனை இழந்த பெண் கள் காணியில் வசிப்பதில் பல்வேறுபட்ட தடங்கல் இருப் பதனை குறிப்பிட்டு கூறமுடி யும். விசேடமாக அனுமதிப் பத்திர உரிமையாளர் தனது வாழ்க்கைத்துணையினை அல்லது இரத்த உறவினர் களை பின்னுரிமையாளராக நியமிக்கலாம். அப்படி நியமி க்காமல் இறக்கும் சந்தர்ப் பத்தில் காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் மூன் றாம் அட்டவணையின்படி காணிக்கான பின்னுரிமை வழங்கப்படும்.

குறித்த அட்வணையின் படி (1) மகன் (2) மகள் (3) பேரன் (4) பேர்த்தி (5) தந்தை (6) தாய் (7) சகோதரன் (8) சகோதரி (9) மாமா (10) மாமி (11) மருமகன் (12) மருமகள். இதன்படி உற வினர் எனப்படுவது திரு மணத்தின் மூலம் ஏற்படும் உறவினர் அன்றி இரத்த உறவு எனக் கருதப்படும். ஆனாலும் பின்னுரிமையா ளரை நியமிப்பது மிகப் பய னுள்ளதாக அமையும்.

பின்னுரிமையாளர் ஒரு வரை நியமிக்க வேண்டு மாயின் LDO-Permit - கோரிக்கை கடிதத்தின் மூலம் அளிப்பு எனில் LC – 155 (இது தொடர்பில் மாவட்ட பதிவுக் காரியாலயத்தில் தக வல்களை பெற்றுக் கொள்ள முடியும்) மூன்று பிரதிகளை மாவட்ட காணி பதிவுக் காரியாலயத்தில் பதிவு செய்ய வேண்டும்.

அத்துடன் அறுதி மரண விருப்பு வாக்கு மூல மாக வும் நியமித்தல் மற்றும் மாற்றம் செய்யவும் முடியும்.

இதன் தொடர்ச்சியாக குறிப்பிட்ட காலத்திற்கு அனு மதிப்பத்திரங்களை வைத்தி ருப்பவர்களுக்கு அரச அளிப்பு (Grant) மூலம் அரசு தனது மக்களுக்கு காணிகளை வழங்க முடியும். காணி அபி விருத்தி கட்டளைச் சட்டத்தி ற்கு அமைவாக அளிப்பின் பெயர்கள் காலத்திற்கு காலம் மாறுபடும்.

கடந்த காலங்களில் ஜய பூமி, சுவர்ணபூமி, ரத்ன பூமி, ரன்பிம போன்ற பெயர் களில் வழங்கப்பட்டுள்ளது.

அளிப்பு ஒன்றினை பிரி விடுவதற்கோ அல்லது உரிமை மாற்றத்தினை மேற்கொள் ளவோ பிரதேச செயலாள ரின் எழுத்து மூலமான முன் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

அத்துடன் LDO அனு மதிப்பத்திரம், LDO அளிப்பு, வருடாந்த அனும திப் பத்திரம், குத்தகை முறி, அளிப்பு, பூரண அளிப்பு அத் துடன் விசேட அளிப்பு போன்ற ஆவணங்கள் ஏற்றுக்கொள் ளக்கூடிய ஒன்றாகும்.

அரச காணி தொடர்பில் பிரதேச செயலகங்களில் உள்ள காணிக்கிளை, மாகாண காணி ஆணை யாளர் திணைக்களம் மற் றும் சட்ட உதவி ஆணைக் குழு காரியாலயங்களில் மேல திக தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

ம.ஜெயந்தன்
சிரேஷ்ட நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர்
சட்ட உதவி ஆணைக்குழு

## களுத்துறை சிறை பேருந்து மீதான
## துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் முன்னாள் சிப்பாய்களுக்கு தொடர்பு

களுத்துறையில் சிறைச் சாலை பேருந்து மீது மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் முன் னாள் இராணுவ சிப்பாய் களுக்கும் தொடர்பு இருப் பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஊடகம் ஒன் று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது. கடந்த மாதம் 27ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஏழு பேர் கொல்லப்பட்டனர்.

சிறைச்சாலை அதிகாரி கள் இருவர் உள்ளிட்ட ஏழு பேர் இந்த சம்பவத்தில் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதல் சம்பவம் தொடர் பில் பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்துள்ளனர்.

விசாரணைகளின் அடிப் படையில் அங்கொட லொக்கு என அடையாளம் காணப்பட்ட பாதாள உலகக் குழுத் தலைவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும், பாதாள உலகக் குழுக்களுக்கு இடை யில் காணப்பட்ட பகைமையே இந்த துப்பாக்கிச் சூட்டு சம்ப வத்திற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த துப் பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கு விடுதலைப்புலிகள் பயன் படுத்திய ஆயுதங்களை கொண்டே தாக்குதல் நடத் தப் பட்டுள்ளதாக அமைச்சர் சம் பிக்க ரணவக்க நேற்று முன் தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## ஜே.வி.பியால் உள்ளூராட்சி தேர்தலுக்கு முகம் கொடுக்க முடியாது-கூட்டு எதிரணி

மக்கள் விடுதலை முன் னணியால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முகங் கொடுக்க முடியாது என்ப தால் தேர்தலை பிற்போட மக்கள் விடுதலை முன் னணி ஒத்துழைப்பதாக கூட்டு எதிர் க்கட்சி தெரிவித்துள்ளது.

களுத்துறையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பாராளு மன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார இதனைத் தெரிவித்தார்.

எனினும் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்தக் கோரி தாம் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவ தாகஅவர் மேலும் தெரி வித்தார். (இ-3)


## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1007

Search for people, places and things Nagendram Home

சுபாங்கி





கிரி




பியா




ரவி




கிருணி




ராதை




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# விமலுக்கு கிடைத்த வாய்ப்பு



சிறைச்சாலையில் தனது பாதுகாப்பு நிலை தொடர்பிலும், நிதி மோசடி விசாரணை பிரிவினரின் விசாரணைகளின் போது தனக்கு ஏற்பட்ட அநீதி தொடர்பிலும் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க அனுமதி தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நேற்று நீதிமன்றில் அனுமதி கோரியுள்ளார்.

விமலுக்கு பதிலாக நேற்று நீதிமன்றில் சட்ட ஆலோசகர் முன்னிலையாகாத காரணத்தினால் விமல் வீரவன்ச இந்த அனுமதியை கோரியுள்ளார். இந்நிலையில், அறிக்கையை சமர்ப்பிக்கு மாறு கொழும்பு கோட்டை நீதவான் விமல் வீரவன்சவுக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

அரச வாகனங்களை முறைகேடாக பயன்படுத்திய, குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த விமல், நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# தமிழினப் படுகொலைக்கு சர்வதேச விசாரணையை இந்தியா கோர வேண்டும்

ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமை கூட்டத்தொடரில் இலங்கைக்கு ஆதரவளிக்காமல் ஈழத்தமிழ் இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி விசாரணையை இந்தியா கோர வேண்டும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு வைகோ மின்னஞ்சல் மூலமாக கடிதம் ஒன்றை நேற்று அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"ஜெனிவாவில் நடைபெற்று வருகின்ற மனித உரிமைக் குழுக் கூட்டத்தில் இலங்கைத் தீவில் உள்ள தற்போதைய சூழ்நிலையையும், இந்திய அரசு மேற் கொள்ள வேண்டிய நிலைப்பாடு குறித்தும் உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

1955ஆம் ஆண்டிலிருந்து இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஈழத் தமிழர்கள் மீது கொடூரமான தாக்குதல்களை சிங்கள அரசு தொடுத்த தோடு, ஈழத்தமிழ் இனத்தை அழிக்க இனப்படுகொலை செய்து வந்தது.

1999 ஆம் ஆண்டில் அப்பொழுது பிரதமராக இருந்த அடல் பிகாரி வாஜ்பாய் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, இலங்கைக்கு இந்திய அரசு எந்தவிதமான இராணுவ உதவியும் செய்வது இல்லை என்றும், ஆயுதங்களை விற்பனை கூட செய்வது இல்லை என்றும் அந்தக் கூட்டத்தில் ஒருமனதாக எடுக்கப்பட்ட முடிவை பிரகடனம் செய்தார்.

ஆனால் அந்த முடிவுக்கு நேர் எதிராக பின்னர் மத்தியில் ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அனைத்து விதமான இராணுவ உதவியையும் இலங்கை அரசுக்குச் செய்ததோடு, ஆயுதங்களும் வழங்கியது. இலங்கை அரசுடன் இருநாட்டு கடற்படை தகவல் பரிமாற்ற ஒப்பந்தமும் செய்தது.

2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐ.நாவின் அன்றைய பொதுச்செயலாளர் பான் கீ மூன், மர்சுகி தாருஸ்மன் தலைமையில் அமைத்த மூவர் குழு 190 பக்கங்கள் கொண்ட அறிக்கையை தாக்கல் செய்தது. அந்த அறிக்கையில், வயது முதிர்ந்தோர், நோயாளிகள், குழந்தைகள், ஆயுதம் ஏந்தாத பொதுமக்கள் உள்ளிட்ட ஒரு இலட்சத்து 37 ஆயிரம் ஈழத் தமிழர்கள் 2009 ஆம் ஆண்டில் சிங்கள இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களை ஆதாரத் தோடு வெளியிட்டது.

ஆனால், இந்தியாவின் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு மனித உரிமைக் குழுவில் 2009 மே மாதத்தில் மிகவும் வஞ்சமாக இலங்கை அரசைப் பாராட்டி மனித உரிமைக் குழுவில் தீர்மானம் போட உதவியது.

2015 ஆம் ஆண்டில் மனித உரிமைக் குழுவில், 2009 இல் சிங்கள இராணுவம் நடத்திய போர்க்குற்றங்களை விசாரிப்பதற்கு சுதந்திரமான பாரபட்சமற்ற விசாரணையை சர்வதேச நீதிபதிகளைக் கொண்டு நடத்துவதற்கு தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால், அத் தகைய விசாரணை நடத்த இலங்கை அரசு ஒத்துழைக்காமல் மறுத்துவிட்டது.

மேலும் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் 2009இல் நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறித்து விசாரணை செய்ய இலங்கைக்குள் எந்த வெளிநாட்டு நீதிபதியையும் அனுமதிக்க மாட்டோம் என்று அறிவித்தனர்.

ஒரு இலட்சத்துக்கு மேற் பட்ட தமிழர்கள் காணாமல் போய்விட்டனர். 90 ஆயிரம் தமிழ்ப் பெண்கள் விதவைகளாகிவிட்டனர். வடக்கு மாகாணத்தில் மட்டும் 60 ஆயிரம் ஏக்கர் பூமியை சிங்கள இராணுவத்தினர் ஆக்கிரமிப்புச் செய்துகொண்டு, சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்திவிட்டனர்.

கண்துடைப்புக்காக வெறும் 3 ஆயிரம் ஏக்கர் நிலம்தான் ஈழத் தமிழர்களுக்கு திருப்பி அளிக்கப்பட்டது.

இந்தப் பின்னணியில் இந்த ஆண்டு 2017 மார்ச் 3ஆம் திகதி ஐ.நாவின் மனித உரிமை ஆணையர் ஹுசைன் ஒரு இலட்சம் ஈழத்தமிழர்கள் போரில் கொல்லப்பட்டனர்.

இந்த யுத்தத்தில் நடை பெற்ற கொலைகள் குறித்து விசாரிக்க முன்வராமல் சிங்கள அரசு தயக்கம் காட்டி வருகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஜெனிவாவில் நடைபெற்று வரும் மனித உரிமைக் குழுக் கூட்டத்தில் முந்தைய ஐக்கிய முற் போக்குக் கூட்டணி அரசு மேற்கொண்ட தவறான அணுகுமுறையை இந்திய அரசு பின்பற்றக் கூடாது.

எந்தக் காரணத்தை முன்னிட்டும் இலங்கை அரசுக்கு இந்திய அரசு உதவக் கூடாது.

அப்படி உதவினால் உலகெங்கும் உள்ள தமிழர்கள் உள்ளத்தில் தாங்க முடியாத ரணத்தையும், வேதனையையும் ஏற்படுத்தும். எனவே, இந்திய அரசு 2009இல் நடைபெற்ற ஈழத் தமிழர் இனப்படுகொலை குறித்து சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என உங்களைக் கேட்டுக்கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-12)

# மகளிர் தினத்தை முன்னிட்டு அனுபவப் பகிர்வு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு முறைசாரா தொழிற்றுறையில் (informal sector) ஈடுபடும் பெண்கள் அடைந்துள்ள முன்னேற்றங்கள், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்களை வெளிக்கொண்டு வரும் நோக்கில் அனுபவப் பகிர்வு நிகழ்வு ஒன்றை நாளை புதன்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணி வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் 657/1 என்ற முகவரியிலுள்ள தொடர்பகத்தில் நடைபெறும். (இ

# செய்தித்துளிகள்

## சஷி வெல்கமவுக்குப் பிணை

இலங்கை போக்குவரத்து சபையின் நிதிகளை தவறாக பயன்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இலங்கை போக்கு வரத்து சபையின் முன்னாள் தலைவர் சஷி வெல்கமவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, கொழும்பு மேல் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

வெல்கமவை, இரண்டு இலட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா ஐந்து இலட்சம் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுவிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மேலும், வெல்கமவின் வெளிநாட்டு பயணங்களுக்கு தடை விதித்து நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-3)

## அதிபர்களுக்கு இராணுவப் பயிற்சி

தற்போதைய அரசாங்கமும், அதிபர்களுக்கு இராணுவப் பயிற்சியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. அதனடிப்படையில், தென் மாகாணத்தை சேர்ந்த பாடசாலை அதிபர்கள், எதிர்வரும் 22ஆம் திகதியன்று, இவ்வாறான பயிற்சிக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று ஆசிரியர்-அதிபர் தொழிற்சங்க ஒன்றியம் குற்றம்சாட்டியுள்ளது. இதேவேளை, கடந்த அரசாங்க ஆட்சியின் போது, அதிபர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டதுடன் அவர்கள் கேணல் தரத்துக்கு தரமுயர்த்தப்பட்டனர். இந்தச் செயற்பாட்டுக்கு ஐக்கிய தேசியக் கட்சி கடும் எதிர்ப்பினை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## எதிர்கால அரசியல் தொடர்பில் மகிந்தவுடன் முஸ்லிம்கள் பேச்சு

கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையிலான விசேட சந்திப்பு இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு இடையிலான இந்த பேச்சுவார்த்தையின்போது, எதிர்கால அரசியல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளது. கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கு இணங்கவே குறித்த சந்திப்பு இடம் பெறவுள்ளது. அதன்படி மேற்படி சந்திப்பு கொழும்பு விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதியின் இல்லத்தில் இன்று மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ-3)

## நியூசிலாந்தின் வர்த்தக குழு இலங்கைக்கு விஜயம்

நியூசிலாந்தின் வர்த்தக பிரதிநிதிக் குழு, இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. இலங்கை - நியூசிலாந்து ஆகிய இரு நாடுகளுக்கு இடையிலாள உறவை வலுப்படுத்தும் நோக்கிலேயே இந்த விஜயம் அமைந்துள்ளது. நியூசிலாந்தின் உணவு பாதுகாப்பு அமைச்சர் டேவிட் பெனட் மற்றும் நியூசிலாந்தின் முன்னணி நிறுவன பிரதிநிதிகளும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர். இரு நாடுகளுக்கும் இடையிலான் ஏற்றுமதி சந்தைப் பொருட்கள் தொடர்பிலான கலந்துரையாடல்களும் இதன்போது இடம் பெறவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-3)

## இறப்பரின் விலை அதிகரிக்கும்

இறப்பரின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அகலவத்தை இறப்பர் ஆராய்ச்சி நிலையத்தின் தொழில்நுட்ப அதிகாரி அமில நிரங்க தெரிவித்தார்.

களுத்துறை மாவட்ட இறப்பர் செய்கையாளர்கள் தற்போது ஒரு கிலோ இறப்பரை 350 ரூபாவிற்கும் ஒரு கிலோ ஒட்டுப் பாலை 150 ரூபாவிற்கும் விற்பனை செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்று தெரிவித்தார். மூன்று வருடங்களுக்குப் பின்னர் இவ்வாறான விலை யேற்றம் இடம்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-3)

## வெள்ளவத்தை பகுதியில் ரயில் மோதி ஒருவர் பலி

கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த விபத்தானது நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளதாக வெள்ளைவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர். பாணந்துறையில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற ரயிலில் மோதியே குறித்த நபர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த நிலையில் அவசரமாக களுபோவில வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மேலும் இவ்வாறு உயிரிழந்தவர் தொடர்பில் தகவல்கள் இன்னும் கிடைக்கவில்லை என தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# இயக்கத்திறன் கொண்ட வவுனியா நகர் வடமாகாணத்தின் நுழைவாயில்



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

வவுனியா நகரம் இன்று இயக்கத்திறன் கொண்டதாகவும் வடமாகாணத்தின் எல்லாமாவட்டங்களுக்கும் நுழைவாயிலாக இருக்கின்றது.இது வடமாகாணத்தின் இரண்டாவது பெரிய நகராகும். சமூக, பொருளாதார செயற்பாடுகளில் முக்கிய இடம் வகிக்கிறது. முப்பது வருட காலத்தில் வடமாகாணத்தின் பெரும் பகுதி பெரிய அழிவுக்குட்பட்டது.வவுனியா நகரையும் அதனை சூழவுள்ள பகுதிகளில் யுத்த அழிவுகள் மிகக்குறைவாகும்.யுத்த காலத்தில் வவுனியா நகர் அதன் இடவமைவு காரணமாக குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெற்று இருந்துடன் இக் காலப்பகுதியில் வளர்ச்சியும் அடைந்தது. யுத்தத்தாலும்,வலிந்த இடப்பெயர்வால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட மக்கள் இங்கு அடைக்கலம் தேடி வந்தனர். உள்ளக இடப்பெயர்வுக்கு உட்பட்டோரின் ஒருபகுதியினர் பெரிய கொழும்புக்கு செல்ல ,இன்னுமொரு பிரிவினர் வவுனியா நகரிலும் நகரை அண்டிய பகுதிகளில் நிரந்தரமாக குடியேறினர்.யுத்தகாலத்தில் ஏ 9 பாதை போக்குவரத்து தடைப்பட்டிருந்த நிலையிலும் வடபகுதி புகையிரதப் பாதை முற்றாக சேதம் அடைந்த நிலையில் வட பகுதி மக்கள் வவுனியா ஊடாகவே தென் இலங்கைக்குசென்றனர் .மேலும் வவுனியா நகர் முக்கிய வர்த்தக சேவை மையமாகவும் வளரலாயிற்று. யுத்தத்தின் காரணமாக வவுனியா நகர் இராணுவ செயற்பாட்டு மையமாகவும் மாறியது.

மேற்குறிப்பிட்ட பின்புலத்தில் வவுனியா நகரின் தோற்றம் வளர்ச்சியை நோக்கின் 19 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியரால் உருவாக்கப்பட்ட வவுனியா நிர்வாக மாவட்டத்தின் நிர்வாகமையமாக இருந்தது. வவுனியா குளத்தை அண்டி இந்நகர் ஆரம்பமாகியது. 1898 இல் வவுனியா நிர்வாக மாவட்டம் இல்லாது ஒழிக்கப்பட்டு வவுனியா மாவட்டத்தின் பனங்காமம் பகுதிமன்னார்மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. வவுனியா மாவட்டத்திற்கு உட்பட்ட சின்னா செட்டிக் குளப் பிரிவுகள், கிழக்கு மூலைப்பிரிவுகள், மேல் பற்றுக்கள் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மாற்றப்பட்டு பின்னர் வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு என இருபிரிவுகள் முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் உருவாக்கப்பட்டன.1901 ஆம் ஆண்டு வவுனியா நகர் சுகாதார சபை நகராக மாற்றப்பட்டது. இவ்வாண்டில் இந்நகரில் 566 மக்கள் இருந்துள்ளனர்.

வவுனியா நகரின் குடித்தொகை சமூக, பொருளாதார செயற் பாட்டு வளர்ச்சிகளை நன்கு விளங்கிக் கொள்ள வவுனியா மாவட்டத்தின் குடித் தொகை மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை அறிய வேண்டும்.

அட்டவணை I இல் இன்றைய மாவட்ட பரப்பிற்கான குடித் தொகை, குடி கணிப்பு, இடை வளர்ச்சி தரப் பட்டுள்ளன

வவுனியா மாவட்டத்தின் குடித் தொகை 1891-1946 ஆண்டு வரை மிகவும் குறைவாக இருந்ததுடன் வளர்ச்சியும் மிகவும் குறைவாகவே இருந்தது. இக்காலப்பகுதியில்

அட்டவணை I

| ஆண்டு | குடித்தொகை | குடி இடைகணிப்பு வேறுபாடு எண்ணில் | குடி இடை கணிப்பு வேறுபாடு எண்ணில் |
|---|---|---|---|
| 1891 | 7174 | - | - |
| 1901 | 7742 | +568 | +7.9 |
| 1911 | 9055 | +1313 | +17.0 |
| 1921 | 9239 | +174 | +1.9 |
| 1931 | 10063 | +824 | +8.9 |
| 1946 | 12852 | +1789 | +17.8 |
| 1953 | 20173 | +7321 | +57.0 |
| 1963 | 43062 | +22889 | +113.5 |
| 1971 | 60805 | +17433 | +40.5 |
| 1981 | 95904 | +35399 | +58.5 |
| 2001 * | 142827 | +46923 | +48.9 |
| 2012 | 172115 | +29288 | + 20.5 |

மூலம் இலங்கைக் குடிக் கணிப்புக்கள் (* பூரணமற்றது)

மலேரியாவின் தாக்கம் அதிக மாக இருந்ததுடன் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஏதும் நடைபெறவில்லை. மேலும் இங்கு பிறப்பு விகிதம் உயர்வாகவும் இறப்பு விகிதம் உயர்வாக இருந்ததால் அதிகரிப்பு மிகக் குறைவாக இருந்தது.

1946க்கு பின்னர்நாட்டில்உணவு பொதுவிநியோக முறையில் அமுல் செய்யப்பட்டதால் மக்களின் ஊட்டச்சத்து, தேகாரோக்கியம் அதிகரித்தது. இக்காலப்பகுதியில் மலேரியா மற்றும் தொற்றுநோய்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. 1946க்கு பின்னர் உயர்வான பிறப்பு வீதம் தொடர இறப்பு வீதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டது. மேலும் வவுனியா மாவட்டத்திற்கு குடியுள் வரவும் ஏற்படலாயிற்று. குடியுள் வரவு வவுனியா நகர் உள்ளடக்கிய வவுனியா தெற்கு தமிழ் பிரிவிலேயே அதிகமாக ஏற்பட்டது.

வவுனியா தெற்குபிரிவில் 1946 க்குப் பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து மக்கள் குடியேறலாயினர். 1970களிலும் 1980களிலும் இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட மலையகத் தமிழ்மக்கள் வவுனியா மாவட்டத்துக்கு வரலாயினர். சிங்கள மக்களின் குடிவருகை மிகக்குறைவாக இருந்தாலும் 1980 களில் விருத்திசெய்யப்பட்ட வெலிஓயா (மணலாறு) குடியேற்றத்திட்டம் கூடுதலாக வவுனியா வடக்கு பிரிவிலேயே ஏற்பட்டது. வவுனியா வடக்குப் பிரிவில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் வாழும் பரப்பு தற்பொழுது முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் இருக்கின்றதால் இக்குடியேற்றம் தொடர்பான புள்ளிவிபரங்கள் வவுனியா மாவட்ட புள்ளி விபரக்கையேடு காட்டவில்லை.

அட்டவணை II

வவுனியா தெற்கு தமிழ் பிரிவின் குடித்தொகையும், குடிக்கணிப்பு இடை அதிகரிப்பு

| ஆண்டு | குடித்தொகை | குடிக்கணிப்பு எண்ணில் | இடைஅதிகரிப்பு விகிதத்தில் |
|---|---|---|---|
| 1946 | 8212 | -- | -- |
| 1953 | 13444 | +5232 | +38.9 |
| 1963 | 23231 | +9787 | +72.7 |
| 1971 | 31563 | +8332 | +35.87 |
| 1981 | 48795 | +17222 | +54.56 |
| 2012 | 117533 | +68745 | +140.9 |

மூலம்: இலங்கைக் குடிகணிப்புக்கள்

1981-2012 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் வவுனியா தெற்குதமிழ்பிரிவின்மக்கள்தொகை 48795 பேரில் இருந்து 117533 பேராக அதிகரித்தது. இம் மக்களில் மிகப்பெரும்பாலோர் உள்நாட்டினுள் இடம்பெயர்ந்தோர் (IDPs) இம் மக்கள் யாழ்ப்பாணம், வன்னிப்பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். இவ்வாறு இடம்பெயர்ந்தோர் யுத்தம் முடிந்த பின்னர் படிப்படியாக தங்கள் கிராமங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். வவுனியா தெற்கு தமிழ் பிரிவின் மக்கள் தொகை அதிகரிப்பு தற்பொழுது குறைவாக இருக்கின்றது.

வவுனியா தெற்கு சிங்களப் பிரிவில் 2012இல் 13118 பேர் இருந்தனர். இப்பிரிவில் சிங்கள மக்களின் விகிதாசாரம் 99.31% மாகும். இப்பிரிவில் 2012க்குப் பிறகு பெரிய எடுப்பில் பிறமாவட்ட சிங்கள் மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். இப்பிரிவின் அண்மைய தரவுகளின் படி 25000 சிங்கள மக்கள் வாழ்வதாகத் தெரிகின்றது. இக்குடிசன அதிகரிப்பு மாவட்ட இன விகிதாசாரத்தை பாதிப்பதுடன் வன்னி, வவ்னியா மாவட்ட அரசியல் நிலைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும்.

1946 இல் இருந்து இன்று வரை வவுனியா மாவட்டத்தின் குடித் தொகை அதிகரிப்பில் குடியுள்வரவு முக்கிய இடத்தைப் பெற்று வருகின்றது.

அட்டவணை III

| ஆண்டு | குடித்தொகை | குடித்தொகை எண்ணில் | மாற்றம் விகிதத்தில் |
|---|---|---|---|
| 1901 | 566 | - | - |
| 1911 | 808 | +242 | +42.7 |
| 1921 | 1023 | +215 | +26.6 |
| 1931 | 1368 | +345 | +33.72 |
| 1946 | 1082 | -286 | -20.7 |
| 1953 | 2879 | +1797 | +166.6 |
| 1963 | 7115 | +4236 | +235.7 |
| 1971 | 15639 | +8524 | +201.2 |
| 1981 | 18511 | +2872 | +18.4 |
| 2012 | 39000 * | +20489 | +110.7 |

மூலம் இலங்கை குடிசனத்தொகை *கணிப்பீடு கிட்டிய தைகை

வவுனியா நகரின் குடித்தொகை, குடித் தொகைக் கணிப்பு இடை வேறுபாடுகள் அட்டவணை III இல் காட்டப்பட்டுள்ளது. நகரின் குடித்தொகை 20 ஆம் நூற்றாண்டில் முதல் அரைப் பகுதியில் மிகவும் சிறிய தொகையாக இருந்ததுடன் வளர்ச்சியும் குறை வாகவே இருந்தது. 1946- 1953 குடித்தொகை எண் ணில் சிறியளவாக இரு ப்பின் விகிதத்தில் உயர் வாகக் காணப்படுகின் றது. இக் குடி சன அதி கரிப்பில் இயற்கை அதிக ரிப்பும், குடியுள் வரவும் சமமான பண்பு கொண்டு இருக்கின்றன. 1953-1963 நகரின் குடிசனத் தொகை 235.7% தாலும், 1963-1971 க்கு இடைப்பட்ட காலத்தில் 201.2 % தாலும் குடித்தொகை அதிகரித்துள்ளது. இக்காலப்பகு தியில் குடி உள்வரவு அதிகமாக இரு ந்தது. இதேமாதிரி 1981 - 2012 இற்கு இடைப்பட்ட காலத்தில் குடிய திகரிப்பு 110.7 % தமாக இருந்தது. 1960 களின் பிற்பகுதியில் இந் நகரம் பட்டணசபை அந்தஸ்தில் இருந்துநகரசபையாகத்தரம் உயர்த் தப்பட்டதுடன் கிராமப் பகுதிகள் சில நகர நிர்வாகத்துக்கு கீழ் கொண்டு வரப்பட்டன.1963-1971 இற்கு இடைப்பட்ட காலத்தில் குடித் தொகை அதிகரிப்பு உயர்வாக இருப்பதற்கு நகர பரப்பு அதிகரிப்பும் முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

1980 களின் நடுப்பகுதி வரை வவுனியா ஒரு சிறிய நகரமாக இருந்ததுடன் இந் நகரில் தொழில் புரிந்த அரச ஊழியர்கள் அரச விடுதிகளில் தங்கியிருந்து விட்டு இட மாற்றம் பெற்று சென்று விடுவர். மேலும் பலர் தங்கள் தங்கள் குடும்பங் களை குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இருக்க விட்டு தனியாக விடுதிகளில் இருந்து மிகவும் சிக்கனமாக வாழ்ந்தனர். இதனால் நகரின் நுகர்வு சக்தி மிகவும் குறைவாக இருந்ததுடன் நகர் துடிப்பற்று காணப்பட்டது.

வவுனியா நகரம் 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்துக்குப் பின்னர் துடிப்பாக இயங்க ஆரம்பித்தது. மேலும் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த பொழுது வவுனியா முக்கியம் பெறலாயிற்று. இராணுவ முகாம்கள், விமானப்படை முகாம், பொலிஸ் சிறப்பு அதிரடி படை என பெருமளவு இராணுவத்தினர் நகரில் பிரசன்னமாதலால் இது கணக்கியல் நிலையமாக Logistic Center முக்கியம் பெற்றது. யுத்த சூழ்நிலை யில் நகரில் கெடுபிடி தோன்றி னாலும் வர்த்தகம் வலிமை பெற்றது. தென்னிலங்கைக்கு வவுனியாவு க்கு இடையே போக்குவரத்து அதி கரிக்கலாயிற்று.

1990 களில் யுத்தம் காரணமாக அப் பகுதி மக்கள் வவுனியா நகருக்கு இடம்பெயர ஆரம்பித்தனர். வடக்கில் இருப்பதிலும் பார்க்க வவுனியா நகரில் இருப்பது வசதியும் மலிவும் எனக் கருதினர். மேலும் வவுனியாவின் இடவமைவும் போக்குவரத்து வசதியும் வவுனியாவையும் தெரிவு செய்யக் காரணமாக இருந்திருக்கலாம். யுத்த காலத்தில் வவுனியாவின் இடவமைவும், போக்குவரத்து வசதியும் இந் நகரின் வளர்ச்சிக்கும் முக்கியத்துவத்துக்கும் காரணமாக அமைந்தன. இந் நகர் கொழும்பு, கண்டி, அநுராதபுரம், யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், மன்னார், முல்லைத்தீவு ஆகிய நகர்களுடன் தரமான வீதிகளால் தொடுக்கப்பட்டு இருக்கின்றது. மேலும் வவுனியா நகர் வட பகுதியின் முக்கிய போக்குவரத்து மையமாக இருக்கிறது. இந் நகரிலிருந்து குறுகிய நேர இடைவெளியில் கொழும்பு, கண்டி, குருநாகல், அக்கரைப்பற்று, மட்டக்களப்பு, கதூறுவெல, திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய சபைகளுக்கு இ.போ.ச. பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் சேவையில் ஈடுபடுகின்றன. மேலும் மொனராகல, கதிர்காமம், எம்பிலிப் பிட்டிய, நுவரெலியா, ஹற்றன் வலஸ் முல்ல போன்ற தூர இடங்களுக்கு பேருந்து சேவைகள் இந்நகரில் இருந்தோ அல்லது இந்நகர் ஊடாகவோ இடம் பெறுகின்றன.

மேலும் மாவட்டத்தின் பல கிராமங்கள் நல்ல பேருந்துச் சேவைகள் மூலம் நகருடன் இணைக்கப்பட்டுள்ளன. வவுனியா நகர் வடக்கு புகையிரதப் பாதையில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. காங்கேசன்துறைக்கும் கொழும்புக்கும் சேவையில் ஈடுபடும் சகல புகையிரதங்களும் இங்கு தரித்துச் செல்கின்றன. மேலும் வவுனியாவில் இருந்து மாத்தறைக்கும் கொழும்பில் இருந்து வவுனியாவுக்குமான புகையிரத சேவைகளும் உண்டு. வவுனியா நகரில் விமான நிலையம் ஒன்று இருக்கின்றது. இம் விமான நிலையம் பாதுகாப்பு படையினராலும் முக்கிய பிரமுகர்களாலும் மற்றும் சுற்றுலா பயணிகளாலும் பயன்படுத்தப்படுகின்றது.

வவுனியா நகரம் திருகோணமலை துறைமுகத்தின் கிட்டிய பின்னணி நிலப்பிரதேசத்தில் இடவமைவு பெற்றுள்ளது.

வவுனியா நகரம் தனது ஏற்றுமதி, இறக்குமதி செயற்பாடுகளை தேவை ஏற்படின்திருகோணமலைத் துறைமுகத்தினூடாக மேற்கொள்ள முடியும். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## முன் கோபக்காரன்

ஒரு முன்கோபக்காரப் பையன் இருந்தான். முணுக்கென்றால் அவனுக்குக் கோபம் வரும்.

கோபம் வந்தால் தலைகால் தெரியாமல் வாய்க்கு வந்த படி வயது வரம்பில்லாமல் எல்லோரையும் பேசிவிடுவான். பின்னர் அவர்களிடம் வருத்தப்படுவான்.

நாளடைவில் அவனை சுற்று வட்டாரத்தில் பலருக்கு இதனாலேயே பிடிக்காமல் போனது. அவனைத் தவிர்க்க ஆரம்பித்தார்கள். பையனுக்குத் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று தோன்றினாலும் எப்படி என்றுதான் தெரியவில்லை.

அவனுடைய அப்பா பொறுத்துப் பொறுத்து பார்த்து விட்டு ஒரு நாள் அவனிடம் ஒரு வாளி நிறைய ஆணிகளையும் ஒரு சுத்தியலையும் கொடுத்தார்.

ஒவ்வொரு முறை ஆத்திரப்படும் போதும் சம்பந்தப்பட்டவர்களைத் திட்டு வதைத் தவிர்த்து விட்டு வீட்டுக்குப் பின்னால் உள்ள மரவேலியில் ஒரு ஆணியை ஆத்திரம் தீரும் வரை அறைந்து ஏற்றி விடும்படி அறிவுரைத்தார்.

முதல் நாள் வேலியில் சுமார் 50 ஆணிகளை அறைந்து ஏற்றினான்.

நாட்கள் செல்லச்செல்ல அவனைக் கோபமூட்டுபவர்கள் முன் வன்மையாகப் பேசுவதைக் கட்டுப்படுத்தக் கற்றுக் கொண்டான். கோபம் வந்தால்தான் உடனே ஆணி அடிக்கப் போக வேண்டுமே!

நாளடைவில் வாளியையும் சுத்தியலையும் எடுத்துக் கொண்டு வேலிப்பக்கம் போகு முன் கோபவெறி குறைந்து போய், வேலியில் ஆணி அறைவது குறையத் தொடங்கியது. சில நாட்களில் வேலியில் ஆணி அடிக்க வேண்டிய தேவையே அவனுக்கு இருக்கவில்லை.

அப்பாவிடம் போய் விபரத்தைச்சொன்னான். அவர் உள்ளுக்குள் மகிழ்ச்சியடைந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அவனிடம் ஒரு ஆணி பிடுங்கும் கருவியைக்கொடுத்து வேலியில் அவன் அடித்த ஆணிகளை ஒவ்வொன்றாகப்பிடுங்கச் சொன்னார். அனைத்தையும் பிடுங்க அவனுக்கு முழுதாக ஒரு நாள் பிடித்தது.



எல்லா ஆணியையும் பிடுங்கிய பிறகு அப்பாவும் மகனும் வேலியை பார்க்கப் போனார்கள். அப்பா வேலியில் ஆணிகளைப் பிடுங்கிய இடத்தில் இருந்த வடுக்களை மகனுக்குக் காட்டி "கோபம் வந்தால் அறிவிழந்து சொல்லும் சுடுசொல்லும் இந்த ஆணியைப் போலத்தான். ஆணியைப் பிடுங்குவது போல் நீ பேசியதற்கு மன்னிப்புக் கேட்டாலும், அந்த சொல் தைத்த இடத்தில் உள்ள வடு இந்த ஆணி ஏற்படுத்திய வடுவைப் போலவே மறைவது மிகக் கடினம்" என்று அவனுக்கு எடுத்துக் கூறினார்.

மகனும் கருத்தை நன்றாக உணர்ந்து திருந்தி ஊர் போற்றும் வகையில் வளர்ந்து வாழ்க்கையில் வெற்றிகள் பல பெற்றான்.

பாடம் : தீயினால் சுட்ட புண் விரைவில் ஆறிவிடும். ஆனால் நாவினால் சுட்ட புண் ஆறாது, மாறாக வடுவாய் உள்ளத்தில் என்றும் இருக்கும்.

முற்றும்



## 03.2017 07 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1793 - ஸ்பெயின் மீது பிரான்ஸ் போரை அறிவித்தது.
- 1798 - பிரெஞ்சு இராணுவம் ரோமினுள் நுழைந்தது. ரோமன் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1799 - பிரான்சின் முதலாம் நெப்போலியன் பாலஸ்தீனத்தின் ஜாஃபா நகரைக் கைப்பற்றினான். அவனது படைகள் கிட்டத்தட்ட 2,000 அல்பேனியர்களைக் கொன்றனர்.
- 1814 - பிரான்சின் முதலாம் நெப்போலியன் குரோன் நகரில் உருசியர்களுக்கும் புருசியர்களுக்கும் எதிரான போரில் வெற்றி பெற்றான்.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: வடமேற்கு ஆர்கன்சாவில் அமெரிக்கப் படைகள் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்புப் படையினரை வென்றனர்.
- 1876 - அலெக்சாண்டர் கிரகம் பெல் தொலைபேசிக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1902 - இரண்டாம் போவர் போர்: தென்னாபிரிக்காவின் போவர்கள் பிரித்தானியர்களுக்கு எதிரான கடைசிச் சமரில் வெற்றியீட்டினர்.
- 1911 - மெக்சிக்கோவில் புரட்சி வெடித்தது.
- 1912 - தென் முனையைத் தாம் டிசம்பர் 14, 1911 இல் அடைந்ததாக ருவால் அமுன்சென் அறிவித்தார்.
- 1918 - முதலாம் உலகப் போர்: பின்லாந்து ஜெர்மனியுடன் கூட்டுச் சேர்ந்தது.
- 1936 - லொக்கார்னோ உடன்படிக்கைகள், வெர்சாய் ஒப்பந்தம் ஆகியவற்றிற்கு எதிராக ரைன்லாந்தை ஜேர்மனி கைப்பற்றியது.
- 1951 - கொரியப் போர்: கொரியாவில் ஐநாப் படைகள் சீனப் படைகளுக்கெதிராகத் தாக்குதலை ஆரம்பித்தனர்.
- 1969 - கோல்டா மெயிர் இசுரேலின் முதற் பெண் பிரதமரானார்.
- 1989 - மக்கள் சீனக் குடியரசு திபெத்தின் லாசா பகுதியில் இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்தனர்.
- 1996 - பாலஸ்தீனத்தில் முதலாவது மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றம் அமைக்கப்பட்டது.
- 2006 - காசியில் அடுத்தடுத்து இரண்டு குண்டுகள் வெடித்ததில் 12 பேர் கொல்லப்பட்டனர்.
- 2007 - இந்தோனீசியாவின் யாஹ்யகர்த்தா விமான நிலையத்தில் தரையிறங்க முயற்சித்த கருடா விமானம் வயல் ஒன்றில் வீழ்ந்து வெடித்ததில் 49 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

- 1765 - யோசெப் நிசிபோர் நியெப்சு, ஒளிப் படவியலைக் கண்டுபிடித்தவர் (இ. 1833)
- 1934 - நாரி கான்ட்ராக்டர், இந்தியத் துடுப்பாட்ட வீரர்
- 1952 - விவியன் ரிச்சர்ட்ஸ், மேற்கிந்தியத் துடுப்பாளர்
- 1968 - ராஜீவ் சுந்தரம், இந்திய நடன இயக்குனர்
- 1970 - ரேச்சல் வய்ஸ், ஆங்கிலேய நடிகை

### இறப்புக்கள்

- 1274 - புனித தாமசு அக்குவைனாசு, இத்தாலிய மதகுரு, மெய்யியலாளர் (பி. 1225)
- 1892 - சேர் வில்லியம் எச். கிரெகரி, இலங்கையின் முன்னாள் ஆளுநர்
- 1944 - கல்லடி வேலுப்பிள்ளை, ஆசுகவி, ஈழத்து எழுத்தாளர் (பி. 1860)
- 1961 - கோவிந்த் வல்லப் பந்த், இந்திய அரசியல்வாதி, உத்தரப் பிரதேசத்தின் 2வது முதலமைச்சர் (பி. 1887)
- 1990 - சுத்தானந்த பாரதியார், கவியோகி (பி. 1897)
- 1999 - இஸ்டான்லி குப்ரிக்கு, அமெரிக்கத் திரைப்பட இயக்குனர் (பி. 1928)
- 2014 - பாலாஜி, திரைப்பட, சின்னத்திரை நகைச்சுவை நடிகர்

### சிறப்பு நாள்

- அல்பேனியா - ஆசிரியர் நாள்



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 40 | 40 | 60 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 90 | 90 | 120 | 90 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 120 | 160 | 160 | 160 |
| தக்காளி | 60 | 40 | 40 | 50 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 100 | 70 | 80 | 80 | 60 |
| கோவா | 30 | 40 | 20 | 60 | 60 | 40 |
| கரட் | 50 | 60 | 40 | 50 | 120 | 40 |
| பூசணி | 50 | 60 | 35 | 80 | 80 | 60 |
| புடோல் | 80 | 60 | 40 | 50 | 80 | 60 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 100 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 150 | 100 | 90 | 120 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 80 | 150 | 100 | 100 |
| பாகற்காய் | 150 | 200 | 80 | 150 | 160 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 80 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 50 | 50 | 100 | 60 |
| பயற்றங்காய் | 120 | 100 | 100 | 120 | 120 | 100 |
| லீக்ஸ் | 50 | 70 | 60 | 60 | 80 | 60 |
| பீற்றூட் | 60 | 40 | 40 | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 120 | 80 | 90 | 120 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 600 | 300 | 400 | 400 | 600 | 200 |
| போஞ்சி | 120 | 100 | 60 | 100 | 160 | 80 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | 40 | 40 | 40 | 30 |
| கீரை - 1பிடி | 30 | 40 | 20 | 20 | 30 | 100 |
| தேசிக்காய் | 80 | 60 | 50 | 80 | 100 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 20-50 | 60 | 50-60 | 140 |
| இராசவள்ளி | 200 | 300 | 160 | 180 | 200 | 40 |
| வெங்காயப்பூ | 80 | 40 | 40 | 60 | 100 | 60 |
| முள்ளங்கி | 50 | 60 | 30 | 50 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 15 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 15 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | 50 | 60 | 60 | 60 |

யாழ்ப்பாண பொதுநூலகம்



அரசியல்வாதிகள் கோபம் கொள்ளாதீர்கள். கோபம் வாயைத் திறக்கும். ஆனால் கண்களை மூடிவிடும். – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களின் சொல்லாடுகளம் பார்த்தீரோ!

தமிழர்களின் ஆயுதப் போராட்டம் காலசூழ் நிலைகளால் தோல்வியில் முடிந்து போயிற்று.

தோல்வி என்பது தனித்து வெற்றி தோல்வி என்ற எல்லைக்குட்பட்டது மட்டுமல்ல மாறாக பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் உயிரிழப்புக்கள், சொத்தழிவுகள், இடப்பெயர்வுகள், தமிழ்ப் புத்திஜீவிகளின் புலம்பெயர்வுகள் எனப் பல்வேறு இழப்புக்களையும் தருவதாக அத்தோல்வி அமைந்தது.

இவற்றோடு தோல்வி முடிந்து விட்டதா என்றால் இல்லவே இல்லை. யுத்தத்தின் கொடூரங்களும் அதனால் ஏற்பட்ட இழப்புக்களும் இன்று வரை தமிழினத்தை பல்வேறு வழிகளில் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

அதிலும் குறிப்பாக கல்வி, கலாசாரம், பண்பாடு, மருத்துவம், பொருளாதாரம், சமூகக் கட்டமைப்பு ஆகிய தளங்களில் யுத்தத்தின் பாதிப்பு அபரிதமாக வெளிப்பட்டுள்ளதுடன் இன்னமும் பல வருடங்கள் அதன் தாக்கம் இருக்கும் போல் தெரிகிறது.

நிலைமை இதுவாக இருக்கின்ற போதிலும் தமிழ் மக்களின் சமகாலம் மற்றும் எதிர்காலம் குறித்த ஒரு திடமான கொள்கையோ, இலட்சணமோ எம்மிடம் இல்லாதிருப்பது மிகப் பெரியளவில் வேதனைக்குரியது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழினத்தை எதிரிகள் காப்பாற்றுவார்கள் என்று நினைப்பது நம் இனம் அழிவதற்கானதேயன்றி வேறு எதுவுமாக இருக்காது.

விழுந்தவனே எழுந்திருக்க வேண்டும். வீழ்த்தியவன் தூக்கிவிடட்டும் என்றால் ஏறி மிதிப்பதுதான் நடக்கும்.

ஆகையால் நம் இனத்தை நாமே தூக்குவோம். நாமாக எழுவோம் என்பதே எங்களின் தாரக மந்திரமாக இருக்க வேண்டும்.

எனினும் எங்கள் அரசியல் தலைமையின் போக்குகள் எங்கள் இளைஞர்கள் மட்டத்திலும் மாணவர் மட்டத்திலும் மிகுந்த விரக்தியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் அரசியல் தலைவர்கள் ஆளுமை அற்றவர்கள் என்ற நினைப்பு நம் மாணவர்கள் மத்தியில் எவ்வளவு தூரம் வலிமை பெற்றுள்ளதென்பதற்கு இது நல்லதொரு உதாரணம்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கும் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவர்களுக்கும் இடையில் அண்மையில் சொல்லாடு களம் ஒன்று இடம்பெற்றது.

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இச்சொல்லாடு களத்தின் விடயப் பொருள் தமிழர் அபிலாசைகளை நிறைவேற்றுவதில் இன்றைய அரசியல்வாதிகள் ஆளுமை மிக்கவர்களா? இல்லையா? என்பதாகும்.

ஆளுமைமிக்கவர்கள் இல்லை என்ற தரப்பில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் வாதிட்டனர்.

இரு அணியிலும் தலா மூன்று மாணவர்கள் வாதிட்ட இச்சொல்லாடு களத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் முன்வைத்த கருத்துக்கள் உலகம் முழுமையிலும் இருக்கக்கூடிய நம் ஈழத் தமிழர்களை ஈர்த்துள்ளது.

இன்றைய மாணவர்களுக்கு அரசியல் தெரியாது என்று நினைத்திருந்த நம் சிற்றறிவுக்கு யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்களின் கருத்துக்கள்; நாங்கள் உங்களை விட ஒரு படி மேலாக அரசியலைப் புரிந்துள்ளோம் என்பதை இடித்துரைத்துள்ளது.

ஆம், மேற்படி சொல்லாடுகளம் நம் தமிழ் அரசியல் தலைவர்கள் பற்றிய மாணவர்களின் எண்ணப்பாட்டை மிகத் தெளிவாக காட்டுகிறது.

இக்கருத்துக்களால் கோபம் கொள்வது அல்லது அதனை எதிர்ப்பது என்பதை விடுத்து எங்களை மாற்றி ஒரு ஆளுமையான தலைமையாக செயற்படுவோம் என்ற உறுதிப்பாட்டை நம் அரசியல் தலைமை எடுக்க வேண்டும். அப்போதுதான் எங்கள் இனம் வாழ முடியும்.

# வழக்கிலிருந்து ஜெயலலிதா விடுவிப்பு

(சென்னை)

ரூ.2 கோடிபரிசுப்பொருள் தொடர்பான வழக்கில் இருந்து முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா விடுவிக்கப்பட்ட நிலையில், செங்கோட்டையன் மீதான வழக்கு கோடை விடுமுறைக்கு பின் விசாரணைக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சராக ஜெயலலிதா 1991-1996 ஆம் ஆண்டுகளில் பதவி வகித்தார்.

1992 ஆம்ஆண்டு அவர் தன் பிறந்த நாளை வெகு விமர்சையாக கொண்டாடினார். அவருக்கு கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் ஏராளமான பரிசுகளை பொருட்களாகவும், ரொக்கமாகவும் வழங்கினார்கள்.

அப்போது, ரூ.2 கோடி 9 இலட்சத்து 50 ஆயிரம் அவருக்கு கேட்பு காசோலை மூலமாக பரிசாக வழங்கப்பட்டது. முதலமைச்சராக பதவி வகிக்கும் நபர், தனக்கு பரிசாக கொடுக்கப்படும் பெரும் தொகையை அரசு கருவூலத்தில் ஒப்படைக்க வேண்டும்.

ஆனால், ஜெயலலிதா அந்தத் தொகையை தன்னுடைய சொந்த வங்கிக் கணக்கில் செலுத்தி எடுத்துக் கொண்டார். இது குறித்து 1996ஆம் ஆண்டு சி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்தது.

இந்த வழக்கின் குற்றப் பத்திரிகையை நீண்ட காலமாக சி.பி.ஐ. பொலிஸார் தாக்கல் செய்யவில்லை. இதனால், சென்னை சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றில் நீண்ட காலமாக வழக்கு நிலுவையில் இருந்து வந்தது.

10 ஆண்டுகளுக்கு பின்னர், கடந்த 2006ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் திகதி இந்த வழக்கின் குற்றப் பத்திரிகையை சி.பி.ஐ. பொலிஸார் தாக்கல் செய்தனர்.

அதில், ஜெயலலிதா, அழகு திருநாவுகரசு, செங்கோட்டையன் ஆகியோர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றில் ஜெயலலிதா உட்பட 3 பேரும் வழக்கு தொடர்ந்தனர். வழக்குப்பதிவு செய்து 10 ஆண்டுகளுக்கு பின்னர், இந்த வழக்கின் குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்தது சட்டப்படி தவறாகும் என்று கூறி, இதற்கு ஆதரவாக உச்ச நீதிமன்றத்தில் பல்வேறு தீர்ப்புகளையும் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி கே.என்.பாஷா, கடந்த 2011 ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கினார். அதில், 'பிறந்த நாள் பரிசு பொருள் வழக்கை முதலில் தமிழக சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் 1996 ஆம் ஆண்டு ஜூன் 24 ஆம் திகதி பதிவு செய்துள்ளனர்.

பின்னர் இந்த வழக்கு அதே ஆண்டு ஒக்டோபர் 2 ஆம் திகதி சி.பி.ஐ. பொலிஸாரின் விசாரணைக்கு மாற்றப்பட்டது.

ஆனால், சி.பி.ஐ. பொலிஸார் இந்த வழக்கை உடனடியாக விசாரித்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாமல், 10 ஆண்டுகளுக்கு பின்னர் 2006 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தான் குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்துள்ளனர். அதுவும் இந்த காலதாமதத்துக்கு என்ன காரணம்? என்று சி.பி.ஐ. தரப்பில் விளக்கம் அளிக்கவில்லை.

எனவே, ஜெயலலிதா உட்பட 3 பேருக்கு எதிராக சி.பி.ஐ. தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையை இரத்து செய்கிறேன்' என்று நீதிபதி கே.என்.பாஷா தன் தீர்ப்பில் கூறியிருந்தார்.

இந்த தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றில் சி.பி.ஐ. தரப்பு மேல்முறையீடு செய்தது. இந்த மேல்முறையீட்டு வழக்கு கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது.

இந்த நிலையில், இந்த வழக்கு நீதிபதிகள் பினாங்கி சந்திரகோஷ், ரோகிண்டன் நாரிமன் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட ஜெயலலிதா, அழகு திருநாவுக்கரசு ஆகியோர் இறந்து விட்டதால், அவர்களது பெயரை இந்த வழக்கில் இருந்து நீக்கி விடுவதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

செங்கோட்டையன் மீதான வழக்கை வருகிற கோடை விடுமுறைக்கு பின்னர் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாகவும் தெரிவித்தனர். (இ)

## சாஸ்திரங்கள்

✦ ஒரு பெண் கர்ப்பமான ஏழாவது மாதத்திலிருந்து அவள் குழந்தை பெற்ற முப்பதாவது நாள் வரை அவளது ஜாதகத்தைப் பார்த்து பலன் சொல்லுதல் கூடாது.

-ஜோதிடவருஷாதி நூல்

✦ மாலைச் சூரியனையோ-மதியச் சூரியனையோ நமஸ்கரிக்கக்கூடாது. காலைச் சூரியனை அதுவும் காலை 8 மணிக்குள்ளேயே கும்பிடவேண்டும். அது எப்படி குளிச்சு முடிச்சு ஈர உடம்போடு கும்பிட வேண்டும்.

-ஆயுர்வேதம்

✦ உதித்த சூரியனிலிருந்து வருகிற வெளிச்சத்தில் விற்றமின் டி இருக்கிறது. ஈர உடம்பில் விற்றமின் டி முழுசா சேர்ந்து விடும். இதனால் நோய் எதிர்ப்பு சக்தி வளரும். உடலும் உள்ளமும் ஆரோக்கியப்படும். இயற்கை விஞ்ஞானத்தில் ஆயுளை வளர்க்கிற விடயம் இது.

-ஆயுர்வேதம்

✦ மனைவி சம்பாதிக்கும் பணத்தில், சொத்துக்களில் கணவனுக்கு எந்த ஒரு உரிமையும் கிடையாது. அது அவளது பிள்ளைகளுக்கே உரிமையானது. ஆனால் கணவனின் சம்பாத்தியத்தில் சொத்துக்களில் மனைவிக்கு முழு உரிமையும் உண்டு. மனைவி வாங்கும் கடன்களை, அவளால் ஏற்படும் நட்டங்களை அடைக்கும் முழுப்பொறுப்பும் கணவனுக்கே உண்டு. ஆனால் கணவன் வாங்கும் கடன்களை, அவனால் ஏற்படும் நட்டங்களை அடைக்கும் பொறுப்பு மனைவிக்குக் கிடையாது. அவளிடம் அந்தக் கடன்களைக் கேட்டு இம்சிப்பது பாவச் செயலாகும்.

-தர்மசாஸ்திரம்

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**தண்ணீருடன் சாணம் சேர்த்து வாசல் தெளிப்பது ஏன்?**




பசுவை கோமாதா என்று வணங்குகிறோம். மூன்று தேவிமார்களும் கூட (லட்சுமி, சரஸ்வதி, பார்வதி) பசுவை மாதாவாகக் கருதுகிறார்கள்.

பசுவின் பின் பாகத்தில் லட்சுமி வாசம் செய்கிறாள். எனவே பசுவின் சாணத்தை தூய்மையான பொருளாகக் கருதுகிறார்கள். லட்சுமி கடாட்சத்திற்கும் லட்சுமி வாசத்திற்கும் பசு சாணத்தைத் தண்ணீரில் கரைத்துத் தெளித்தால் அந்த இடம் சுத்தமாகும் என்று விதிக்கப்பட்டது. எனவே ஒரு இடத்தைச் சுத்தம் செய்வதற்கு கசு சாணத்தைத் கரைத்துத் தெளிக்கும் முறை வழ்க்கத்திற்கு வந்தது.

சுருக்கமாகக் கூறினால் பரிசுத்தத்திற்காக சாணம் கரைத்துத் தெளிக்கப்படுகிறது.

(தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 06.30 மணிவரை யாழ். பிரதேசத்தில் இளவாலை, வித்தகபுரம், பெரியவிளான், அளவெட்டியின் ஒரு பகுதி, சேந்தாங்குளம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் குருமன்காடு பிரதேசம், தெற்கிலுப்பைக் குளம் கிராமம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் பெரியநீலாச்சேனை, இத்திக்கண்டல், சொர்ணபுரி, பாப்பாமோட்டை, அடம்பன், பரப்பாங்கண்டல், அடம்பன் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும் (இ-9)


## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ என் குழந்தாய் நான் வேண்டுவன இரு ம்பை ஒத்த தசைகளும் உருக்கைப்போன்ற நரம்புகளும் அவற்றுள் இடியை ஒத்த மனமும் ஆகிய இவற்றையே. பொய்யைவிட உண்மை அளவில்லா வலிமையுடையது. அவ்வாறே நேர்மையும். இவை உன்னிடம் இருந்தால் அவற்றின் வலிமை ஒன்றாலேயே நீ முன்னேற முடியும்.

❖ மலைபோல் உயர்ந்த தடைகளையும் தாண்டிச் செல் லும் மனவலிமை உன்னிடம் உள்ளதா? உலக முழுவதும் வாளைக் கொண்டு உன்னை எதிர்த்து நின்றாலும் நீ சரியென நினைப்பதைச் செய்யும் துணிவாயா? உன் மனைவியும் குழந்தைகளும் உன்னை எதிர்த்தாலும் உனது பணமெல்லாம் போய்விட்டாலும் உனது புகழ் அழிந்தாலும் உனது செல்வம் ஒழிந்தாலும் அப்போதும் விடாது பற்றுவாயா? அப்போதும் அதையே தொடர்ந்து நீ கொண்ட குறியை நோக்கி முறையாக முன் செல்வாயா!

# விமானப் படையின் ஆண்டு நிறைவையொட்டி துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டி



இலங்கை விமானப்படையின் 66வது ஆண்டு நிறைவையொட்டி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான துவிச்சக்கர வண்டி ஓட்டப்போட்டி நேற்று முன் தினம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

துவிச்சக்கர வண்டிப் போட்டியானது கடந்த 3 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டு புத்தளத்தை சென்றடைந்த பின்னர் கடந்த 4 ஆம் திகதி வவுனியாவை வந்தடைந்தது.

பின்னர் வவுனியாவிலிருந்து ஆரம்பித்து நேற்று முன் தினம் மதியம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

விமானப் படையினரால் நடத்தப்பட்ட இத் துவிச்சக்கர வண்டிப் போட்டியில் இந்திய விமானப்படை அணி, இலங்கை விமானப் படை அணி, இராணுவஅணி, கடற் படை அணி, பொதுமக்கள் அணி உள்ளிட்ட 197 பேர் கலந்து கொண்டதாக விமானப்படையின் கட்டளைத்தளபதி சாகர கொட்டக தெனிய தெரிவித்திருந்தார்.

ஆண்கள் அணியானது மணித்தியாலத்துக்கு 45.6 கிலோமீற்றர் வேகத்தில் பயணித்து யாழ்ப்பாணத்தை வந்தடைந்ததோடு, பெண்கள் அணியானது இப் போட்டியை கிளிநொச்சியில் ஆரம்பித்து யாழ்ப்பாணத்தில் நிறைவு செய்தது.

பெண்கள் அணியில் 23 பெண்கள் பங்கு பற்றியிருந்தனர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முதற்பரிசாக 3 இலட்சம் ரூபாவும் 2 ஆம் பரிசாக 2 இலட்சம் ரூபாவும் 3 ஆம் பரிசாக ஒரு இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (க-9)

# அராலி அண்ணா வி. கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டி

## சென். அன்ரனிஸ் வெற்றி



அராலி அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை அன்று நடை பெற்ற போட்டியில் பெரியவிளான் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து முத்தமிழ் விளையாட்டுக் கழகம் மோதியது.

விறுவிறுப்பாக நடை பெற்ற இப் போட்டியில் பெரியவிளான் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் 02:00 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

அவ் அணி சார்பாக செபமாலைநாதன் றொபின்சன் முதல் கோலினையும் இரண்டாவது கோலினை Jokan News போட்டார். (க)

# நெடியகாடு இளைஞர் வி.க நடத்தும் உதைபந்தாட்ட இறுதிப் போட்டி இன்று

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் Northern challengers உதைபந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டி இன்று செவ்வாய்க் கிழமை வல்வெட்டித் துறை NYSC மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இரவு 8 மணிக்கு நடைபெறும் இறுதிப் போட்டியில் யங்கென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகமும்

அதற்கு முன்னர் இரவு 7 மணிக்கு நடைபெறும் மூன்றாம் இடத்திற்கான போட்டியில் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஜோசப் வாஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

# வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டி

## கலைமதி, இமையாணன் மத்தி வெற்றி





வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை அன்று றெயின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் நடந்த ஆட்டத்தின் முடிவுகள்.

முதல் போட்டியில் கலட்டி அணியை எதிர்த்து கலைமதி அணி மோதியது இதில் 6:1 என்ற கோல்கணக்கில் கலைமதி அணி இலகுவான வெற்றியை பெற்றது

இரண்டாவது போட்டியில் அல்வாய் நண்பர்கள் அணியை எதிர்த்து இமையாணன் மத்தி அணி மோதியது இப்போட்டியில் 3:2 என்ற கோல் கணக்கில் இமையாணன் மத்தி அணி வெற்றியீட்டியது. (க)

# சிறந்த பெண்கள் அணியாக யாழ். பாரதி அணி தெரிவாகியது



யாழ் பிரதேச செயலக விளையாட்டு கழகங்களுக்கிடையிலான விளையாட்டு போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

கழகங்களுக்கிடையில் நடைபெற்ற வலைப்பந்து ,உதைபந்து, மென்பந்து, கரம் , பூப்பந்து, தடகள விளையாட்டுக்களில் யாழ். பாரதி அணியினர் வெற்றி பெற்றனர்

இப் போட்டியில் யாழ் . பாரதி விளையாட்டுக் கழக பெண்கள் அணியினர் யாழ். பிரதேச சிறந்த பெண்கள் அணியினராக தெரிவு செய்யப்பட்டு (play for award) கேடயங்கள் யாழ். பிரதேச செயலகரால் வழங்கி வைக்கப்பட்டு கௌரவிக்கபட்டனர். (க)





உடுவில் பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையே நடை பெற்ற போட்டியில் கரப்பந்தாட்ட போட்டியில் முதலாம் இடத்தினையும் வலைப் பந்தாட்ட போட்டியில் இரண்டாம் இடத்தினையும் பெற்ற மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகம் அணியினரை படத்தில் காணலாம்.

## ஜனாதிபதி மைத்திரி...

மற்றும் வீடமைப்புத்துறை அமைச்சர் Basuki Hadimuljono மற்றும் விசேட தூதுக் குழுவினர் ஜனாதிபதியை கோலாகலமாக வரவேற்றனர்.

இந்து சமுத்திர பிராந்திய நாடுகளின் பேண்தகு மற்றும் சம நிலையான அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு நடைபெறும் இந்து சமுத்திர பிராந்தியத்தின் அரச தலைவர்கள் உச்சி மாநாடு இன்று ஜகார்த்தாவில் ஆரம்பமாகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொள்ள உள்ளதுடன், இலங்கை நேரப்படி இன்று முற்பகல் 11.00 மணிக்கு மாநாட்டில் உரையாற்றவுள்ளார். செ-11)

## யாழ்.சிறைக் கைதி...

என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் 17 வருடங்களாக மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வந்துள்ளார்.

கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் அவரது மனைவி பிரஸ்தாப நபருக்கு உணவு ஊட்டிக்கொண்டு இருக்கையில் விறகு கட்டையால் மனைவியின் தலையில் அடித்துள்ளார். இதனால் சம்பவ இடத்திலேயே மனைவி உயிரிழந்துள்ளார்.

குறித்த கொலைச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இவர் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். சிறையில் இருந்து தெல்லிப்பழை வைத்தியசாலையில் குடல் தொடர்பான சிகிச்சைக்காக சென்று வந்துள்ளார்.

இருப்பினும் கடந்த 3 மாதங்களாக தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இவர் கடுமையான உடல் சோர்வடைந்ததன் காரணமாக கடந்த 5ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு இவருக்கு பெருங் குடலில் பிணைப்பு ஏற்பட்டதன் காரணமாக நேற்றைய தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது குறித்த மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (செ-9)

## ஊறணி பகுதியில்...

மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வலி. வடக்கு இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட காணிகள் சிறிது சிறிதாக விடுவிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஏற்றவகையில் தமது நிலங்களை விடுவிக்குமாறு கோரி வருகின்றனர்.

இந்த நிலையில் அண்மையில் ஊறணி இறங்குதுறைக்கு அருகில் உள்ள கடற்கரைப்பகுதி மற்றும் அதனுடன் கூடிய 2 ஏக்கர் காணி படையினரால் விடுவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் குறித்த பகுதியில் தாம் தொழில் செய்ய முடியாது என்றும் தமது இறங்குதுறை மற்றும் அதனை அண்டிய நிலங்களை விடுவித்தால் மாத்திரமே தாம் மீன்பிடித்தொழிலை மேற்கொள்ள முடியும் என மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

அந்த வகையில் அண்மையில் விடுவிக்கப்பட்ட ஊறணி கடற்கரைப் பிரதேசத்தில் இருந்து மயிலிட்டி துறைமுகத்துக்கு அண்மையில் உள்ள ஜே.249, ஜே.251 ஆகிய பகுதியை சேர்ந்த பொதுமக்களின் 28.81 ஏக்கர் காணியை விடுவிப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும் அப்பகுதியில் உள்ள பொதுமக்களின் ஒரு சில வீடுகளை தவிர ஏனைய வீடுகளும் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

எனவே வீட்டு உரிமையாளர்கள் உரிய ஆவணங்களுடன் பிரதேச செயலகத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிராம சேவகர்களால் பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## வட்டுக்கோட்டையில்...

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இருவேறு கிராம இளைஞர்களுக்கிடையில் விளையாட்டு மைதானத்தில் ஏற்பட்ட தகராறே வாள்வெட்டுக்குக் காரணம் எனத் தெரிய வருகின்றது.

நேற்று மாலை 4 மணியளவில் தகராறு ஏற்பட்டதனைத் தொடர்ந்து 20 பேர் கொண்ட குழுவினர் மூளாயில் உள்ள குறித்த இரு குடும்பஸ்தர்களின் வீட்டுக்குள் மாலை 5.30 மணியளவில் வாள்கள், பொல்லுகள் சகிதம் புகுந்துள்ளனர்.

இதன்போது வீட்டிலிருந்த சகோதரர்களான சந்திரராசா ரவீந்திரன் (வயது-36), சந்திரராசா பிரதீபன் (வயது-33) ஆகிய இரு குடும்பஸ்தர்கள் மீது சரமாரியாக வாள் வீச்சுத் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

பின்னர் அங்கிருந்து 20க்கும் மேற்பட்டவர்களைக் கொண்ட அக்குழு மோட்டார் சைக்கிள்களில் தப்பிச் சென்றுள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்த இருவரும் அயலவர்களின் உதவியுடன் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான விசாரணைகளை வட்டுக்கோட்டைப்பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (செ-4,30)

## இராணுவத்தின்...

த்தியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு நேற்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கில் உள்ள காணிகள் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாப்பிலவில் உள்ள காணிகளை விடுவிக்குமாறு குறித்த கடிதத்தில் இரா. சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மக்களுக்கு சொந்தமான இந்தக் காணிகளை மீண்டும் கையளிக்காது தொடர்ந்தும் இராணுவத்தினர் வைத்திருப்பதற்கு எந்த விதமான நியாயபூர்வமான காரணங்களும் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இக்காணிகளை விடுவிப்பதாக அரசாங்கம் உறுதியளித்துள்ள போதிலும், அந்த உறுதிமொழிகள் இன்னமும் காப்பாற்றப்படவில்லை என மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

எனவே, வலிகாமம் வடக்கிலுள்ள காணிகள் அதன் உரிமையாளர்களான குடிமக்களுக்கு விடுவிக்கப்படுவதற்கு மிக விரைவான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் இரா. சம்பந்தன் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேபோன்று முல்லைத்தீவு கேப்பாப்பிலவு காணிகள் 8 வருடங்களுக்கு மேலாக ஆயுதப் படையினர் நிலைகொண்டு தங்கியுள்ளதாகவும் இக்காணிகளும் உரிமையாளர்களாகிய குடிமக்களுக்கு குடியிருப்புக்காகவும் விவசாய செய்கைகளுக்காகவும் வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ள சம்பந்தன்,

மக்களுக்கு சொந்தமான காணிகளில் ஆயுதப்படையினர் தொடர்ந்தும் தங்கியிருப்பது, நாட்டின் சட்டங்களை மீறுகின்ற செயல் என தெளிவாக தெரிவதாகவும் குறிப்பிட்டார்.

இத்தகைய நிலைமை தொடரக் கூடாது என்றும் அது மக்களின் நம்பிக்கையை சிதைத்துவிடும் எனவும் எதிர்க்கட்சித் தலைவரால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)

## முகாம் மக்களுக்கு...

குடியமர்த்தியிருந்தனர். இவ்வாறு குடியேற்றப்பட்டவர்கள், இராணுவம் பிடித்து வைத்துள்ள நிலங்களில் குடியிருந்த போதிலும், அவர்களுக்கு காணிகள் இல்லாமையால் இலவசமாக வீடு கிடைக்கின்றது என்ற ஆறுதலில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட நல்லிணக்கபுரத்தில் குடியிருக்க சம்மதம் தெரிவித்தனர்.

எனினும் தற்போது இராணுவத்தினரால் கட்டப்பட்டு வழங்கப்பட்ட வீடுகளில் குடியிருக்க தமக்கு கஷ்டமாக இருக்கின்றது எனவும், தமது தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ள நல்லிணக்கபுர மக்கள், தமது சொந்த நிலங்களில் மீள குடியமர விரும்புவதாகவும் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில்தான் மேலும் 200 வீடுகளை கட்டி அங்கு முகாம் மக்களையும் குடியேற்ற இராணுவம் திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு இராணுவம் கட்டவுள்ள வீடுகளுக்கான காணிகளும் அடையாளம் காணபட்டுள்ளன. காங்கேசன்துறை சீமெந்து ஆலைக்கு சொந்தமான வித்தகபுரம், நகுலேஸ்வரம் ஆகிய பகுதிகளில் உள்ள காணிகளிலேயே வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

ஏற்கெனவே இந்த காணிகளை சீமெந்து ஆலையினர் கைக்கொள்ளும் போது காணி உரிமையாளர்களுக்கான நஷ்ட ஈடு இதுவரை முழுமையாக வழங்கவில்லை. மேலும் வித்தகபுரம், நகுலேஸ்வரம் பகுதிகளில் காணி இல்லாத குடும்பங்கள் உள்ளன.

இவ்வாறு மேற்படி பகுதிகளில் காணி இல்லாமல் வசிக்கும் குடும்பங்களுக்கே அந்த காணிகள் பகிர்ந்து வழங்கப்பட வேண்டும் என தெல்லிப்பளை பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலும் தீர்மானிக்கப்பட்டி ருந்தது.

இந்த தீர்மானங்களையும் மீறியே இராணுவம் அப்பகுதியில் வீடுகளை அமைத்து முகாம்களில் வாழும் மக்களுக்கு வழங்கவுள்ளதாக அறிய முடிகின்றது.

இதுதொடர்பில் வலி. வடக்கு மீள் குடியேற்றம் குழுவின் தலைவரும் முன்னாள் உப தவிசாளருமான எஸ். சஜீவன் வலம்புரிக்குத் தெரிவிக்கையில்,

வலி.வடக்கில் தற்போது இராணுவம் 4 ஆயிரத்துக்கு அதிகமான ஏக்கர் நிலப்பரப்பை உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமித்து வைத்துள்ளது. இந்த நிலத்துக்கு சொந்தமான மக்களே தற்போது நலன்புரி முகாம்களில் கடந்த 27 வருடங்களுக்கும் மேலாக வசித்து வருகின்றனர். இந்த நிலையில்தான் முகாம்களில் உள்ள மக்களை வேறொரு இடத்தில் மீள குடியமர்த்தி விட்டால், அவர்கள் தமது காணிகளை கோர மாட்டார்கள் என்ற எண்ணத்தில்,

குறித்த இராணுவத்தின் 200 வீட்டு திட்டம் அமையவுள்ளது. இந்த திட்டம் நிறைவேறிய பின்னர் முகாம்களில் உள்ள மக்கள் தொகை குறைவடையும், ஆகவே மீள்குடியேற்றம் பூர்த்தி செய்யப்படுகின்றது என்ற தோற்றப்பாட்டை வெளியுலகத்திற்கு அரசு காண்பிக்கும் என தெரிவித்துள்ள சஜீவன், மக்களுக்கு வீடுகளை கட்டி கொடுப்பதற்கு வடக்கு மாகாண சபையும், மாவட்ட செயலகமும் இருக்கும் போது இராணுவம் முந்திகொள்வது எதற்காக எனவும் கேள்வியெழுப்பியுள்ளார். (செ-4)

## குற்றமிழைத்த படை...

இலங்கையில் நிலவும் மனித உரிமைகள் தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்திருக்கிறது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில், புனர்வாழ்வுக்குள்ளான முன்னாள் போராளிகள் பலர் படையினரதும் பொலிஸாரினதும் பாலியல் வன்கொடுமைகளுக்கும் கொடுமையான சித்திரவதைகளுக்கும் உள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வுக்கு முகம்கொடுத்து விடுதலையான பல முன்னாள் போராளிகள் குறித்து சித்திரவதைக்கு எதிரான ஐ.நா குழுவிற்கு இலங்கையில் உண்மைக்கும் நீதிக்குமான அமைப்பு உள்ளிட்ட பல சர்வதேச அமைப்புக்கள் நம்பிக்கைத்தன்மைமிக்க ஆதாரங்கள் பலவற்றினை வழங்கி யிருப்பதனையும் அமெரிக்கா இராஜாங்கத் திணைக்களம் சுட் டிக் காட்டியுள்ளது

குறிப்பாகப் போர்க்காலத்திலும் அதன்பின்னரும் இடம்பெற்ற குற்றச் சம்பவங்கள் தொடர்பிலும் தண்டனையிலிருந்து விலக்குப் பெறும் கலாசாரம்இன்னமும்தொடருவதாகத் தெரிவித்திருக்கும் அமெரிக்கா இராஜாங்கத் திணைக்களம், மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்களில் ஈடுபட்ட அரச படையினருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்திருக்கிறது.

அதுமட்டுமன்றி, எதேச்சையான கைதுகள், நீண்டகாலம் தடுத்துவைத்தல், புலனாய்வு நடவடிக்கைகள், சிவில் அமைப்பு ஆர்வலர்கள் மீதும் ஊடகவியலாளர் மீதும் சிறுபான்மைச் சமயத்தவர் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு ஆதரவானவர்கள் என்று கருதப்படுவோர் மீதான அச்சுறுத்தல்கள் போன்றன மிகவும் கரிசனைக்குரிய மனித உரிமைப் பிரச்சினைகளாக இருப்பதாகவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்திருக்கிறது.

எதேச்சையாகக் கைது செய்யப்படுவதும், அதன் பின்னர் தடுத்து வைக்கப்படுவதும் சட்டத்தில் தடை செய்யப்பட்டுள்ளபோதிலும், இவ்வாறான நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டிற்குப் பின்னர் குறைந்திருக்கின்றபோதும், அவை இன்னமும் தொடரப்படுவதாக, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இலங்கை குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

அதுமட்டுமன்றி, இலங்கை இராணுவம் வடக்கு, கிழக்கில் தொடர்ந்தும் பொதுமக்களின் காணிகளில் நிலைகொண்டுள்ளதனைச் சுட்டிக்காட்டியுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், இராணுவம் அங்கே இராணுவச் செயற்பாடுகளுடன் தொடர்பற்ற விவசாயம், மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறை போன்ற பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதையும் குறிப்பிட்டுள்ளது. (செ-11)

## கடற்படை துப்பாக்கி...

னர். அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட ஆரம்பித்தனர்.

இலங்கை கடற்படையினரின் இந்த துப்பாக்கி சூட்டுத் தாக்குதலில் கழுத்தில் குண்டு பாய்ந்து இந்திய மீனவர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். மேலும், அப்பகுதியில் மீன் பிடித்து வந்த மீனவர்கள் ஆபத்தான நிலையில் அச்சத்துடன் கரை திரும்பியிருந்தனர்.

உயிரிழந்த மீனவர் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த டிட்டோ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை கடற்படையினரின் இந்த துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல் தமிழக மீனவர்கள் மத்தியில் கடும் அச்சத்தையும் கொதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. (செ-11)

## ஹர்த்தால் தவிர்ப்பு...

முன்னெடுப்பதாக தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் கூடிய பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் தீர்மானிக்கப் பட்டிருந்தது.

எனினும் ஜனாதிபதி உறுதி அளித்ததின்படி பிலவுக்குடியிருப்பு மக்களின் நிலங்கள் கையளிக்கபட்டதன் காரணமாக நாளை 8ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த வடக்குக் கிழக்குத் தழுவிய ஹர்த்தால் இடம்பெற மாட்டாது என தமிழ் மக்கள் பேரவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை சொந்த நிலங்களை மீட்பதற்கான போராட்டங்களை மக்கள் முன்னெடுத்து வருகின்ற நிலையில் தமிழ் மக்கள் பேரவை மீண்டும் பொது மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்து ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கும் எனவும் பேரவைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.(செ)

## தொற்று நோய்கள்...

கோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில வாரங்களாக நாட்டில் நிலவும் அசாதாரண கால நிலை மாற்றங்களால் தொற்று நோய்களின் தாக்கம் பல்வேறு தரப்பினரையும் பாதித்துள்ளது. இதில் டெங்கு, சளி சுரம் (இன்புளுவென்சா வகைக் காய்ச்சல்) மற்றும் பல்வேறு சுவாசத் தொற்று நோய்களின் தாக்கம் அடங்குகின்றன.

எனவே பொதுமக்கள் வைத்தியசாலை விடுதியில் உள்ள நோயாளரைப் பார்வையிடுவதற்கு வருவதை இயன்ற அளவு தவிர்த்துக் கொள்ளவும். அத்துடன் கர்ப்பிணிகள், குழந்தைகள் எளிதில் நோய்த்தொற்றுக்கு உள்ளாவோர் அவசியமற்று வைத்தியசாலைக்கு வருவதை தவிர்த் துக் கொள்ளவும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## இரு குற்றவாளி...

தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண கலாசாரத்தை சீரழிக்கும்வகையில் நடத்தப்பட்ட குழு பாலியல் வல்லுறவு குற்றமானது மிகப் பாரதூரமான குற்றச்சாட்டாகும். எதிர்வரும் காலங்களில் எவரும் இத்தகைய குற்றச் செயல்களைச் செய்ய நினைக்கக் கூடாது என்ற வகையில் இந்தக் குற்றச்சாட்டுக்கு அதிக பட்ச தண்டனை வழங்கப்படுகின்றது.

தன்னுடைய காதலனுடன் நின்ற பொழுது காதலனைத் தாக்கிய 3 எதிரிகளும் 18 வயது நிரம்பிய பெண்ணை குழு பாலியல் வல்லுறவு செய்துள்ளமை மிக மோசமான குற்றச் செயலாகும். இந்தச் சம்பவத்தின் பின்னர் காத லனும் அந்தப் பெண்ணைக் கைவிட்டு, வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து ள்ளமையும் அந்தப் பெண்ணைப் பாதித்து ள்ளது. ஆகவே பாதிக்கப்பட்ட அந்த இளம் பெண்ணின் எதிர்காலத்தை இந்த நீதிமன்றம் கவனத்திற் கொண்டு, அவருக்கு இழைக்கப் பட்ட குற்றச் செயலுக்கு குற்றவாளிகள் இருவரும் நட்டஈடு செலுத்த தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. நட்டஈடாகிய பத்து லட்சம் ரூபாயைச் செலுத் தத் தவறினால் மேலும் பத்து வருடம் கடூழி யச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண் டும் எனவும் தெரிவித்தார்.

மேலும் இந்த வழக்கில் தலைமறைவாகி யுள்ள மூன்றாவது எதிரிக்கான விசாரணை யை எதிர்வரும் மே மாதம் 16ஆம் திகதி மேற் கொள வதற்கும் நீதிபதியால் மன்றில் பணிப்புரை விடுக்கப்பட்டது. (செ-9)

யாழ்ப்பாண பொதுநூலகம்



## இரு குற்றவாளி...

கூட்டுப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய வழக்கின் விசாரணைகள் முடிவுற்ற நிலையிலேயே மேற்படி தீர்ப்பு நேற்றைய தினம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருகையில், நெல்லியடி முள்ளிவெளி என்ற இடத்தில் கடந்த 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ஆம் திகதி குறித்த 18 வயதுடைய பெண் தனது காதலனுடன் இருந்த வேளையில் அங்கு வந்த மூன்று பேர் காதலனைத் தாக்கி விட்டு அந்தப் பெண்ணை கூட்டுப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளனர்.

அழுகுரல் கேட்டு குறித்த சம்பவத்தை அறிந்த 3 இராணுவத்தினர் உடனடியாக அப்பகுதிக்கு விரைந்து சென்று பாதிக்கப்பட்ட பெண்ணை பற்றைக்குள் இருந்து மீட்டு வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததுடன் சம்பவ இடத்தில் கண்டெடுக்கப்பட்ட தேசிய அடையாள அட்டையுடன் கூடிய பணப்பையினையும் கைப்பற்றி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த அடையாள அட்டையின் உதவியுடன் பொலிஸார் துரிதமாகச் செயற்பட்டு 48 மணி நேரத்துக்குள் இரண்டு பேரைக் கைது செய்திருந்தனர். அந் நிலையில் சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருந்த மேலும் ஒருவர் தலைமறைவாகிவிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் முதலாம் எதிரியான பாலேந்திரன் பிரபாகரன், இரண்டாம் எதிரியான சண்முகதாஸ் ரஜிதன், மூன்றாம் எதிரியான சிறிகணேஸ் சுதாகரன் என்ற மூவருக்கும் எதிராக, காதலனைத் தாக்கி விட்டு, இளம் பெண்ணை கூட்டுப் பாலியல் வல்லுறவு புரிந்ததாகக் குற்றம் சுமத்தி சட்டமா அதிபரினால் யாழ்.மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது,

அதன்படி யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது வழக்கின் மூன்றாம் எதிரி கைதாகாமல் தலைமறைவாகியிருந்ததனால், அவருக்கு எதிராக பகிரங்க பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டதுடன் அவர் இல்லாமல் ஏனைய இரண்டு எதிரிகளுக்கு எதிராக விசாரணைகள் நடைபெற்றன. விசாரணைகளின் போது, சாட்சிகளாக பாதிக்கப்பட்ட பெண்ணும், அவருடைய தாய் தந்தையரும் மற்றும் காதலன் என கூறப்பட்டவரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர்.

நேற்றைய தினம் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, எதிரிகளுக்கு மீண்டும் குற்றப்பகிர்வு பத்திரம் மன்றில் வாசித்துக்காட்டப்பட்டது. இதன்போது குற்றம் சுமத்தப்பட்ட இரண்டு எதிரிகளும் தாம் சுத்தவாளிகள் என முன்னர் தெரிவித்த கருத்தை வாபஸ் பெற்று நேற்றைய தினம் தாமாகவே முன்வந்து நீதிமன்றத்தில் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

எதிரிகள் தரப்பில் ஆஜராகிய சட்டத்தரணிகள், குறித்த எதிரிகளின் வயது, குடும்ப நிலை என்பவற்றை கருத்தில் கொண்டு குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு கருணை விண்ணப்பத்தை முன்வைத்திருந்தனர்.

பாதிக்கப்பட்டவர் சார்பில் அரச சட்டத்தரணி நாகரட்ணம் நிஷாந் ஆஜராகி, குறித்த கூட்டுப் பாலியல் வல்லுறவு பாரதூரமான குற்றம் எனவும் ஒரு பெண்ணுக்கு இருக்ககூடிய விலைமதிப்பற்ற சொத்து கற்பு. யாழ்ப்பாண தமிழ் மக்களின் கலாசாரத்தில் கூட்டு கற்பழிப்பு என்பது ஏற்றுக்கொள்ளவே முடியாத ஒன்று. எனவே குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதனையடுத்து, இரண்டு எதிரிகளையும் கூட்டுப் பாலியல் குற்றம் புரிந்தமைக்கான குற்றவாளிகள் என தீர்ப்பளித்த நீதிபதி, குற்றவாளிகளாகக் காணப்பட்ட இரண்டு எதிரிகளுக்கும் தலா பத்து ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் எதிரிகள் இருவரும் தலா பத்து லட்சம் ரூபாய் நட்டஈடாகச் செலுத்த வேண்டும் என்றும் தவறினால் மேலும் பத்து ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளித்தார்.

அத்துடன் தலா பத்தாயிரம் ரூபாய் தண்டப் பணம் செலுத்த வேண்டும் என்றும் கட்டத்தவறினால், 6 மாதம் சிறைத் தண்டனை எனவும் தீர்ப்பளித்தார்.

தனது தீர்ப்பின் போது குற்றவாளிகளாகக் காணப்பட்ட இரண்டு எதிரிகளையும் நோக்கி நீதிபதி

23ஆம் பக்கம் பார்க்க...


**ஆங்கில வகுப்பு**

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0767070069

(8130) M.Suren

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

மிகக் குறைந்த கட்டணத்தில்

UK-5Kg மேற்பட்ட பொதி 800/-

UK-11Kg மேற்பட்ட பொதி 500/-

(8134)

**திருமுருகன் கொம் நெற் (Pvt) Ltd**

T.P:-0777554528

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி, பருத்தித்துறை, சங்கானை, கிளிநொச்சி

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

வலம்புரி பத்திரிகையின் செய்தியாசிரியர்

## திரு. S. இராஜேஸ்கரன்




வலம்புரி பத்திரிகையின் செய்தியாசிரியர்
S.இராஜேஸ்கரன் அவர்கள் தமிழ்நாடு பாரதியார் பல்கலைக்கழகத்தில் ஊடகக் கற்கை "இளங்கலைமாணி" பட்டம் பெற்றமையினையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன்
அவர் மேன்மேலும் பல பட்டங்களை பெற
இறைவனை வேண்டுகின்றோம்.

-வலம்புரிக் குடும்பம்

**V2 TRAVELS**

தை மாதம் தங்கம் வென்ற அதிஸ்டசாலி




அதிஸ்ட எண் - N/13JAN17/1371/152

சி.தேவராசா
கரணவாய், கரவெட்டி

இவர் 13-01-2017 அன்று எமக்கூடாக 1கிலோ பொதி ஜெர்மனிக்கு அனுப்பினார்

நீங்களும் தங்கம் மற்றும் மோட்டார் சைக்கிள் வெல்ல

வாய்ப்புக்களுக்கு: 0768226240

(சி-7707)

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

(சி-740)

ACCA

**K-AIMS BUSINESS SCHOOL**

(சி-7739)

# விண்ணப்பம் கோரல்

ACCA (Association of Chartered Certified Accountant)

March மாத புதிய பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

தொழில்சார் கணக்கியல் கற்கை நெறி ஒன்றை
மிக குறைந்த செலவில் பூர்த்தி செய்திட
இன்றே இணையுங்கள்

**புதிய பிரிவுகள்**

**8th March 2017 புதன் கிழமை 10.00 மணிக்கு ஆரம்பம்**

**Free 3 Months English diploma**

K-AIMS BUSINESS SCHOOL

T.P - 0768 268 206
0773 722 104

No 59 , Point pedro road
Ariyakulam ,
Jaffna

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் பிலிப் யோசெப் செல்வநாயகம்

(ஓய்வு பெற்ற தபால் ஊழியர்)

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 26 - 03 - 1940 |  | 07 - 03 - 2014 |

எம் குடும்ப விருட்சத்திற்கு நீராகி வேராகி
நின்று நிழல் பரப்பி வாழ வாழ் வாங்கு
நாங்கள் வாழ வழியாகவும் காட்டி வைத்து
இன்று பாவிகளாய் எமையிங்கு பதறியழ
வைத்து விட்டு ஆண்டவன் அடி அடைந்து விட்ட
எம் அன்புத் தெய்வத்தினை நினைத்துருகும்

(8114)

4ஆம் வட்டாரம்
முள்ளியவளை

-குடும்பத்தினர்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.